
ஸாக்தம்

ஸ்ரீ காமகலா விலாஸம்.

Sri Chidananda Shashtiabda Poorthy Commemoration Volume.

SRI KAMAKALA VILASA

(With Tamil Commentary)



N. SUBRAMANIA IYER.

ஸ்ரீ குஹாநந்த மண்டலி வெளியீடு—11

॥ श्रीः ॥

॥ ब्रह्मविदाप्नोति परम् ॥

॥ श्रीकामकलाविलासः ॥

ஸ்ரீகாமகலாவிலாஸம்

(மூலமும்)

ஸ்ரீ குஹாநந்த மண்டலியின் ஸ்தாபகர்

பிரஹ்மஸ்ரீ, அருட்கவி, ந. சுப்ரமணிய அய்யர்

அவர்களாலியற்றப்பட்ட

ஆநந்தோல்லாஸம்

என்னும் தமிழ் விருத்தியுரையும்

ஸ்ரீகுஹாநந்த மண்டலீ

சென்னை.

உரிமையுள்ளது] 1942 [ரூ. 1—8—0

PRINTED AT
THE SRI BALAMANORAMA PRESS,
MYLAPORE, MADRAS.

FOREWORD.

KĀMAKALĀVILĀSA of Puṇyānanda is a handbook of the philosophy of the Srividya cult popularly called the Mantra Sastra. What Muktāvali is to the modern school of Naiyayikas, what the Vedānta Paribhāshā is to the Advaitic school of philosophy and what the Sāṅkhya Kārikā is to the Sāṅkhya Darśana, Kāmakalā Vilāsa is to the literature of Mantra Sastra. It may be termed as the Prakarana Grantha of the science of Srividya.

The literature of Srividya abounds both in books dealing with its ritual and its philosophy. The law of the ritual can be traced to *Paraśurama Kalpa Sutra* which is its original source. *Vamakeś-vara Tantra*, also known as *Nityāshodasikārnava*, another ancient authority, deals with both—with the ritual in the first five Viśrāmas roughly running to 400 slokas and with the philosophy in the next three Viśrāmas running to about 400 slokas constituting what is popularly known as *Yogini Hridaya*. *Tantrarāja*, an equally ancient treatise, devotes its first 34 chapters largely to the ritual and the last two chapters exclusively to Vasana and allied topics of philosophy.

Of the two aspects viz., the ritualistic and the philosophical in the light of which Srividya can be viewed, it is the philosophical that is exclusively dealt with in *Kāmakalāvilāsa.* It proceeds on the lines chalked out by the *Pratyabhijñā Sūtras* of the Kashmirian school which serve as the common source of the Śaiva and Śākta cults. The Śaiva aspect was worked upon and elaborated in *Siva Drishti* and other works which followed upon its heels including the *Pratyabhijñā Vimarśinī* of the great Ālamkārika, Abhinavagupta. The Śākta aspect was emphasised and developed in the Chidgagana Chandrikā of Kālidāsa and similar works of later date including the Tantrāloka of Abhinavagupta.

To this latter school of Śākta which emerged from the Pratyabhijñā Sūtras belongs this short and sweet handbook known as Kāmkalā Vilāsa. This book presents in a short compass the whole range of the philosophy of Srividya. Among others it deals with topics like the creation of the Universe in its twofold division of Speech (वाक्) and Object (अर्थ) which emerged from the primitive wish to create, which dawned at the outset of creation on the Supreme Being. The development of Sri Chakra from the Bindu is symbolical of the evolution of the Universe from the primordial seed which manifested itself both as Sukla Bindu and Rakta Bindu which, when coming into mutual contact, is described in

Srividya literature as *Kāmakalā*, the root-cause of all creation. A glance at the contents prefixed to this work will give a succinct view of the several topics dealt with in the book. The learned commentator has given a tentative date to the author of the text by placing him in the middle of the 14th century.

This book has had two editions in Sanskrit printed along with the commentary *Chidvallī* of Naṭanānanda. One is the Madras edition brought out by the late Mr. M. V. Srinivasa Iyer, the other is the North-Indian edition brought out by Arthur Avalon. But an elucidation of the tenets embodied in this work for people knowing Tamil, but not quite conversant with Sanskrit, has always remained a long-felt want.

Not only is this long-felt want satisfied by the present publication, but also, be it noted, the learned author of the Tamil commentary printed herein, Brahmasri Nadiminti Subrahmanya Iyer has struck an entirely new and original method by which the synthesis between the Mantra Sastra and the Vedanta has been deftly brought out. One who reads this commentary can hardly fail to perceive that the bedrock of the science of Srividya is furnished by the philosophy of Vedanta promulgated by Sri Sankara.

Of all the works written by the learned commentator, his commentary on this work which he has appropriately styled as *Anandollāsa*, the Bloom of joy, may be considered to be his master-piece. It draws largely from an original work of his, previously published under the name and style of *Srīvidyā Saparyā Vāsanā* in which he has exhaustively dealt with the philosophical background of all the details of ritual involved in the Devī worship. The light in which the ideas are presented in this learned commentary opens out a new and superior avenue for all reasoning Upāsakas which, we are sure, will stand the test of times. In short Brahmasri N. Subrahmanya Iyer has laid the world of Upāsakas under a deep debt of gratitude for his unique presentation of Srividya on unexceptionable and rational grounds.

It is my fervent wish that the ideas presented in this volume may reach a wider public in due course by a rendering in English.

C. SANKARA RAMA SASTRI

Mylapore, Madras
22nd October, 1942.

श्रीरस्तु ।

அபிநந்தநம்.

किं वा सर्वजगद्धिताय जननी पुंरूपिणी रूपिणी
किं वा शङ्करभास्करार्यविदुषोरेकावतारो भुवि ।
किं वा शिष्यजनस्य पुण्यनिचयः किं भागधेयं नृणां
किं वा सद्गुणराशिरेव तनुभृत् किं वा गुरूणां गुरुः ॥

"உலக நன்மையைநாடி, ஸர்வ அவயவ ஸௌந்தரியான அன்னை அவனியில் புருஷ உருவமெடுத்தனளா? ஸ்ரீசங்கரர் பாஸ்கரர் என்னும் இரண்டு வித்வான்களின் ஒரே அவதாரமா? உபாஸக சிஷ்ய ஜனங்களின் புண்யராசியா? இக்காலத்து மஹாஜனங்களின் பெரும் பாக்கியமா? நற்குணங்களின் ராசியே உருவெடுத்ததா! இதுவரை கிடைத்த நம் குருக்களுக்கெல்லாம் குருவா! இவர்."

இங்ஙனம் போற்றற்குரிய அரும் பெரும் குணம் படைத்த பிரம்மஸ்ரீ அபிநவபாஸ்கர, வரகவி, ந. சுப்ரமண்ய ஆர்யர் அவர்கள் ஸ்ரீபாரததேவியின் அருந்தவப் புதல்வராவர். பித்ருயாணம் அல்லது தூமாதி மார்க்கத்திலுள்ள பல்லாயிரம் ரிஷிகளில் சிலர் அவனியில் அவதரித்து, மங்கும் கலைகளேயும் ஸம்ப்ரதாயங்களேயும், உத்தரணம் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய புண்ய மூர்த்திகளில் இவரும் ஒருவர்.

"மகாபுருஷர்கள் பூங்கொத்துப்போல் எல்லோர் தலை மீதிலுமிருப்பார். அல்லது மரத்தினடியே வீழ்வார்." என்று ஒரு மஹாகவி கூறியவண்ணம், பலர் சிரஸா போற்றிப் புகழத்தக்க கல்வி, ஒழுக்கம், குணம், திறமை முதலியன ஒருமிக்க அமையப்பெற்றவர் இவர். பல ஆண்டு தவமிருந்து ஸத்குருவைப்பெற்று, ஸதுபதேசமெய்தி அதைச் சில ஆண்டு அநுபவித்து, சிஷ்ய மண்டலம் தேடிவர, "சேரவாரும் ஜகத்தீரே" என்னும் தாயுமானவரினுரைபோல் தான்பெற்ற பேரின்பத்தை ஊட்டிப் பெருக்கி வருவதை உய்த்து நோக்கில், ஸ்ரீ வேதவ்யாஸாதிகளைப்போல் தேவர்களால் தூண்டப்பட்ட ஓர் ஆதிகாரிக புருஷரோ என்ற எண்ணம் கிடைப்படுகின்றது.

ஸ்ரீவித்தையும் பிரும்ம வித்தையும் ஒன்றே என்று தேனினுமினிய தென்மொழியில் தெளிவாக எடுத்துக் காட்டிய ஸத்புருஷர் இவரே. இவருக்குக் கல்வியைவிட அருளே அதிகம். அருளைவிட அநுபவம் அதிகம். அதைவிட வாக்குறுதி அதிகம். அதைவிட சாந்தி யதிகம். ஆதலின் இவரைப்போற்றிப் புகழும் சொற்களோ, அல்லது இவருக்குச்செய்யும் எத்தகைய உபசாரமோ அதிகமெனின் அதே அதிகப்ரஸங்கமாகும்.

" ஸச்சிஷ்யன் கிடைக்கவேண்டுமென்று குரு ஓர் ஹோமம் செய்யவேண்டும்" என்று தைத்திரீய உபநிஷத்து கூறுகின்றது.

" ஸத்குருவை அடையாச்சீடர் குருட்டாட்டமாடிக் குழியில் விழுவர்" என்கின்றார் திருமூலர். ஆதலின் உயர் பிறவியளிக்கும் ஸத்குரு கிடைப்பதும், உபதேசித்த வண்ணம் உபதேசத்தை வீணாக்காது பெரும்பயன் பெறும்

ஸத் சிஷ்யன் கிடைப்பதும் அரிதினும் அரிதே! இந்த இருவரது தவப்பயனாலும் ஸத்குருவும் ஸத்சிஷ்யமண்டலமும் ஒன்று சேர்ந்தது பொன்மலர் நாற்றமுடைதாதல் போன்று போற்றற்கேற்றது.

இம்மஹா புருஷனின் அறுபதாம் ஆண்டு விழாவில் ஏனையோரைப்போல் அவருக்குச் சிலைவைப்பது, படமெழுதுவது, பணமுடிப்பளிப்பது, புகழ்மாலை வெளியிடுவது என்னும் இவைகளை விட்டு, இதுகாலை ஸ்ரீ காமகலா விலாஸம் என்னும் உயரிய நூலை வெளியிடுவது உபாஸகர்களின் தனிச்சிறப்பைக்காட்டுகின்றது. இம்மண்டலத்தார் அனைவரும் வேதம் கூறிய நூறாண்டுகளுக்குமேல் இருந்து இவ்வுத்தமரின் ஸஹஸ்ர சந்திர தர்சனமேனும் சதாபிஷேகத்தை, அன்னையின் பெருமையைக் கூறும் மற்றோர் நூலை வெளியிடும் மூலமாக இன்னும் சிறப்பாகக் கொண்டாட ஜகஜ்ஜனனீ எல்லோருக்கும் ஆயுராரோக்கியத்தையும் அன்யோன்னிய அன்பையும் அளிக்கும்படி அன்னையின் அடிபணிந்து வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
அன்பர் அடியன்
ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா

அமரகலாவிலாஸினீ
சாந்தாச்ரமம்
சென்னை.

ஸ்ரீகாமகலாவிலாஸம்.

முன்னுரை.

—:o:—

स तु जयतु महात्मा यो बदर्याश्रमस्थः
सकलभुवनकर्त्र्या प्रेरितः सन्नियत्या ।
श्रुतिविहितसुबोधो दत्तवान् मे त्रिवेण्यां
गलितनिखिलमोहः श्रीगुहानन्दनाथः ॥

நூலின் மஹிமை.

ஸ்ரீகாமகலாவிலாஸமென்னும் இச்சிறந்த நூலானது ஸ்ரீமத்பரமஹம்ஸ மஹாயோகி புண்ணியாநந்தநாதரால் இயற்றப்பட்டதாகும். இவர் காஸ்மீரதேசத்தில் மிகப் பிரஸித்திபெற்று விளங்கியதாகத் தெரிகின்றது.

"ஜீவனது அதிஷ்டானவடிவ கூடஸ்த சேதனமும், பிரபஞ்சாதிஷ்டான பிரஹ்ம சேதனமும், ஜகத்காரண பரமேஸ்வர சேதனமும் ஒன்றே" யென்றுணர்த்தும் அகண்டாகாரவ்ருத்தியின் விலாஸமே காமகலா விலாஸமென்பதன் திரண்டபொருளாம். இத்தகைய அகண்டாகாரவ்ருத்தியை யுண்டுபண்ணும் ஆற்றல் இச்சிறந்த நூலுக்கு உண்டென்னும் விஷயம் இதை யொருமுறை வாசிப்பதனாலேயே தெரியவரும்.

அகண்டஞானத்தினால்தான் அழிவற்ற நித்தியாநந்தம் ஸித்திக்கும். இவ்வுலகில் ஒவ்வொரு ஜீவனும் தனக்குத் துக்கமே வேண்டாமென்றும், அழிவற்ற நித்திய ஸுகமே

வேண்டுமென்றும் கருதுவது மிகப் பிரஸித்தமான விஷயம். இந்நித்திய ஸுகந்தான் மோக்ஷமெனப்படுவது. "यो वै भूमा तत्सुखं" எது வியாபகமான அகண்டஸ்வரூபமோ அதுவே ஸுகம். அதுவே நித்தியாநந்தம். அதுவே மோக்ஷம்.

கண்டமாகும் பேததிருஷ்டியாலேற்படுவனவெல்லாம் நஸ்வரமான விஷயஸுகங்களே யாகும். விஷயஸுகங்கள், நசிக்கும்பொழுது, துக்கத்தையே தருவனவாம். ஆதலின் அவை துக்கவடிவினவே யாகும். துக்கமென்பதே பந்தத்தின் சிறந்த லக்ஷணம். துக்கமே தனக்கு வேண்டாமென்னும் எண்ணமுடைய தன்மையால், ஒவ்வொரு ஜீவனுக்கும் நித்தியஸுகவடிவ மோக்ஷத்திலேயே பிரவ்ருத்தி யேற்படல் வேண்டும்.

நாசத்தோடு கூடிய விஷயஸுகங்களாலேற்படுவது பந்தமெனின், அப்பந்தமும் நாசத்தோடு கூடியதாகவேண்டும். பந்தம் எப்பொழுது நாசமாகுமெனின், "தோன்றும் பேதம் போய்" என்னும் திருடமான நிச்சயம் ஏற்பட்டு "அகண்ட அபேதவடிவ ஒன்றே யுண்மை" யென்று உணரும் காலத்தில், பேதநாட்டத்தினால் ஏற்பட்ட பந்தம் அறவே ஒழிந்துவிடும். அபேத நிச்சயஞானமோ வெனின், தோற்றும் பேதத்தை ஶ்ருதி, குருவாக்கியம், யுக்தி, ஸ்வாநுபவம் முதலியவைகளைக் கொண்டு நுட்பமாய் ஆராய்வதனால் ஏற்படும். இந்த ஆராய்ச்சிக்கு விசாரமென்றுபெயர். இவ்விசாரம் இல்லாமையால் பந்தமும், விசாரத்தினால் மோக்ஷமும் ஏற்படுகின்றனவென்பது,

अविचारकृतो बन्धो विचारान्मोक्षो भवति ।
तस्मात्सदा विचारयेज्जगज्जीवपरमात्मनः ॥

என்னும் ஸ்ருதிப்பிரமாணத்தால் ஸித்திக்கின்றது.

பேதம் தேச-கால-வஸ்து-பரிச்சேதமுடையதும் கற்பிதமுமாகும். அபேதம் தேச-கால-வஸ்து-பரிச்சேத ரஹித அநந்தஸ்வரூபமானதும் உண்மையுமாகும்.

பேத நாட்டத்திற்கு விஷயமான ஜகத்ஜீவ பரமேஸ்வரஸ்வரூபங்கள் கற்பனையும் உண்மையும் கலந்து தோன்றுவனவாகும்.

அகண்ட ஸச்சிதாநந்தஸ்வரூபத்தில் நாமரூப உபாதிகளோடுகூடிய ஜீவஜகத்பரபாவங்கள் மித்தையாம். மித்தையாய்த் தோன்றும் ஜகத்ஜீவ பரமென்னும் பேத அத்தியாஸம் ஸச்சிதாநந்தவடிவ அகண்ட அதிஷ்டான ஞானத்தால் ஒழியுமென்பது வேதாந்தஸித்தாந்தமாகும். நாமரூப அத்தியாஸத்தின் நீக்கமும், ஸச்சிதாநந்த அதிஷ்டானத்தின் பிராப்தியும் அகண்டாகாரவ்ருத்தியாலேயே ஏற்படுவனவாகும். ஆகவே பந்தஸ்வரூப துக்க நிவ்ருத்திக்கும், மோக்ஷவடிவ நித்தியாநந்த பிராப்திக்கும், அஸாதாரண அந்தரங்க ஸாதனமான அகண்டாகாரவ்ருத்தியையுண்டுபண்ணும் சக்தி இந்நூலுக்குள்ளதென்று முன் கூறப்பட்டுள்ளது. ஆதலின் இந்நூல் ஒவ்வொரு ஜீவனுக்கும் அத்தியாவஶ்யமேயாகும்.

कामकला — सोऽकामयत என்னும் ஜகத் சிருஷ்டியின் இச்சையோடுகூடிய ஸர்வகாரண பரப்பிரஹ்மமே காமகலையாகும்.

போக்தாவாகும் ஜீவனும், போக்கியமாகும் பிரபஞ்சமும், பிரேரகனும் நியந்தாவுமான பரமேஶ்வரனும் காமகலையின் விலாஸமேயாகும்.

ஏகமாயும், அத்விதீயமாயும், அஸங்க சின்மாத்திர மாயுமுள்ள பரப்பிரஹ்மம் எங்ஙனம் ஜகத்காரண காமகலாஸ்வரூபம் எய்திற்றென்னும் விஷயம் இந்நூலின் ஆரம்பத்தில் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் காமகலாஸ்வரூபத்தை விமர்சிக்கும் பாகத்திற்குத் துரீய பாதமென்று பெயர்.

இந்நூல் துரீயபாதம், அவித்தியாபாதம், வித்தியாபாதம், ஆநந்தபாதமென்னும் நான்கு பாதங்களோடுகூடி விளங்குகின்றது. இத்தகைய விபாகம் நூலாசிரியரால் செய்யப் படவில்லை. விஷயத்தின் போக்கைக் கொண்டு இத்தகைய விபாகம் செய்யப்பட்டது.

அவித்யாபாதத்தில் போக்கியரூப ஜடப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கிரமம் கூறப்பட்டுள்ளது. பிரபஞ்சம் சப்தமயம், அர்த்தமயமென இருவகைத்து. சப்தஸ்வரூபமான மாத்ருகைகள் பரா, பஶ்யந்தீ, மத்யமை, வைகரியென நான்கு வகைப்படும். இவைகளை வாக்குக்களென்றும் கூறப்படும். சப்தாத்மக பூதலிபிகளிலிருந்து பஞ்ச பூதங்கள் வடிவ அர்த்தப்பிரபஞ்சம் தோன்றிற்று.

அணுக்களென்னும் நாநா ஜீவர்களின் சரீரமென்னும் பிண்டங்களும், பதினான்கு லோகங்களும், பிரஹ்மாண்டமும் பாஞ்சபௌதிகமேயாகும். ஜடஸ்வபாவமாயுள்ள இவையாவும் அத்விதீய ஸச்சிதாநந்த பரப்பிரஹ்மத்தில் அத்தியஸ்தமாய்த் தோன்றுகின்றன. இதுதான் சிருஷ்டிக்கிரமத்தின் தத்துவம்.

வித்தியாபாதத்தில், அத்விதீயப் பிரஹ்மத்தில் அத்தியஸ்தமாய்த் தோன்றும் நாமரூபப் பிரபஞ்சத்தை, ஸச்சிதாநந்த அகண்டவ்ருத்தியால் நீக்கி, அதிஷ்டானவடிவ

பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபத்தை யுணரும் வகை நன்கு கூறப்பட்டுள்ளது. இது,

ब्रह्म सत्यं जगन्मिथ्या जीवो ब्रह्मैव नापरः। सर्वं खल्विदं ब्रह्म नेह नानास्ति किञ्चन। द्वितीयाद्वै भयं भवति। तत्त्वमसि॥

என்னும் அகண்டஞான போதகவாக்கியங்களால் ஏற்படுவதாகும். ஏகத்துவப் பிரதிபாதகங்களாகும் இம் மஹா வாக்கியங்கள் வித்தியாஸ்வரூபமானவை.

அத்தியாத்மவித்தை, ராஜவித்தை, பிரஹ்மவித்தை, ஸ்ரீவித்தை, சித்வித்தை யென்பன பரியாய நாமங்களாம். ஸ்ரீவித்தை பஞ்சதசாக்ஷரீ வடிவினது. இதைக் குருமுகமாய் அறிந்து, மனன நிதித்தியாஸனங்களைச்செய்யின் ஸ்வரூப ஸாக்ஷாத்காரமேற்படுமென்பது பரமஸித்தாந்தமாகும். இந்த பாதத்தின் வியாக்கியானத்தில் புவனேஸ்வரி, பாலை, பஞ்சதசி, நவாக்ஷரீ, மஹாஷோடசீ, காயத்திரீ முதலிய மஹாவித்தைகளின் உத்தாரமும் அர்த்தவிசாரமும் செய்யப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இவ்வெல்லாவித்தைகளும் அபேதஞானப் பிரதிபாதகங்களேயாகும்.

ஆகவே, பேதமாகும் அவித்தையை யொழித்து அபேத தரிசனவடிவ தத்துவ ஞானத்தை யுண்டுபண்ணுவதே வித்தியாபாதத்தின் நோக்கமாகும்.

ஆநந்தபாதத்தில் அண்டபிண்ட வடிவ ஸ்ரீசக்கிரத்தின் ஆவிர்ப்பாவம் வெகு அழகாய் விமர்சிக்கப்பட்டுள்ளது. ஆநந்தமானது ஸமாதி வ்ருத்தியில் உணராமல் உணர்வதாகும். ஸமாதி இரண்டுவகை. அவை பாஹ்யாநுவித்தம், ஆந்தராநுவித்தம் என்பனவாம். இவை முறையே அண்ட பிண்டங்களின் விசாரத்தாலேற்படுவன

வாகும். ஜகததிஷ்டான சேதனத்தையும், பஞ்சகோச விலக்ஷணமாயும் அவஸ்தாத்திரய ஸாக்ஷியாயுமுள்ள ஜீவாதிஷ்டான கூடஸ்த சேதனத்தையும், தத்பதலக்ஷ்யார்த்த பரமேஶ்வராதிஷ்டான பிரஹ்மசேதனத்தையும் ஐக்கியப்படுத்தினல் பூமாஸ்வரூப நித்தியாநந்தம் ஸ்புரிக்கும். இத்தகைய அகண்டாநந்தஸ்புரணமே ஆநந்த பாதத்தின் முக்கிய விஷயமாம்

ஸர்வாநந்தமய பிந்துசக்கிரத்தில் கூறப்படும் சிவசக்தி ஸாமரஸ்யமே இந்த அகண்டாநந்தமாம்.

பஞ்சதசாக்ஷரீ வித்தையின் அதிஷ்டாத்ரிரி அஹம் பதலக்ஷ்யார்த்தப் பிரத்தியகாத்மாவே யென்றும், தத்பத லக்ஷ்ய நிருபாதிக பிரஹ்மமே ஸ்ரீகாமேஶ்வரரென்றும் அறிதல் அத்தியாவசியம்.

திரிகோணம் முதல் பூபுரம் வரையுள்ள சக்கிரங்களெல்லாம் சப்தப் பிரபஞ்சவடிவமாகவும், அர்த்தப் பிரபஞ்சவடிமாகவும் விளங்குகின்றன.

ஒவ்வொரு சக்கிரத்திலுள்ள ஆவரணதேவதைகள் யாவும் மனோவ்ருத்திகளின் வடிவமாய் விளங்குகின்றன வென்பது பரமாஹஸ்யமாகும். ஸ்ரீசக்கிரம், ஸ்ரீவித்தை, ஆவரணதேவதைகள், பூஜை முதலியவற்றின் தத்துவத்தை நன்கு அறியவிருப்பமுடையவர்கள் ஸ்ரீகுஹாநந்தமண்டலியில் பிரசுரித்துள்ள ஸ்ரீவித்யா ஸபர்யாவாஸனையென்னும் நூலைப் பார்ப்பது அத்தியாவசியம்.

பரதேவதையின் விமர்ஶ சரணத்திலிருந்து ஆவரண தேவதைகளும், பிரகாசசரணத்திலிருந்து குருமண்டலமும் தோன்றினரென்பது நுட்பமாய் அறியத்தக்க விஷயமாகும். அன்றியும், இதில், அவிச்சின்ன (தொடர்பு

கெடாத) குருபரம்பராக்கிரமம் மஹோட்டியான துரீய பீடமாகும் பிந்துவில் விளங்கும் ஸ்ரீசர்யாநந்தநாதர் முதல் உபாஸகனது குருவரையில் விமர்சிக்கப்பட்டுள்ளது கூர்மையாயுணரத்தக்கது. இவ்விஷயம் இந்நூலிலுள்ள சிறந்த விஷயங்களில் ஒன்றாகும்.

இது ஐம்பத்தைந்து ஆர்யாவ்ருத்தங்களால் ஆக்கப்பட்டுள்ள, மிகவும் பழைமையான ஸ்ரீவித்தியாப்பிரகரணம்.

நூலாசிரியரின் காலம்.

காஸ்மீரதேசத்தில் மிகப்பிரவலித்திபெற்று விளங்கிய ஸ்ரீமத் பரமஹம்ஸ மஹாயோகி புண்ணியாநந்தநாதர் என்னும் இந்நூலினாசிரியர் ஸகலவேத, வேதாந்த, நிகம, ஆகமங்களின் யதார்த்த தத்துவத்தை நன்குணர்ந்தவர்; ஸமயாசாரதத்பரர். ஸ்ரீபராபட்டாரிகையாகும், அஹம் பதலக்ஷ்யார்த்தத்தை யபரோக்ஷமாய் அறிந்தவர். இவர் முமுக்ஷுக்களாகிய ஸாதகர்களிடத்திலுள்ள பரமகருணையால் தமது ஸ்வாநுபவத்தை இந்நூலின் மூலமாய் வெளியிட்டுள்ளார்.

இவரது காலம் இதுதானென்று நிர்ணயிப்பதற்குத் தக்கவெளிப்படையான ஆதாரங்கள் இல்லையாயினும், ஒருவாறு ஊஹித்தற்குத் தேவையான இரண்டொரு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு ஒருவாறு இந்நூலாசிரியரின் காலத்தை யூகிக்கலாமெனத் தோன்றுகின்றது.

இவருடைய சிஷ்யர் ஸ்ரீபரமஹம்ஸ அம்ருதாநந்த நாதராகும். இவர் வாமகேஸ்வரதந்த்ரத்தின் ஒருபாகமாகிய நித்தியாஷோடசிகார்ணவத்தின் கடைசிப்பாக

மாகிய (6, 7, 8, விஶ்ராமங்கள்) யோகினீஹ்ருதயத்திற்குத் தீபிகையென்னும் பெயருள்ள ஒரு சிறந்த வியாக்கியானம் இயற்றியுள்ளார். இது மிகவும் பழைமையானது. ஸ்ரீபாஸ்கர ராயர் இயற்றிய ஸேதுபந்தமென்னும் வியாக்கியானத்தில் "தீபிகை"யைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கின்றனர். ஸ்ரீ அம்ருதாநந்தரியற்றிய தீபிகா வியாக்கியானம் வெகு பழைமையான (பிராசீனமான) தென்று பாஸ்கரர் கூறியிருக்கின்றனர். இதனுல் பதினேழாம் நூற்றுண்டின் கடைசியிலிருந்த பாஸ்கரராயருக்கும் நெடுநாள் முன்னர் இவ்வாசிரியர் இருந்திருக்கவேண்டும்.

அன்றியும், ஸ்ரீ லகுஸ்துதிக்கு வியாக்கியானம் செய்தவர் ஸ்ரீ ராகவாநந்தராவர். இவரது குரு ஸ்ரீகிருஷ்ணநந்த நாதரென்பவராவர்; இவரும் ஸ்ரீரகுநாத சிரோமணி, ஸ்ரீசைதன்னிய தேவர் முதலியவர்களும் ஸமகாலத்தவர். இவர்களின் காலம் 1460-1560 A. D. என்று ஏற்படுகின்றது. ஸ்ரீ கிருஷ்ணநந்தரும் ஸ்ரீ அம்ருதாநந்தரும் ஸமகாலத்தவரென்பது சில ஆராய்ச்சியாளரின் அபிப்பிராயம். ஆகவே கி-பி. 1460 என்பது ஸ்ரீ புண்ணியாநந்த நாதரது காலமாயிருக்கலாமென்று மேற்கண்ட ஆதாரங்களால் ஒருவாறு தீர்மானிக்கலாமென்று தோன்றுகின்றது.

யோகினீஹ்ருதயத்தின் தீபிகா வியாக்யானத்தின் ஆங்கில முன்னுரையில்,

In the Catalogus Catalogorum (Vol. I. P. 29) Aufrecht speaks of two more works as coming from his pen, viz., Ajñānabhedinīṭikā and Tattvadīpana (in Vedanta). But it is very doubtful if the author of these latter Vedanta works was identical with the great Kashmir teacher of the same

name. Weber's assertion (P. 361) referred to by Aufrecht, that Amṛtānanda corrected Krishnānanda's Tantrasāra is equally inapplicable to our author for the simple reason that Krishnānanda who was a contemporary of Raghunatha Siromani, Sree Chaitanya Deva and Raghunandana of Nadia (1460--1560 A.D.) was a later writer than the author of the Dīpikā.

என்று, ஸ்ரீகோபிநாத் கவிராஜ், M. A. கூறியிருக்கிருர். இதன்படி கிருஷ்ணுநந்த நாதர் அம்ருதாநந்த நாதரைவிட வெகுகாலம் பிற்பட்டவரென்றேற்படுகின்றது. இவரது அபிப்பிராயத்தின்படி கிருஷ்ணுநந்த நாதரைவிட ஒரு நூற்ருண்டுக்குமுன் அம்ருதாநந்தநாதர் இருந்திருப்பாரென்று ஊஹிக்கின், அவரது காலம் சற்றேறக்குறைய கி. பி. 1400 என்றேற்படலாம். அவரது குருவாகிய புண்ணியாநந்த நாதரது காலம் சுமார் 50 வருடங்கள் முன் இருக்கலாம். ஆகவே கி. பி. 1350 என்பது ஒருவாறு பொருந்தும். எனவே, இன்றைக்குச் சற்றேறக்குறைய 600 வருஷங்களுக்கு முன்னர் இந்நூலாசிரியர் இருந்திருக்கலாமெனத் துணிந்து கூறுதற்குக் கூடும்.

இந்நூலின் வியாக்கியானங்கள்.

ஸ்ரீகாமகலா விலாஸத்திற்கு ஸ்ரீநடநாநந்த நாதரால் இயற்றப்பட்ட சித்வல்லியென்னும் பெயருள்ள ஒரு வடமொழி வியாக்கியானந்தான் தற்காலம் பிரஸித்தமாயுள்ளது. இவ்வியாக்கியானம், காஸ்மீரம், சென்னை, கார்வேட்டிநகரம் என்னும் மூன்றிடங்களிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் சிற்சிலவிடங்களில் வியக்கியானத்தில் மாறு

பட்டுள்ளன. வியாக்கியாதா ஸ்ரீநடநாநந்தர் எங்கிருந்தா ரென்றும் எப்பொழுதிருந்தாரென்றும் புலப்படவில்லை.

தெலுங்கு பாஷையில் இதற்கு ரஹஸ்யார்த்த போதினியென்னும் மிக விரிவானவுரை விஜயநகரம் ஸிம்ஹம்பட்ல. ராமமூர்த்தி சாஸ்திரியரால் இயற்றப்பட்டு அதுவும் தற்காலத்தில் உலவுகின்றது.

மேற் கூறப்பட்ட உரை நூல்கள்யாவும் ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸம்பூர்ண பாண்டித்தியம் இல்லாதவர்களும் தமிழ்ப்பாஷையில் பரிசயமுள்ளவர்களுமான ஸாதக முமுக்ஷுக்களுக்குப் பயன்படாததைக் கருதி மேற்கூறிய உரைகளைத் தழுவியும், அவற்றிலில்லாத அத்தியாவசியமான பல விஷயங்களை உபநிஷத்துக்கள், அத்வைதப் பிரகரணங்கள், வைதிக தந்த்ரங்கள் முதலியவற்றினின்றும் ஸங்கிரகித்து ஆநந்தோல்லாஸ மென்னும் விருத்தியுரை இயற்றப்பட்டுள்ளது. இதிலுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சென்னை ஸ்ரீகுஹாநந்த பிரஹ்ம வித்யா விமர்சினீ மண்டலியில் உபந்நியஸிக்கப்பட்டனவே யாகும்.

இவ்வுரையை அச்சிட்டுப் பிரசுரிப்பது அத்தியாவசியமெனப் பல ஆத்ம நண்பர்கள் வற்புறுத்திக் கூறியதால், காகிதம், மை முதலிய ஸாதனங்கள் பணம் தந்தாலும், கிடைக்காத இக்காலத்தில் அச்சிட்டு வெளியிடத் துணிந்தோம்.

இத்துணிவுக்குப் பரதேவதையின் பரிபூர்ண கடாக்ஷம் ஏற்பட்டது. எங்ஙனமெனின், ஒரு நாள் B. G. Paul கம்பெனியின் சொந்தக்காரரான பிரஹ்மஸ்ரீ வாஜபேயம் பாலஸுப்பிரஹ்மண்ய அய்யரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவரிடத்தில் காகிதத்தின் ஆவச்யகதையைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. உடனே அவர்

ஒரு பேல் (14 ரீம்) காகிதம் தருவதாக வாக்குறுதி கூறி, கூறியபடியே தந்தும் விட்டனர். ஆதலின் இந்நூல் அச்சிட்டு வெளிவருவதற்கு அவரே முதற்காரணமென்று கூறவேண்டியிருக்கிறது. அவர் செய்த நன்றி என்ஞான்றும் மறக்கற்பாலதன்று. பரதேவதையவருக்கு நோயற்ற நெடுவாழ்வும், குறையற்ற செல்வத்தோடு மற்றெல்லா நலங்களுமுண்டாகுமாறு கருணை புரிவாளாக.

இதனை யச்சிடுங்கால் வெகு ஸாவதானத்தோடு பிழைகளைப் பரிசோதித்துத் தமது சொந்தப் பிரசுரம் போல் பாவித்து எல்லாச் சிறப்புக்களும் நன்கமையும்படி அச்சிட்டுத்தந்த சென்னை, மயிலாப்பூர், ஸ்ரீபாலமனோரமா அச்சியந்திரசாலையின் சொந்தக்காரராகிய பிரஹ்மஸ்ரீ சங்கரராம சாஸ்திரிகள் M. A. B. L. அவர்கட்கு என்ஞான்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவர்செய்த உதவி வையத்தினும் பெரிது.

மற்றும், இவ்வெளியீட்டின் ஸம்பந்தமாய்ப் பலர் அடியேனைத் தூண்டி உற்சாகப்படுத்தியும் சரீரசிரமமெடுத்துக்கொண்டும் முயன்றுள்ளார்கள். அவர்கட்கெல்லாம் பரதேவதை எல்லா நலங்களுமுண்டாகும்படி அநுக்கிரஹிப்பாளாக.

இவ்வரிய காரியத்தில் அடியேனை யீடுபடுத்திய ஸத்குரு ஸ்ரீ குஹாநந்தநாதரது அடியிணைகள் நன்கு விளங்குவதாக. சிவம்.

ஸ்ரீகுஹாநந்தமண்டலீ
சென்னை.
19-10-42.

இங்ஙனம், விதேயன்.
ரு. சுப்ரஹ்மண்ய அய்யர்

விஷயஸூசிகை.

॥ श्रीः ॥

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ।

श्रीमहागणपतये नमः । श्रीपराभट्टारिकायै नमः ।

॥ श्रीकामकलाविलासः ॥

मङ्गळाचरणम् ॥

वन्दे तन्मिथुनं दिव्यमाद्यमानन्दचिद्घनम् ।
अनुत्तरं परं ज्योतिरिति यद्भाव्यते बुधैः ॥
दीव्यन्तौ तमसः पारे स्त्रीपुंसौ व्यक्तविग्रहौ ।
जगतः पितरावाद्यावुपासे दिव्यदम्पती ॥
त्रयीसीमन्तसिन्दूररञ्जितश्रीपदाम्बुजौ ।
परब्रह्ममहामञ्चे निविष्टौ भावये शिवौ ॥
नमस्तेजस्त्रयीसर्गविश्रान्तस्थानशक्तये ।
तदुत्तीर्णोर्ध्वविश्रान्तिस्फूर्तये गुरुमूर्तये ॥

सकलभुवनोदयस्थिति-
लयमयलीलाविनोदनोद्युक्तः ।
अन्तर्लीनविमर्शो
भाति (पातु) महेशः प्रकाशमात्रतनुः ॥ १ ॥

ஸ்ரீகாமகலாவிலாஸம்.

ஆநந்தோல்லாஸம்

(என்னும் விருத்தியுரை)

(பதவுரை) सकल = ஸமஸ்தமான, भुवन = உலகங்களி னுடைய, उदयस्थितिलयमय = சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமய மான, लीला = யாதொரு பிரயத்தனமும் வருத்தமுமின்றி அநாயாஸமாய்ச் செய்யத்தக்க காரியமாகும், विनोदन = விளை யாட்டைக் கண்டுகளிப்பதற்கு, उद्युक्तः = தயாராய் இருப்ப வரும், अन्तर्लीनविमर्शः = தனக்குள் அடங்கிய விமர்ச சக்தி யை யுடையவரும், प्रकाशमात्रतनुः = பிரகாசமாத்திரத்தையே சரீரமாகவுடையவருமான, महेशः = ஸர்வக்ஞத்துவாதி ஈஶ்வர சக்திகளையுடைய பரமாத்மாவானவர், भाति = ஸ்வ யம் பிரகாசமாய் விளங்குகின்றனர்.

குறிப்பு:— அச்சிடப்பட்டு தற்காலம் விளங்கும் புஸ்தகங்களில் "पातु" என்றுதான் இருக்கின்றது. पातु = ரக்ஷிக்கட்டும் என்று வியாக்கியானம் செய்துள்ளது.

சங்கை: — அவித்தியாப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப் படாமலேயிருக்கையில் முமுக்ஷுவாகிய ஜீவனது அபாவ த்தினால் पातु என்னும் கிரியைக்குக் கர்மாபாவம் (செயப்படு பொருளின் இன்மை) ஏற்படுகின்றது. ஆதலின் भाति யென்னும் பதமே ஸமஞ்ஜஸமாயிருக்கின்றது. மற்றொரு பாடத்தின்படி "जयति" என்று இருக்கின்றது. இதன்படி "महेशः जयति" பரமாத்மா மிகச்சிறப்பாய் விளங்குகின்ற னர் என்றேற்படுகின்றது.

(விசேஷவுரை) ஸகல உபநிஷத்துக்களின் தாத்பரி யத்தையும், ஸகல நிகம ஆகமங்களின் ரஹஸ்யங்களையும்

நன்குணர்ந்து, தனது நிஜஸ்வரூபத்தைச் சந்தேஹ விபரீதங்களற நன்குணர்ந்தவரும், தான்பெற்ற வொரு மஹாபலத்தை யுலகத்தில் ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்னும் பரம கருணையுடையவருமாகிய ஸ்ரீபுண்ணியாநந்த முனீந்திரர் ஆத்மப்பிரஹ்மைக்கிய பரமஸாதனமாகிய பிரஹ்மவித்தையென்னும் ஸ்ரீவித்தையையும், ஸ்ரீசக்கிரத்தையும் தக்க அதிகாரிகள் ஸந்தேக விபரீதங்களற நன்குணருமாறு விமர்சிக்க எண்ணங்கொண்டு சக்கிர வித்தைகளின் அதிஷ்டானஸ்வரூபமாகிய ஸர்வகாரண காமகலா ஸ்வரூபத்தை இதுமுதல் எட்டு ஸ்லோகங்களால் நிரூபிக்கின்றனர்.

இந்த எட்டு ஸ்லோகங்களும் துரீயபாதமெனப்படும்.

ஸ்ரீகாமகலா விலாஸமாகும் இச்சிறந்த சாஸ்திரமானது துரீயபாதம், அவித்தியாபாதம், வித்யாபாதம், ஆநந்தபாதமென நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டு விளங்குகின்றது.

துரீயபாதத்தில் வித்தியாப்பிரபஞ்ச காரணமான காம காமேஸ்வரர்களின் ஸ்வரூபம் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

பிரபஞ்சம் இரண்டு வகைப்படும். அவித்தியாப்பிரபஞ்சம் ஒன்று; வித்தியாப்பிரபஞ்சம் மற்றொன்று. துவைத வ்ருத்தியோடு கூடிவிளங்குவது அவித்தியாப்பிரபஞ்சமும், அகண்டாகாரவ்ருத்தியோடு கூடி விளங்குவது வித்தியாப்பிரபஞ்சமுமாகும்.

அவித்தியாபாதத்தில், சித்சக்தியை ஆச்ரயித்துத் தோன்றும் கற்பித ஜடசக்தியாகும் மாயாவிசிஷ்ட சேதனத்தை அவித்தியாப்பிரபஞ்சத்திற்குக் காரணமாகக்

கூறப்பட்டுள்ளது. இது அபராகாமகலையெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கு நாதம் அல்லது சப்தப் பிரஹ்மமென்று பெயர். இந்த சப்தப்பிரஹ்மத்திலிருந்து நாமாத்மக சப்த சிருஷ்டியும், அதிலிருந்து ரூபாத்மக அர்த்த சிருஷ்டியும் எற்பட்டன. நாமரூபாத்மக அவித்தியாப் பிரபஞ்சத்தை வித்தையாகும் ஆத்மப் பிரஹ்மைக்கிய ஞானத்தால் நிஷேதித்து நித்தியாநந்தத்தையடையும் விதம் வித்தியாபாதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆநந்தபாதத்தில் ஆந்தரானுவித்தம், பாஹ்யானுவித்தம் எனக் கூறப்படும் இருவித ஸமாதிகளின் ஸாதனங்கள் நன்கு கூறப்பட்டுள்ளன. பாஹ்யாப்பியந்திரங்கள் இரண்டையும் ஸ்ரீசக்கிரமாக நிரூபித்து, ஆவரண தேவதைகளின் தத்துவத்தையும் விமர்சம் செய்து, பிண்டத்தில் பஞ்சகோசவிலக்ஷணமாய் விளங்கும் (துவம்) அஹம் பதலக்ஷ்யார்த்தப் பிரத்யகாத்மவடிவ காமேஶ்வரியை அண்டத்தில் நாமரூபங்களுக்கு அதிஷ்டான தத்பத லக்ஷ்யார்த்த நிருபாதிக ஸம்வித்ஸ்வரூப காமேஶ்வரரோடு ஐக்கியம் செய்து ஆநந்தகனமாய் விளங்கும் நிலை ஆநந்தபாதத்தின் விஷயமாகும்.

என்றும் அழியாத நித்தியாநந்தத்தைப் பெற விரும்புகின்றவர் தமது உண்மையான (ஆத்ம) ஸ்வரூபத்தை யறிதல் வேண்டும். "तरति शोकमात्मवित्" இது, தன்னைத்தான் அறிதலாகும். "ब्रह्मविद्ब्रह्मैव भवति ; ब्रह्मविदाप्नोति परम्" என்னும் பிரமாணங்களால், பிரஹ்மாண்டத்தின் அதிஷ்டான ஸ்வரூபத்தை நன்குணர்ந்து அதனோடு தனது ஸ்வரூபத்தை ஐக்கியம் செய்வதுதான் ஸகலவேதாந்தங்களின் பரம ஸித்தாந்தமாகும்.

இந்த பரமஸித்தாந்தத்தைக் கரதலாமலகம் போல் நிரூபிப்பதற்கே ஸ்ரீகாமகலாவிலாஸமென்னும் இக்கிரந்தம் ஆரம்பிக்கப்படுகின்றது. "காமகலாவிலாஸம்" என்பதன் அக்ஷரார்த்தமாவது:—क्+अ+अ=का; म्+अ=म; क्+अ=क; ल्+अ+अ=ला.

क्=மாயை; अ=சேதனம்; क=மாயாவிசிஷ்ட சேதனம்; अ=சுத்த சேதனம். म्=அவித்தை; अ=சேதனம்; म=அவித்தியாவிசிஷ்ட சேதனன்; ஜீவன்.

क्=ஆகாசம்; ल्=பிரிதிவீ; कल=ஆகாசாதி பஞ்ச பூதங்களின் உபஹித சேதனம். अ= சுத்த சேதனம். "பிரபஞ்சாதிஷ்டான சேதனமும், ஜகத்காரண பரமேச்வர சேதனமும், ஜீவாதிஷ்டான கூடஸ்த சேதனமும் ஒன்றே யென்னும் அகண்டாகாரவ்ருத்தியின் விலாஸமே காமகலா விலாஸ" மென்பதன் திரண்ட பொருளாம்.

विशेषेण लसनं विलासः= ஜீவப்பிரஹ்மைக்கிய அபரோக்ஷ ஞானத்தினல் அநுபவிக்கப்படும் ஆநந்தமே விலாஸ மாகும்.

இனி முதலாவது ஶ்லோகத்தின் விரிவுரை கூறப்படுகின்றது.

"प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं" என்று கூறும் உபநிஷத்தின் அர்த்தந்தான் இந்த முதல் ஶ்லோகத்தில் நிரூபிக்கப்படுகின்றது. அது வருமாறு:—

सकलभुवनोदयस्थितिलयमयलीलाविनोदनोद्युक्तः = என்பதனல் சாந்தஸ்வரூபத்தன்மையும், अन्तर्लीनविमर्शः என்பதனல் பிரபஞ்சோபசமத்தன்மையும், महेशः என்பதனல் சிவஸ்வரூபமும், प्रकाशमात्रतनुः என்பதனல் அத்வைதஸ்வரூபமும் அறிவிக்கப்படுகின்றன.

இங்ஙனம் கூறப்பட்ட லக்ஷணங்களோடு கூடிய துரீய ஸ்வரூபமானது ஆத்மாபின்னமாய் அறியத்தக்கதாகும். இதுதான் பிரஹ்மஸ்வரூபம்.

நூலாசிரியர் இந்த முதல் ஸ்லோகத்தில் "பிரஹ்மம் விளங்குகின்றது" என்று கூறி மங்கலம் இயற்றுகின்றனர்.

மங்கலம் மூன்றுவகை: அவை வஸ்து நிர்த்தேசம், ஆசீர்வாதம், நமஸ்காரமென்பனவாம். இவற்றுள், இது வஸ்து நிர்த்தேசரூப மங்கலமாகும்.

महेशः — தேசகால வஸ்து பரிச்சேதமற்றவராயும், ஸர்வநியந்தாவாயுமுள்ள பரமாத்மா.

योवेदादौ स्वरः प्रोक्तो वेदान्ते च प्रतिष्ठितः ।
तस्य प्रकृतिलीनस्य यः परः स महेश्वरः ॥

(தா–ம்) "வேதத்தின் ஆதியாகும் பிரணவமானது யாருக்கு வாசகமோ (तस्य वाचकः प्रणवः), யார் வேதாந்தமாகும் உபநிஷத்துக்களில் பிரதிபாதிக்கப் படுபவரோ, யார் பிரணவோபாதிகள் லயிக்கும் பிரக்ருதிக்கும் அதீதமானவரோ, அவரே மஹேஸ்வராவர்" என்னும் ஸ்ருதியின் பொருள் இங்கே அறியத்தக்கது.

प्रकाशमात्रतनुः ஸ்வயம்பிரகாசமே சரீரமாயுடையவர்; இதற்குப்பிரமாணங்களாவன :—

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥

(தா-ம்) ஸூர்யன், சந்திரன், மின்னல், அக்கினி முதலிய பௌதிகப்பிரகாச வஸ்துக்கள் ஸ்வயம் பிரகாசவடிவ பிரஹ்மத்தின்கண் பிரகாசிக்கா: பிரஹ்மம் இதர பிரகாசத்தை யபேக்ஷிக்காமல் தானே விளங்கிக்கொண்டு மற்ற ஜடப்பொருள்களையெல்லாம் பிரகாசிக்கச் செய்கின்றது. அதனால் அது ज्योतिषां ज्योतिः என்று கூறப்படுகின்றது. "आकाशशरीरं ब्रह्म" அகண்டமாய் எங்கும் விளங்கும் பிரகாசத்திற்கு ஆகாசமென்று பெயர். இந்த ஆகாசத்தைச் சரீரமாயுடையது பிரஹ்மமாகும்.

अन्तर्लीनविमर्शः; विमृश्यत इति विमर्शः = प्रपञ्चः; अन्तर्लीनः अन्तर्गतो यस्य सः தனக்குள் லயமாயுள்ள பிரபஞ்சத்தையுடையவன்; அல்லது, தனக்குள் அடங்கிய விமர்ச சக்தியையுடையவன்.

परिपूर्णोऽहम्; असङ्गोऽहम्; आनन्दघनोऽहम्; सच्चिदानन्दोऽहम्; ब्रह्मैवाहम् என்பன விமர்ஶஸ்வரூபமாகும். ஆத்மப்பிரஹ்மைக்கிய அபரோக்ஷ ஞானமேற்படும் வரையில் தான், இந்த விமர்சவடிவ அநுஸந்தான அநுபூதிகளுக்குப் பிரயோஜனமுண்டு; ஏற்பட்டபிறகு, இவ்வகண்டவ்ருத்திக்கு யாதொரு பயனுமின்மையின், அது மஹாபிரகாசவடிவ பிரஹ்மத்தில் லீனமாகின்றது. இது வித்தியாப் பிரபஞ்சமாகும்.

இச்சிக்கிறேன், அறிகிறேன், செய்கிறேன், என்று இதமாகாரப் பிரபஞ்சத்தோடு தன்னைச் சேர்த்துக் கொண்டு விவகரிப்பன யாவும் அவித்தியாப் பிரபஞ்ச விமர்சமாம். இந்த அவித்தியாப் பிரபஞ்சவிமர்சம், தினப் பிரளயமாகும் ஸுஷுப்தியிலும், மஹாப் பிரளயத்

திலும் முறையே அதிஷ்டானவடிவ கூடஸ்த பிரஹ்மங்களில் லீனமாயிருக்கின்றது.

यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद्ब्रह्मेति ॥

என்னும் ஶ்ருதி, ஜகத்தின் ஜன்ம ஸ்திதி லயங்களின் அதிஷ்டானஸ்வரூபத்தை நிர்ணயிக்கின்றது.

सकलभुवनोदयस्थितिलयमयलीलाविनोदनोद्युक्तः ஸகல பிரபஞ்சங்களின் சிருஷ்டி ஸ்திதி லயங்களும், உபலக்ஷணமாய்த் திரோபாவ அநுக்கிரஹங்களுமாகிய பஞ்சகிருத்தியங்களின் மயமான லீலைகளைச்செய்து சந்தோஷிக்கத் தயாராயிருப்பவர். இவர் பரமாத்மா.

பஞ்சகிருத்தியமய லீலை பரமாத்ம நிஷ்டமானது. பஞ்சகிருத்தியங்கள் பிரபஞ்சநிஷ்டம். இங்கே மயட் பிரத்யயத்திற்குப் பிராசுர்யார்த்தங்கூறுதல் தகுதியாகும். **अन्नमयो यज्ञः ; मृण्मयो हि घटः** என்பனவற்றைப்போல.

"इच्छामात्रं प्रभोः सृष्टिः । बहु स्यां प्रजायेयेति । तदात्मानं स्वयमकुरुत ॥

चिदात्मैव हि देवोऽन्तःस्थितमिच्छावशाद्बहिः ।
योगीव निरुपादानमर्थजातं प्रकाशयेत् ॥

(தா—ம்) சித் ஸ்வரூபரான பரமாத்மதேவன் தனது இச்சையினால், ஒரு மஹாயோகியைப் போல், தனக்குள் அடங்கியுள்ள, நிருபாதான (தனக்கென ஒரு காரணமுமின்றிய) அர்த்த ஜாத (பிரபஞ்ச) த்தைப் பிரகாசப் படுத்துகிறார்."

"स्वेच्छया स्वभित्तौ विश्वमुन्मीलयति" (சக்தி ஸூத்திரம்) என்பனவாதி பிரமாணங்களினுல் பிரபஞ்சத்தின் சிருஷ்டியாதிகள் பரமாத்மாவின் இச்சாமாத்திரமேயாமென நன்கு விளங்குகின்றது.

ஜகத்சிருஷ்டியாதிகள் பரமாத்மாவின் விளையாட்டேயாகும். அவற்ருல் பரமாத்மாவுக்கு யாதொருபயனுமில்லை: "लोकवत्तु लीला कैवल्यं। ब्रह्मणः विचित्रकार्यरचना केवललीलामात्रं ; न फलसापेक्षम्" என்னும் பிரமாணங்கள் ஈண்டறியத்தக்கன.

"लीलाक्लृप्तब्रह्माण्डमण्डला" என்னும் ஸஹஸ்ரநாம வசனம் இந்த அர்த்தத்தை வலிவுறுத்துகின்றது.

ஜகத்சிருஷ்டியைப்பற்றிய விசாரம்

சிருஷ்டியைப்பற்றிக் கூறுதல் வேதத்தின் பரம தாத்பரியமன்று; ஜீவர்கள் இந்த ஜகத்தைப் பிரத்தியக்ஷமாய் அறிவதனுல், அதன் தன்மையைப்பற்றி யவர்களுக்குப் போதிக்க, அவர்களின் வார்த்தைகளை யநுவாதஞ் செய்துகொண்டு வேதம் ஜகத்சிருஷ்டியைக் கூறுகின்றது.

सदेव सोम्येदमग्र आसीत् । मायी सृजते विश्वमेतत् । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा इदँ सर्वमसृजत ॥

यथा सुदीप्तात्पावकाद्विस्फुलिङ्गाः
सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाऽक्षराद्विविधाः सोम्य भावाः
प्रजायन्ते तत्र चैवापियन्ति ॥

முதலிய உபநிஷத் பிரமாணங்கள் பிரஹ்மமே ஜகத் காரணமென்று பறை சாற்றுகின்றன.

காரணம் இரண்டு வகை—ஒன்று உபாதான காரணம்; மற்றொன்று நிமித்தகாரணம். ஒரு கடத்திற்கு மண் உபாதான காரணமும், குலாலன் தண்ட சக்கிராதிகள் நிமித்தகாரணங்களுமாகும். கடமாகிய காரியத்திற்கு வேறாக நிமித்தகாரணங்கள் இருப்பது அறியத்தக்கது.

பரமாத்மாவை ஜகத்காரணனாகவொப்பின், அவன் ஜகத்காரியத்திற்கு உபாதான காரணனா? நிமித்தகாரணனா? கடதிருஷ்டாந்தத்தின்படி அவன் இரண்டு காரணங்களில் ஒரு காரணமாகத்தான் இருக்கமுடியும். இங்ஙனம் ஒப்பின் மற்றொருகாரணம் பரமாத்ம பின்னமாகவே இருக்க நேரும்; பரமாத்மாவைவிடப் பின்னமாக மற்றொரு பொருளை யொப்பின், பரமாத்மா கண்டிதனாய், அதனால் ஸாவயவியாய், அதனால் ஆதியந்தங்களுடையவனாய் ஒழிவன். இங்ஙனம் கூறுதல் ஶ்ருதிவிரோதமாகும். ஆதலின், பரமாத்மாவொருவனே இந்த ஜகத்திற்கு உபாதான காரணமாகவும்,நிமித்தகாரணமாகவும் ஒப்புதல்வேண்டும். இங்ஙனம் ஒப்புதற்குத் திருஷ்டாந்தம் உண்டோவெனில் அது கூறப்படுகின்றது.

यथोर्णनाभिः सृजते गृह्णते च
तथाऽक्षरात् संभवतीह विश्वम् ॥

(தா-ம்) "எங்ஙனம்(எட்டுக்கால்)சிலந்தியானது தனக்குப் பின்னமான வேறுகாரணமின்றியே மெல்லியநூற்களை யுண்டாக்கி வலைபின்னி யதில் வசித்திருந்து மறுபடியும் அதை விழுங்கித் தன்னில் லயப்படுத்திக் கொள்ளுகின்ற

தோ, அங்ஙனமே அக்ஷரமாகும் பரமாத்மாவிலிருந்து, இதரகாரணுபேக்ஷயின்றி, இந்த ஜகத்தானது பரமாத்மாவிற்கு அபின்னமாயும், விலக்ஷணமாயும் உண்டாகின்றது.'' என்னும் ஶ்ருதிப்பிரமாணம் பரமாத்மாவிற்கு ஜகத்தின் உபாதான நிமித்தகாரணங்களைக் கூறுகின்றது.

உபாதானகாரணவிமர்சம்.

ஆரம்பம், பரிணுமம், விவர்த்தம் என உபாதான காரணம் மூன்றுவகைப்படும்.

ஆரம்போபாதானகாரணம்:—சக்கரங்கள், மையக்கட்டை, ஏர்க்கால், இருசு, முதலிய பலகாரணங்களாலானது வண்டியென்னும் காரியமாம். இங்கே சக்கரங்கள், மையக்கட்டை முதலியன ஆரம்ப உபாதான காரணங்களாகும். குறுக்கும் நெடுக்குமாயுள்ள தந்துக் (நூற்) கள் வஸ்திரத்தின் ஆரம்ப உபாதான காரணங்கள்.

பரிணுமி உபாதானகாரணம் : — கடகாரியத்திற்குக் களிமண் பரிணுமி உபாதானகாரணம். தயிருக்குப் பால் பரிணுமி உபாதானகாரணம். இவற்றுள் களிமண் அவிகார பரிணுமிகாரணமும், பால் விகாரபரிணுமிகாரணமுமாகும்.

விவர்த்தோபாதானகாரணம் : —கயிற்றில் தோன்றும் பாம்பிற்குக் கயிறு விவர்த்தோபாதான காரணம், ஸ்வப்ன உலகத்திற்கு மனம் விவர்த்த உபாதானகாரணம். என்றால், அத்தியாஸமாய்த் தோன்றும் மித்யாகாரியத்திற்கு அதன் அதிஷ்டானத்தைக் காரணமாக வொப்புதல் விவர்த்தகாரணமாகும்.

இந்த ஜகத்தானது பிரஹ்மத்தின் க்ண் அத்தியாஸமாய்த் தோன்றுகின்றது. ஆதலின், பிரபஞ்சம் மித்தை

யாம். பிரபஞ்சமாகும் அத்தியாஸத்திற்கு அதிஷ்டானம் பிரஹ்மமாதலின், பிரபஞ்சத்திற்குப் பிரஹ்மம் விவர்த்த காரணம் ஆகவேண்டும். ஆதலின் பிரஹ்மம் (பரமாத்மா) இந்த ஜகத்தின் அபின்ன நிமித்தோபாதான விவர்த்த காரணமெனச் சித்தித்தது.

காமகலைக்கு இத்தகைய காரணத்துவம் ஒப்புதலே ஸமஞ்ஜஸமாகும். காரண காரியவிசாரம் பிரஸங்காநு ஸாரமாய் அங்கங்கே செய்யப்படும்.

भाति—ஸ்வயம் பிரகாசமாய் விளங்குகின்றது. பிர காசமாத்திரத்தையே சரீரமாயுடைய தன்மையால். பிரஹ்ம விளக்கத்திற்கு எப்பொழுதும் ஹாநியின்று; அங்ஙனமாயின் அதுயாவருக்கும் விளங்கவேண்டுமன்றோ? எனின், அது யாவருக்கும் விளக்கமாகவே யிருக்கின்றது. ஆனல், அவ்விளக்கத்தையுணரும் சாமர்த்தியம் மாத்திரம் யாவருக்கும் இல்லை. எவர்களுடைய அந்தக்கரணமானது சுத்த ஸத்துவப் பிரதான அகண்டாகார வ்ருத்தியோடு கூடியுள்ளதோ, அவர்கள் யாவரும் பிரஹ்ம விளக்கத்தை யறியும் சாமர்த்திய முடையவராவர்; மற்றவர்க்கு அவ் வாற்ற லின்மையின், விளங்கவில்லையென்று அவர் கூறு கின்றனர்.

மங்கலமாகும் இம்முதல் ஸ்லோகத்தில் भाति யெனக் கூறப்பட்டிருப்பதால் இக்கிரந்தத்தின் முக்கிய பலமாகிய அபானுபாதக ஆவரணத்தின் நிவர்த்தி ஸூசிப்பிக்கப் பட் டது அறியத்தக்கது.

"பிரஹ்மம் விளங்கவில்லை" யென்பது அபாநாபாதக ஆவரணமாம். இதன் நிவர்த்தி பிரஹ்மத்தின் அப ரோக்ஷ ஞானத்தினுல் ஆகும். ஆத்மாபின்ன பிரஹ்மா

பரோக்ஷ ஞானந்தானே ஸ்ரீபிரஹ்மவித்தையின் முக்கியமான பயன்?

இந்த முதல் ஶ்லோகத்தினுல் இதன் ஆசிரியர் இந்நூலின் நான்கு பாதங்களேயுங்கூடக் குறிப்பாய்க் காட்டுகின்றனர். அது வருமாறு:—

(1) प्रकाशमात्रतनुः ॥ துரீயபாதம்.

(2) सकल...लीलाविनोदनोद्युक्तः ॥ அவித்தியா பாதம்.

(3) महेशः ॥ வித்தியாபாதம்.

(4) अन्तर्लीनविमर्शः ॥ ஆநந்தபாதம்.

"पातु" என்னும் மற்ருெரு பாடத்தின்படி விசேஷவுரை கூறப்படுகின்றது.

पालनं என்பது இரக்ஷணே. அபாயத்திலிருந்து காப்பதே ரக்ஷணேயாகும். அபயந்தருதலென்பதும் இதுவே. பாரமார்த்திகமான அபயம் அத்வைத ஞானத்தாலேற்படுவதாகும். "अभयं वै जनक प्राप्तोऽसि । अभेददर्शनात् । द्वितीयाद्वै भयं भवति" என்னும் பிரமாணங்கள் நன்கு விமர்சிக்கப்படுமேய்யாயின், पातु என்பதன் உண்மையான அர்த்தம் ஆத்மப் பிரஹ்மைக்கிய ஞானத்தின் உபதேசமே யாகுமென்பது தெளிவாய்ப் புலப்படும்.

ஐக்கிய ஞானஸ்வரூபமே பிரஹ்ம வித்தையாகும். ஆகவே பிரஹ்மவித்தை ஸூசிப்பிக்கப்பட்டது. पातु என்னுங் கிரியைக்கு மஹேசன் கர்த்தாவாதலின் அவனே பிரஹ்ம வித்யோபதேஷ்டாவாவன்: ஈஶ்வரனும் குருவும் தம்முள் அபேதரே யாவர். "ईश्वरानुग्रहादेव पुंसामद्वैत-वासना" என்றபடி ஈஶ்வர அபின்ன குருவின் அநுக்கிரகத்தினுலேதான் ஜீவர்களுக்கு அத்வைத வாஸனே யேற்படு

கின்றது. ஆதலின் உபதேஷ்டாவாகிய குருவும், வித்தியாதிஷ்டான தேவதையாகும் அஹம்பத லக்ஷ்யார்த்த பரதேவதையும், அஹம்பத வாச்சியார்த்தனுன உபாஸக முமுக்ஷுவும் குறிப்பிடப் படுகின்றனர்.

தத்பதலக்ஷ்யார்த்த நிருபாதிக காமேஶ்வர நாமக பரப்பிரஹ்மமும், பிரஹ்மாபின்ன ஆத்மாபிவியஞ்சக பிண்டாண்டரூப ஸ்ரீசக்கிரமும் ஸூசிக்கப் படுகின்றனவென்று கூறவும் வேண்டுமோ?

அநுபந்த சதுஷ்டயம்.

எதையறியாமல், ஒரு விவேக புருஷனுக்கு, ஒரு கிரந்தத்தினிடத்தில் பிரவிருத்தி யேற்படாதோ, அதை "அநுபந்தம்" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை அதிகாரி, ஸம்பந்தம் விஷயம், பிரயோஜன மென்பனவாம். இந்த அநுபந்த சதுஷ்டயத்தையறியாமல் விவேகிக்குக் கிரந்தத்தின்கண் பிரவ்ருத்தி யேற்படாமையின், அவற்றைப்பற்றி யீண்டு விசாரித்தல் அத்தியாவசியமேயாகும்.

(1) அதிகாரி:—விவேகம், வைராக்கியம், சமாதிஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்துவம் என்னும் நான்கு ஸாதனங்களும் நன்கமையப் பெற்று, குருவின் அநுக்கிரகத்திற்குப் பாத்திரனுகி, அவர்பால் வேதாந்த சிரவணம் செய்து பின்னரும், எந்த ஒரு புருஷனுக்கு "அஹம் பிரஹ்மாஸ்மி" என்னும் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லையோ, அந்தமஹாபுருஷனே இந்நூலுக்கு முக்கியாதிகாரியாவன். இவன் அபானுபாதக ஆவரணத்தோடுகூடியுள்ளவனுவான்.

(2) ஸம்பந்தம்:— இது பலவகைப்படும். இவற்றுள்,

i கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் பிரதிபாதகப் பிரதிபாத்திய ஸம்பந்தமுளது. கிரந்தம் பிரதி பாதகம்; விஷயம் பிரதிபாத்தியம்.

ii அதிகாரிக்கும் பிரயோஜனத்திற்கும் பிராபகப் பிராப்பிய ஸம்பந்தமுளது. பிராப்பியம் பிரயோ ஜனம்; பிராபகன் அதிகாரி.

(3) விஷயம்:—பிரகாச விமர்ச ஸாமரஸ்யாத்மக ஜீவப்பிரஹ்மைக்கிய ஞானமே இந்நூலில் பிரதிபாதிக்கப் படும் முக்கிய விஷயமாம்.

(4) பிரயோஜனம்: — பிரதிபந்த நிவர்த்தியின் மூல மாக ஆத்மாபின்ன பிரஹ்ம ஸாக்ஷாத்கார ஞான ஸித்தி யும், அதன் வாயிலாக நிர்விகல்பக ஸஹஜஸ்திதியின் அடைவுமே இந்த நூலின் பிரயோஜனமாகும்.

இங்ஙனம் ஒருவாறு முதல் ஸ்லோகத்தின் விசேஷ வுரை கூறப்பட்டது. (1)

(அவதாரிகை) முதல் ஸ்லோகத்தில் விமர்சம் என் னும் சித்சக்தி அந்தர்க்கதமாயுள்ள சுத்தப் பிரஹ்மம் நிரூபிக்கப்பட்டது. இதனைப் பிரகாசபிந்துவென்று தந்த் ரங்கள் கூறும். அந்தர்க்கதமாயுள்ள சித்சக்தியாகும் விமர்ச சக்தி இரண்டாவதாகும் இந்த ஸ்லோகத்தில் நிரூ பிக்கப்படுகின்றது.

सा जयति शक्तिराद्या
निजसुखमयनित्यनिरुपमाकारा ।
भाविचराचरबीजं
शिवरूपविमर्शनिर्मलादर्शः ॥ २ ॥

(பதவுரை) भाविचराचरबीजं—இனியுண்டாகப்போகும் சராசரவடிவ ஸகலவுலகங்கட்கும், விருக்ஷத்திற்கு விதையைப்போன்று காரணமானதும், शिवरूपविमर्शनिर्मलादर्शः—சிவஸ்வரூபமான "அஹம்" என்பதன் உண்மையான ஸ்வாம்ச விமர்சத்திற்கு ஸ்வச்சமான கண்ணாடி போன்றதும், निजसुखमय—ஸ்வபாவமான ஆநந்த கனமானதும், नित्य—முக்காலத்திலும் அழிவில்லாததும், निरुपमाकारा—உவமையற்ற ஸ்வரூபமுடையதுமான, सा आद्या शक्तिः—பிரகாசாந்தர்க்கதமாயுள்ளதென்று முன் கூறப்பட்ட ஆத்யாசக்தியாகும் அந்த விமர்சவடிவ சித்சக்தியானது जयति—ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகின்றது.

(வி—ரை) இந்த ஸ்லோகம் விமர்சபிந்துவை நிரூபிக்கின்றது. சித்பிந்து, ஸம்வித்பிந்து, விமர்சபிந்துவென்பன பரியாய நாமங்களாகும். விமர்சபிந்துவென்பது, பரப்பிரஹ்மத்தின் நாமாந்தரமாயிருக்கின்றது. பரையென்னும் சித்சக்தி விஜ்ரும்பித்துள்ள சுத்தப் பிரஹ்மத்திற்குப் பரப்பிரஹ்மமென்றுபெயர்.

पराव्यापकलक्षणं—ஆத்மாபின்ன பிரஹ்மஸ்வரூப விசாரவடிவ விமர்சமே பராவியாபகமாம். விமர்சரூப பரையின் வியாபகலக்ஷணம் ஸ்ரீஸூதஸம்ஹிதையில் இங்ஙனம் கூறப்படுகின்றது.

शास्त्राचार्योपदेशेन तर्कैः शास्त्रानुसारिभिः ।
सर्वसाक्षितयात्मानं सम्यङ्निश्चित्य सुस्थिरः ॥
स्वात्मनोऽन्यतया भान्तं समस्तमविशेषतः ।
स्वात्ममात्रतया बुद्ध्वा पुनः स्वात्मानमद्वयम् ॥

शुद्धं ब्रह्मेति निश्चित्य स्वयं स्वानुभवेन च ।
निश्चयं च स्वचिन्मात्रे विलाप्याविक्रियेऽद्वये ॥

विलापनं च चिद्रूपं बुद्ध्वा केवलरूपतः ।
स्वयं तिष्ठेदयं साक्षात् ब्रह्मवित्प्रवरो मुनिः ॥

ईदृशीयं परा निष्ठा श्रौती स्वानुभवात्मिका ॥

(தா—ம்) சாஸ்திரம், குருபதேசம் இவற்றின் மூல மாய்ச் சாஸ்திரங்களுக்கு அநுகூலமான தர்க்கத்தால், தான் ஸர்வஸாக்ஷியாய் இருப்பதை நன்ருய் மனதில் நிச்ச யம் செய்து, ஸ்திரமான பாவனையோடு, தனக்கு அன்னிய மாய்த் தோன்றும் ஸகலதிரிசியங்களையும் தன்னைவிடப் பின்னமன்றென வுணர்ந்து, தன்னைச் சுத்தமும் அத்வயமு மான பிரஹ்மமென்று ஸ்வாநுபவத்தினுல் நிச்சயித்து, பிறகு அந்த நிச்சயபாவனையையுங்கூட, நிர்விகாரியும் அத் வயமுமான சின்மாத்திரஸ்வரூபத்தில் லயம் செய்து, பின் னர், அதற்கும் அதீத கேவலப் பிரஹ்மத்தில் அதுவாக நிலைத்து நிற்றலே பராநிஷ்டையெனப்படும்.

ஸூதகீதை—அத்—5 (50–53)

விமர்சரூப சித்சக்தியின் லக்ஷணம் இங்ஙனம் இருத் தலினுற்ருன், நூலாசிரியர் शिवरूपविमर्शनिर्मलादर्शः என்றும், निजसुखमयनित्यनिरुपमाकारा வென்றும் நிர்த்தேசம் செய்தனர்.

भाविचराचरबीजं — இனியுண்டாகப் போகும் சராசராத் மகமான பிரபஞ்சத்திற்குக் காரணமாயுள்ளது சித்சக்தி யாகும். இங்ஙனங்கூறின், "காரண காரியங்களுக்கு அபேதம்" என்னும் நியமம் பற்றி, சித்சக்தியாகுங் கார ணத்திற்கும், பிரபஞ்சமாகும் காரியத்திற்கும் அபேதம்

கூறவேண்டும். காரியரூபப் பிரபஞ்சமோ ஜடமாயும், துக்கமாயும், அநித்தியமாயும் இருக்கின்றது. இத்தகைய வுலகிற்குக் காரணம் சித்சக்தியெனின், அதுவும் ஜடமாய், துக்கவடிவமாய், அநித்தியமாயிருக்க நேரிடும். சின்மயி, ஸத்தியாநந்தஸ்வரூபிணி யென்னும் லக்ஷணங்களையுடைய சித்சக்திக்கு ஜடப்பிரபஞ்ச காரணத்துவங் கூறியதனுல் அதற்கு அநித்தியத்துவாதிகளை யொப்புதல் ஸமஞ்ஜஸமாகாது.

இதற்குச் சமாதானமாவது:—நிர்விசேஷநிருபாதிக பிரஹ்மமே ஸ்ரீகாமேஸ்வரர். இவர் கேவலம் பிரகாசவடிவினர். இந்த நிர்விசேஷப் பிரஹ்மத்தில் ஸூர்ய—கிரணங்களைப் போலவும், சந்திர—சந்திரிகையைப் போலவும் அபின்னமான ஒரு ஸ்வாபாவிக சக்தியுண்டு. இந்தச் சக்தியைத்தான் உபநிஷத்துக்கள், "सत्यं ज्ञानमनन्तं ब्रह्म; आनन्दो ब्रह्म" என்று கூறுகின்றன. பிரஹ்மத்தின் ஸ்வாபாவிக ஸ்வரூபலக்ஷணம் சித்சக்தியே. இதுதான் பிரஹ்ம அல்லது சிவரூபவிமர்சம்.

இத்தகைய பிரஹ்மாபின்ன சித்சக்தியினின்றும், லீனமாயுள்ள அநந்த கோடி ஜீவர்களின் கர்மநிமித்தமாய், அவரவர்களுக்கு அவரவர்களின் புண்ணிய பாப அநுபவரூப ஸுகதுக்கங்களை யடைவிக்கும் பொருட்டுப் போக்கிய வடிவ பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பது அவசியமாயிற்று. ஆகவே சித் சக்தியினின்றும் அத்தியஸ்தமாய் ஒரு ஜட சக்தியுண்டாயிற்று. இதுதான் மாயையெனப்படுவது. இதனின்றும் அவ்வியக்தம், மஹத்தத்வம், அஹங்காரம் முதலியன தோன்றின. இவ்விஷயம்,

स्रष्टव्यजगदात्मकशक्यप्रतियोगिको मायापरिणामविशेषो जडशक्तिः । सृज्यशक्तिमात्रोपलक्षितमेतत् ॥

என்னும் பிரமாணத்தால் நன்கு விளங்குகின்றது. சித் சக்தியே மாயையென்று சிலர் கூறுகின்றனர். அது சாஸ்திர விருத்தமானது.

चिन्मात्राश्रयमायायाः शक्त्याकारे द्विजोत्तमाः ।
अनुप्रविष्टा या संविन्निर्विकल्पा स्वयंप्रभा ॥ २ ॥
सदाकारा परानन्दा संसारोच्छेदकारिणी ।
सा शिवा परमा देवी शिवाभिन्ना शिवंकरी ॥ ३ ॥
जगत्कारणमापन्नः शिवो यो मुनिसत्तमाः ।
सा तस्यापि भवेच्छक्तिस्तया हीनो निरर्थकः ॥ ४ ॥

सूतसंहिता—यज्ञ--*அத்* 13.

व्याख्यानम्—भोक्तृभोग्यात्मकस्य प्रपञ्चस्य सनियन्तृकस्य सृष्टेः प्राक्प्रलीनावस्थायां विकल्पहेतूनामभावात्परशिवस्वरूपमत्यन्तं निर्विकल्पकं स्वप्रतिष्ठं भवति तत्स्वरूपेऽध्यस्ता मायाऽपि विकल्परहितैवावतिष्ठते । सा च प्राणिकर्मपरिपाकवशादीषद्विकल्पिता सती शिवशक्तिविभागस्यापि तदानीमभावात्तदुभयसाधारणं चिन्मात्रमेवाऽऽश्रयतया स्वीकरोति । चिन्मात्ररूपः परशिवोऽपि तत्संबन्धवशात्किञ्चित्स्वप्रतिष्ठतां विहाय तदभिमुखो भवति । नन्वसङ्गोदासीनस्य परानन्दस्वरूपस्याविक्रियस्य परशिवस्य मायावष्टम्भेन कुतो जगत्सृष्ट्यादिहेतुत्वम् ।

प्राणिकर्मणां परिपाकवशादिति चेन्न । तस्य स्वतन्त्रस्य तत्पारतन्त्र्यायोगात् । स्वभोगार्थमित्यपि न युज्यते । तस्याऽऽप्तकामत्वात् । न च लीलार्थमित्यपि युक्तम् । तथात्वे गिरिनदीसमुद्रादिवैचित्र्यस्य सुखित्वादिवैचित्र्यस्य च प्रतिनियमायोगात् । नैष दोषः । प्रतिनियमस्य परिपक्वप्राणिकर्मतारतम्यहेतुत्वात् । न चैतावता परशिवस्य कर्मपारतन्त्र्यापत्तिः । स्वसंकल्पनिमित्तत्वात् । जगत्सृष्ट्यादिलीलोपक्रमावसरे निर्हेतुककार्योत्पत्तिरतिप्रसङ्गहेतुरिति पुण्यपापादीनां सुखदुःखादिहेतुत्वं तदुपभोगहेतुत्वेन प्रतिनियतप्रपञ्चनिर्माणं च संकल्प्य परशिवः स्वमायावशाल्लीलायां प्रवर्तते । तस्य च स्वसंकल्पस्य सत्यत्वाविघाताय सर्वेष्वपि ब्रह्मकल्पेषु समानाकारा एव सृष्ट्यादिलीलाः करोति । अतो जगद्वैचित्र्यनिमित्तस्य पुण्यपापादेरपि स्वसंकल्पहेतुत्वाज्जगत्सर्गादिलीलायां प्रवृत्तस्य परशिवस्य न स्वातन्त्र्यभङ्गः । अत एव भगवान्बादरायणः परमेश्वरस्य सृष्ट्यादिप्रवृत्तौ राजादिवत्केवलं लीलैव कारणमिति सूत्रयामास—"लोकवत्तु लीलाकैवल्यम्" इति । तथा च शिवशक्त्युभयरूपसाधारणं चिन्मात्रमाश्रिता सा माया पुनर्द्विधा भवति । शक्यप्रतियोग्यधीननिरूपणविषयत्वाकारेण तदनधीननिरूपणविषयत्वाकारेण च । एवमुपाधिद्वैविध्यादुपधेयचिन्मात्रमपि द्विधा भिद्यते । तत्र शक्यप्रतियोग्यधीननिरूपणा माया सा शक्तिः सलिलपवनादिसमायोगपरवशादुच्छूनावस्थस्य बीजस्य यथाऽङ्कुरावस्था तथैव प्राणिकर्मपरिपाकवशादुपचितरूपाया मायाया जगत्कार्यहेतुभूताङ्कुरावस्था सेत्यर्थः । शक्यप्रतियोग्यनधी-

ननिरूपणविषयो यो मायाया आकारस्तदुपहितं चैतन्यं शिवः । जगदङ्कुररूपिण्या शक्त्या यदवच्छिन्नं चैतन्यं तस्य या संविद्रूपिणी सा परा शक्तिरित्युच्यते । अतश्चोपाधिपरिच्छेदादेवैकस्यैव चिन्मात्रस्य शिवशक्त्यात्मना विभागः । परमार्थतस्तु चिन्मात्रतयैकत्वमेवेत्यर्थः । तदुक्तमागमिकैः—"चिदचिदनुग्रहहेतोरस्य सिसृक्षोर्य आद्य उन्मेषः । तच्छक्तितत्त्वमभिहितमविभागापन्नमस्यैव" इति । तदिदमुच्यते—'चिन्मात्राश्रयमायायाः शक्त्याकारेऽनुप्रविष्टा' इति । शिवमाहात्म्यखण्डे तच्छक्तिपूजाविधौ विस्तरेण प्रपञ्चितम् । यतः परशिवस्वरूपमेव शक्यप्रतियोगिनिरूपणोपाध्यवच्छिन्नतया परा शक्तिस्तस्मात्साऽपि सच्चिदानन्दादिरूपैवेत्याह—निर्विकल्पेत्यादिना । विकल्पहेतुविशेषाणां निर्विशेषे वस्तुनि स्वभावतो विरहान्निर्विकल्पा । स्वयंप्रभाऽपराधीनप्रकाशा सच्चिदानन्दाखण्डैकरसेत्यर्थः ॥ २ ॥

संसारोच्छेदकारिणीति । संसारस्योच्छेद उन्मूलनं तद्धेतुभूता । परमेश्वरः स्वशक्तिवशात्खलु मुमुक्षून्संसारान्मोचयति 'शक्तो यया स शंभुर्भुक्तौ मुक्तौ च पशुगणस्यास्य" इत्युक्तत्वात् । यद्वा ब्रह्माकारमनोवृत्त्यवच्छिन्नैव संवित्संसारनिवर्तिकेत्यर्थः । एवंगुणविशिष्टा संवित्सैव शिवंकरी सर्वप्राणिनां सुखकारिणी । अत एव शिवा शिवशब्दाभिधेया । वक्ष्यमाणानां शक्तीनामुपादानभूतत्वात्परमा सर्वोत्कृष्टा । देवी शक्यप्रपञ्चस्येश्वरी । शिवाभिन्नेति । अस्याः शिवस्य च परमार्थतः पूर्वोक्तचिन्मात्ररूपत्वा-

द्भेदो नास्तीत्यर्थः । तथाच शिवशक्त्योर्भेदावभास एव मिथ्या न तु प्रपञ्चवत्स्वरूपमपीत्यर्थः ॥ ३ ॥

इत्थं सामान्यरूपिणीं परां शक्तिं निरूप्य सैव शक्यविशेषप्रतियोगिनिरूपिता सती तत्तद्विशेषशक्त्यात्मिका भवतीत्याह— जगदित्यादिना । जगत्कारणमिति भावपरो निर्देशः । यः शिवो जगत्कारणत्वमापन्नो जगदङ्कुररूपशक्त्यवस्थाया ऊर्ध्वं जगदाकारविवर्तिष्यमाणमायाधिष्ठानत्वात्तस्यापि शिवस्य सा पूर्वोक्ता परा शक्तिरेव जगन्निर्माणशक्तिरूपा भवेत् । तया शक्त्या रहितः शिवो निःशक्तित्वाज्जगन्निर्माणासमर्थ इत्यर्थः ॥ ४ ॥

இதன் பொருள்:—போக்த்ரு போக்கிய ரூபமாயும், நியந்தாவோடுகூடியதாயுமுள்ள பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன், பிரளயாவஸ்தையில், விகல்பத்திற்குக் காரணமின்மையின், பரசிவஸ்வரூபம் நிர்விகல்பகமாயும், ஸ்வப்பிரதிஷ்டிதமாயும் இருந்தது. அதனிடத்தில் அத்தியஸ்தமாய்த் தோன்றிய மாயையும் விகல்பமில்லாமலே இருந்தது. அம்மாயையும், பிராணிகளின் கர்ம பரிபாகவசத்தினல், கொஞ்சம் மாறுதலடையும் பொழுது, சிவன் வேறு சக்தி வேறு என்னும் பாகுபாடின்மையின், அது, சிவசக்திகளுக்குப் பொதுத்தன்மையான சின்மாத்திரத்தை யாச்ரயித்து விளங்குகின்றது.

சின்மாத்திர வடிவினனாகும் பரசிவமும், மாயையின் ஸம்பந்தத்தினல், தன் நிலையைவிட்டுச் சிறிது நீங்கி மாயைக்கு அபிமுகமாகின்றது.

சங்கை:—அஸங்க உதாஸீனமாயும் பரமாநந்தஸ்வ ரூபமாயும், விகாரரஹிதமாயுமுள்ள பரசிவத்திற்கு மாயா ஸம்பந்தமும், அதனால் ஜகத்காரணத்துவமும் எங்ஙனம் பொருந்தும்? பிராணிகளின் கர்மபரிபாக வசத்தினலெ னின், ஸ்வதந்த்ரமான பரசிவத்திற்கும், பரதந்த்ரமான கர்ம பரிபாகத்திற்கும் யோகம் பொருந்தாது.

தனது போகத்தின் பொருட்டெனின், அதுவும் பொருத்தமானதன்று. பரசிவம் ஆப்தகாமனுதலின். லீலையின் பொருட்டெனின் அதுவும் யுக்தமன்று. ஏனெனின் நானுவிதமாய் விளங்கும் இப்பிரபஞ்சத்தினல் நியதமான ஸுகமுண்டாகாமையின், லீலையின் பொருட் டென்பதும் ஒவ்வாது.

ஸமாதானம்:— லீலையாகச் சிருஷ்டித்தாரென்பது பொருந்தும். பிராணிகளின் கர்மாக்களின் பரிபக்குவ தார்தம்மியங் காரணமாக அவரவர்களுக்கு ஸுக துக்க நியமமில்லையே தவிர, பரசிவத்திற்கு லீலையாகவேயிருக்கின் றது. பரமேஶ்வரன், இந்த ஜகத்தை லீலையாகச் சிருஷ்டி செய்ய ஸங்கல்பிக்கும் போது, பிராணிகளின் நானுவித கர்ம பரிபாகத்தையும், புண்ணிய பாபங்கள் காரணமாக அவரவர்கள் அநுபவிக்கவேண்டிய ஸுகதுக்கங்களையும் நிய மித்து, மாயா ஸம்பந்தனுகிச் சிருஷ்டிக்கின்றுர்.

இதனுல், பரசிவத்திற்குக் கர்ம பரதந்த்ரம் ஏற்படுவதி ல்லை. தனது நித்திய ஸங்கல்ப வலிமையால். ஒரு சக்கி ரவர்த்தி லீலையாய் ஒரு காரியத்தைச் செய்யுங்கால், எங் ஙனம், அவனுக்கு ஸ்வாதந்த்ரிய பங்கமில்லையோ, அங் ஙனமே, பரசிவத்திற்கும் ஸ்வதந்த்ரத் தன்மைக்குப் பங்க மில்லை.

பரசிவம் மாயைக்கு அபிமுகமான பொழுது, சிவம் சக்தி என்னும் இவைகளுக்குப் பொதுவாயுள்ள சின் மாத்திரத்தையே யாஶ்ரயித்து விளங்கும் மாயையானது இரண்டுவகையாய்ப் பிரிகின்றது.

1. தான் ஸம்பந்தப்படும் வஸ்துவின் அதீனமாயுள்ள விஷய ஸ்வரூபம் ஒன்று;

2. தான் ஸம்பந்தப்படும் வஸ்துவின் அதீன நிரூபணமற்ற விஷய ஸ்வரூபம் மற்றொன்று.

இங்ஙனம் உபாதியாகும் மாயை யிரண்டாகப் பிரிவதால், அதிஷ்டானமான சித்தும், உபாதிவசத்தால், இரண்டாகப் பிரிகின்றது.

அதீன நிரூபண விஷயமாகும் மாயைக்குச் சக்தியென்னும் பெயர் ஏற்பட்டது. இந்தச் சக்தியானது, எங்ஙனம் காற்று, ஜல ஸம்பந்தத்தால் விதை முளைக்கின்றதோ, அங்ஙனமே, பிராணிகளின் கர்மபரிபாக வசத்தால் ஜகத்காரிய ஹேதுபூதமான அங்குராவஸ்தையை யடைகின்றது.

இதுதான் சக்தி தத்துவமாகும்.

அதீனமற்ற நிரூபண விஷயமாகும் மாயா பாகத்தின் ஆகாரத்தால் உபஹிதமான சைதன்யம் சிவம் என்று சொல்லப்படுகின்றது. இது சிவதத்துவமெனப்படும்.

ஜகத்தின் அங்குர வடிவ சக்தி தத்துவத்தால் அவச்சின்னமான சைதன்யத்தின் ஸம்வித் (ஞான) ரூபத்திற்குப் பராசக்தி அல்லது சித்சக்தி யென்று பெயர்.

உபாதி பரிச்சேதங்களாற்றான், ஏகமாயுள்ள சின்மாத்திரத்திற்கு சிவமென்றும், சக்தியென்றும் விபாகமேற்பட்டது; உண்மையில், சின்மாத்திரத்தினல் ஒன்றே.

சின்மாத்திரத்தை யாஸ்ரயித்துள்ள மாயையின் சக்தியென்னும் ரூபத்தில் அநுப்பிரவேசித்துள்ள எந்த ஸம்வித்ஸ்வரூப சித்சக்தியுளதோ, அது, நிர்விகல்ப மாயும், ஸ்வயம் பிரகாசமாயும் இருக்கின்றது. அன்றியும் அந்த சித்சக்தி, ஸத்ரூபியாயும், பரமாநந்தஸ்வரூபிணி யாயும், ஸம்ஸாரமென்னும் ஸர்வ அநர்த்தங்களின் நாசத் திற்குக் காரணமானவளாயும், ஸர்வமங்கள காரிணியா யும், பரமோத்க்ருஷ்டமாய் விளங்குபவளாயும், பரசிவ ஸ்வரூபத்திற்கு அபின்னையாயும், சிவையாயும் பிரகாசிக் கின்றனள்.

பரசிவம் தனது அருட்சக்தியினால்தான் ஜீவர்களுக் குப் புக்தியோ அல்லது முக்தியோ அருளுவது. ஆதலினாற் றான், சித்சக்தியை மோக்ஷகாரணமென்று கூறப்பட்டது.

ஜகத்திற்குக் காரணத்தன்மையை வஹிக்கும் மாயா விசிஷ்ட பரமேஸ்வரன் எவரோ, அவருடைய சக்தியாகவும் சித்சக்தியே யாகின்றனள். சித்சக்தியில்லாவிடில் சிவம் பிரயோஜனமற்றவராகின்றனர்.

இங்ஙனம் விமர்சித்த பிரமாணத்தினால் சித் சக்தி மாயை யல்லவென்றும், சித் சக்திக்குப் பிரபஞ்ச காரணத் துவம் கூறுதல் பொருத்தமுடையதாகுமேன்றும் சித்திக்கின் றன. பிரபஞ்சம் மாயா பரிணாமமும், சித்விவர்த்தமுமாமேன் பது பரம ஸித்தாந்தமாம்.

शिवरूपाविमर्शनिर्मलादर्शः—சிவஸ்வரூபம் “அஹம்” என் பது. இதன் விமர்சம், பராமர்சம் அல்லது விசாரமாகும். நான் யார்? என்று விசாரித்து அஹம்பதலக்ஷ்யார்த்தவடிவ பிரஹ்மாபின்ன கூடஸ்த ஞானமேற்படுவதற்கு ஸ்வச் சமான கண்ணாடி போன்றது சித்சக்தி. शिवज्ञानप्रदायिनी

என்று லலிதாஸஹஸ்ர நாமங்கூறுவது இந்த அர்த்த த்தை ஸமர்த்திக்கின்றது.

स्पन्देन लक्ष्यते वायुर्वह्निरौष्ण्येन लक्ष्यते ।
चिन्मात्रममलं शान्तं शिव इत्युदितं तु यत् ।
तत्स्पन्दमयशक्त्यैव लक्ष्यते नान्यथा किल ॥

"எங்ஙனம் சலனத்தினுல் வாயுவும், உஷ்ணத்தினுல் அக்கினியும் அறியப்படுகின்றனவோ, அங்ஙனமே சின் மாத்திரமும், அமலமும், சாந்தமுமான சிவஸ்வரூப மானது ஸ்பந்தமய விமர்ஶவடிவ சித் சக்தியின் மூல மாகத்தான் அறியக்கூடும்" என்று ஞானவாஸிஷ்டம் கூறுகின்றது. शङ्करस्यापि शङ्करी—சங்கரனுக்கும் ஆநந்தத் தைத்தருபவள் என்பதன் பொருளும் இதுவே.

இங்கே பிரஸங்காநுஸாரமாய்ச் சில ரஹஸ்யமான விஷயங்களைப்பற்றி விமர்சிப்பது அத்தியாவசியமாய் இருக் கின்றது.

அவை வருமாறு:—உபநிஷத்துக்களில் "பிரஹ்மம்" என்று ஒன்றும், "ஆத்மா" என்று ஒன்றும் ஆக இரண்டு சொற்கள் வழங்கப்படுகின்றன. அவை சொல்லால் இரண் டேயன்றி அர்த்தத்தால் ஒன்றேயாகும்.

ब्रह्मविदाप्नोति परम् என்றும், तरति शोकमात्मवित् என்றும் பிரஹ்ம, ஆத்ம ஞானங்களுக்கு ஒரேவிதமான பிரயோஜ னம் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது.

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म; आनन्दो ब्रह्म என்று பிரஹ்மத்தின் லக்ஷணமும்,

अहमित्येकमद्वैतं यत्प्रकाशात्मविश्रमः ।
अकारः सर्ववर्णाग्र्यः प्रकाशः परमः शिवः ॥
हकारोऽन्त्यः कलारूपो विमर्शाख्यः प्रकीर्तितः ।
अनयोः सामरस्यं यत्परस्मिन्नहमि स्फुटम् ॥ என்றும்,

त्वं वा अहं; अहं वै त्वं; कस्त्वमिति; अहमिति होवाच; त्वमेवेदं सर्वं, तस्मादहमिति सर्वाभिधानम् என்றும்,

अहमेवाधस्तादहमुपरिष्टादहं पश्चादहं पुरस्तादहं दक्षिणतोऽहमुत्तरतोऽहमेवेदं सर्वम् என்றும்,

அஹம்பதத்தினுல் ஆத்மலக்ஷணமும் உபநிஷத்துக்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள், பிரஹ்மலக்ஷணம் எப்பொழுதும் பரோக்ஷமாகவும், ஆத்மலக்ஷணம் எப்பொழுதும் அபரோக்ஷமாகவும் இருக்கின்றன.

அபரோக்ஷ ஞானத்தின் லக்ஷணம் தனது ஸ்வரூபத்தோடு ஐக்கியப்படுதலேயாகும். எங்ஙனம், தசமபுருஷதிருஷ்டாந்தத்தில் பத்தாவது மனிதன் காணுமென்று வருந்துங்காலத்தில், ஆப்தனுன வழிப்போக்கன் ஒருவன் "பருத்துக் குட்டையாயுள்ள பத்தாமவன் இருக்கின்றுன்" என்று சொன்னதைக் கேட்டவுடன், அவர்கட்குப் பத்தாவது மனிதன் இல்லையென்கிற அஸத்துவாபாதக ஆவரணம் நீங்கிற்று. பின்னர் அவர்கள் "அத்தசம புருஷன் எங்கேயிருக்கிறுன்? அவன் யார்?" என்று வினவ, அவ்வாப்தன் "நீதான் அத்தசமன்" என்று சொன்னவுடனே

"நான்தான் அந்த பத்தாமவன்" என்னும் அபரோக்ஷ ஞான முண்டாயிற்ருே, அங்ஙனமே, सत्यं ज्ञानमनन्तं ब्रह्म என்னும் லக்ஷணத்தால் "பிரஹ்மம் இல்லவே இல்லை" யென்னும் அஸத்வாபாதக ஆவரணம் நீங்கி "तत्त्वमसि" என்னும் உபதேச மஹாவாக்கியத்தைச் சிரவணம் செய்த மாத்திரத்தில் "अहं ब्रह्मास्मि" "ब्रह्माहमस्मि" என்னும் அபரோக்ஷ ஞானம் ஏற்படுகின்றது.

பிரஹ்மம் தன்ஞேடு அபேதமாய் உணரப்படும் பொழுது தான், அதன் அபரோக்ஷ ஞானம் ஏற்படுகின்றது. இது சிதையாத ஸித்தாந்தமாகும்.

தத்பதலக்ஷ்யம் பிரஹ்மமும், துவம்பதலக்ஷ்யம் ஆத்மாவுமாகும். தத் (அது) எப்பொழுதும் பிரத்தியக்ஷமாகாதது. துவம் எப்பொழுதும் பிரத்தியக்ஷமானது. தான் இல்லையென்ருவது, தான் விளங்கவில்லை யென்ருவது யாரும் சொல்லுவதில்லை.

"பிரஹ்மம் தன்னைவிட வேறல்ல; தானே பிரஹ்மம்" என்று உணருங்காலத்தில்தான் பிரஹ்மம் பிரத்தியக்ஷமாகின்றது.

இங்ஙனம், பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானத்திற்கு அஹந்தா ஞானத்தோடுள்ள அபேதஞானமே முக்கிய காரணம்.

ஆதலின் அஹம்பத லக்ஷ்யார்த்த சித்சக்தியைக் கண்ணுடியோடு உவமித்துக் கூறினர் நூலாசிரியர்.

அஹந்தாரூப ஆதர்சத்தி (கண்ணுடியி)ல், ஸந்தேஹ விபரீதங்களின் வடிவ மலம் (அழுக்கு) இருக்குமேயாயின்,

அபரோக்ஷ ஞானவிளக்கம் நன்கு ஏற்படாது. ஆதலின், निर्मलादर्शः மலரஹிதக்கண்ணுடியென்று கூறப்பட்டதறியத்தக்கது.

சங்கை:—கண்ணுடியானது பிரதிபிம்பம் தோன்றுதற்கு ஒருபாதியாய் இருக்கின்றது. உபநிஷத் சித்தாந்தத்தின்படி கண்ணுடிஸ்தானத்தில் அந்தக்கரணம் இருக்கின்றது. கண்ணுடியில் தோன்றும் பிரதிபிம்பமே சிதாபாஸன் அல்லது ஜீவனுகும். இங்கே உபாதியாகிய கண்ணுடியைச் சித் சக்தியாகக் கூறுவது பொருத்தமுடையதாகாது.

எங்ஙனம், பிம்பத்தைவிடக் கண்ணுடி வேறே, அங்ஙனமே, பரமாத்மாவைவிட ஆதர்ஶரூப சித் சக்தி வேருகவே யிருக்கவேண்டும். இது "சக்தி சக்தர்களுக்குப் பேதமில்லை" யென்னும் ஸித்தாந்தத்திற்கு முரணுமன்றோ ?

ஸமாதானம்:—விமர்ஶ சக்தியை ஆதர்ஶத்தோ (கண்ணுடியோ)டு ஒப்பிட்டிருப்பதற்குத் தாத்பரியம் யாதெனில், விமர்ஶம் என்பது தேசகால வஸ்து பரிச்சேதமின்றிய அகண்டாகாரவ்ருத்தியேயாகும்.

अनवधिकाकाराविस्फुरणशक्तिरेव विमर्शः ।

இந்த அகண்டாகாரவ்ருத்திஸ்வரூப விமர்சசக்தியென்னும் ஆதர்சத்தில் பிரதிபலித்தலென்பது ஸ்வஸ்வரூப அவலோகனமே யாகும்.

மிக்க அழகையுடைய ஓரரசன் தன்னை நன்ருய் அலங்கரித்துக்கொண்டு, ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து, தனக்கெதிரில் ஒரு நிர்மலமான கண்ணுடியைவைத்துக்கொண்டு

அதிலுள்ள தனது பிரதிபிம்பத்தைக்கண்டு "ஆஹா! இது நான். நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன்!!" என்று ஸந்தோஷிக்கிறான்.

இங்ஙனமே, பரமாத்மாவும், தனக்கபின்னமான ஆத்ம சக்தியை எதிரிட்டுப்பார்த்து "நான் பரிபூர்ணன்; ஸர்வ வியாபகன்;" என்று அறிகின்றான். இந்த அறிவுக்கே விமர்சமென்று பெயர். தன்னைத்தான் அறிதலென்பதுவு மிதுவே யாகும். "அகண்டோஹம்; ஆநந்தோஹம்; பிரஹ்மைவாஹம்" என்று அறியும் ஸமாதிவ்ருத்தியும் இது தான்.

ஆதலின், இந்த உபமானத்தில் பிம்பம் பரமாத்மா வென்றும், கண்ணாடி (ஆதர்சம்) அகண்டாகார ப்ராஹந்தையென்றும், பிரதி பிம்பம் ஸ்வஸ்வரூப அபரோக்ஷ ஞானமென்றும் அறிதல் அத்தியாவசியமாகும்.

निजसुखमयनित्यनिरुपमाकारा — நிஜஸுகம் — பிரஹ்மாநந்தம். பிராபஞ்சிக விஷயஸுகங்கள் ஒரு பொருளை முன்னிட்டு ஏற்படக் கூடியவை. ஸுக ஸாதனமான பொருள்கள் அநித்தியமாதலின், அவற்றால் ஏற்படக் கூடிய விஷய ஸுகங்களும் அநித்தியமே யாகும். பிரஹ்மாநந்தமோ எக்காலத்திலும் அழியாதது; ஆதலின் அவிநாசி; நித்தியமானது.

நிருபமாகாரா :— உவமையற்றஸ்வரூபமுடையவள்; இதனோடு உபலக்ஷணமாய், உயர்வுமில்லாதவள் என்று கொள்ளுதல் தகுதியாம்.

இதனால், சித்சக்தியின் ஸ்வரூப லக்ஷணம் கூறியதாயிற்று. சித்து = ஞானம்.

நிஜஸுகமயம் என்பதனால், ஆநந்த கனத்துவமும் நிருபமாகாரா என்பதனால், அநந்தத்துவம், என்றால், ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேதங்களற்ற வஸ்து பரிச்சேதமின்மையும், தேசபரிச்சேதமின்மையும், நித்தியம் என்பதனால் காலபரிச்சேதமின்மையும் ஸித்திக்கின்றன.

आद्या शक्तिः சுத்த (நிர்விகல்ப) பிரஹ்மத்தின் ஸ்வரூப லக்ஷணமே ஆத்யா சக்தியாகும். இது ஸம்பிரதாய் அர்த்தமாம். பிரஹ்மஸ்புரணத்தையே ஆத்யா சக்தியாகக் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.

இந்த இரண்டுஶ்லோகங்களாலும் சுத்தப் பிரஹ்ம வடிவ பிரகாச பிந்துவும், பரப்பிரஹ்ம வடிவ ஸ்புரணஸ்வரூப விமர்ஶபிந்துவும் பிரதிபாதிக்கப்பட்டுள்ளன.

अकारः सर्ववर्णाग्र्यः प्रकाशः परमः शिवः ।
हकारोऽन्त्यः कलारूपो विमर्शाख्यः प्रकीर्तितः ॥

என்றபடி, பிரகாசபிந்துவானது அகாரத்தினாலும், விமர்ஶபிந்துவானது ஹகாரத்தினாலும், குறிப்பிடப்பட்டுள்ளன. "அஹம்" என்பது பிரகாசவிமர்சங்களின் ஐக்கியஸ்வரூபமாகும்.

अहमेव परं ब्रह्मेत्याहुरात्मानमद्वयम् ।
चिन्मात्रं सर्वगं सत्यं संपूर्णं सुखमेव हि ॥

பிரகாசவிமர்சங்களின் ஐக்கியமே ஆநந்தஸ்வரூபமாகும். இவ்விஷயம்,

स वै नैव रेमे। तस्मादेकाकी न रमते। स द्वितीयमैच्छत्। स हैतावानास । यथा स्त्रीपुमाँसौ संपरिष्वक्तौ स इममेवात्मानं द्वेधापातयत्। ततः पतिश्च पत्नी चाभवतामिति ॥

பிரஹதாரண்யக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. ஏகாகியான சுத்தப் பிரஹ்மமானது ஆநந்தஸ்வரூப ரமணத்தின் பொருட்டு பதி-பத்நீ ரூபமாய்ப் பிரகாசவிமர்ச ரூபபாவத்தைப் பெற்றதென்பது மேற்கூறிய உபநிஷத் வாக்கியத்தின் தாத்பரியமாம். (2)

(அ--கை) பிரகாசவிமர்சங்களின் ஸ்புடமாகிய ஸாமரஸ்யம் இந்த மூன்றாவது ஶ்லோகத்தில் கூறப்படுகின்றது.

स्फुटशिवशक्तिसमागम-
बीजाङ्कुररूपिणी पराशक्तिः ।
अणुतररूपानुत्तर-
विमर्शलिपिलक्ष्यविग्रहा भाति ॥ ३ ॥

(ப--ரை) **स्फुट** = வியக்தமான, **शिवशक्ति** = சிவசக்திகளின், **समागम** = ஐக்கியத்தினால், **बीजाङ्कुररूपिणी**—இனியுண்டாகப் போகும் ஸகலஜகத்திற்கும் விதையின் முளையைப் போன்றவளும், **अणुतर**—மிகவும் ஸூக்ஷ்மமான, **रूप** = ஸ்வரூபத்தையுடைய **अनुत्तर** = யாவற்றிற்கும் முதன்மையானதும், **विमर्श** = எல்லாவற்றிற்கும் இறுதியிலுள்ளதுமான, **लिपि** = எழுத்துக்களால், அதாவது:—அநுத்தரலிபியான அ--காரத்தினாலும், விமர்சலிபியான ஹ--காரத்தினாலும் ஆன "அஹம்" என்னும் பதத்தின், **लक्ष्य** = லக்ஷ்யார்த்தத்தினால் அறியத்தக்க, **विग्रहा** — ஸ்வரூபத்தையுடைய **पराशक्तिः**—பராசக்தியானவள், **भाति**—ஸ்வயம் பிரகாசமாய் விளங்குகின்றனள்.

(வி–வுரை) முன் இரண்டாவது ஶ்லோகத்தில், கூறப்பட்ட ஆதர்ஶவடிவ ஆத்யாசக்தியே இந்த ஶ்லோகத்தில் நன்கு விமர்சிக்கப்படுகின்றது. பிரகாச விமர்ச ஸாமரஸ்யவடிவ பராஹந்தையே பராசக்தியாம். இதுவே பரா காமகலையுமாகும்.

பராஹந்தா விமர்சம்.

अहं सर्वमिदं विश्वं परमात्माहमच्युतः ।
नान्यदस्तीति संविद्या परमा सा ह्यहंकृतिः ॥

(தா--ம்) "காணப்படும் இந்த பிரபஞ்சம் முழுமையும் நானே ; என் ஸ்வரூபம்தான் இந்த எல்லாமும். நிர்விகாரியாகும் (அச்யுத) பரமாத்மாவே நான். என்னைவிடப் பின்னமாக யாதொரு பொருளுமில்லை" என்னும் எந்த அகண்ட ஞானமுள்ளதோ அதுவே பராஹந்தையெனப்படும்.

இந்த அஹந்தா ஸ்வரூபத்தில், பிரகாச விமர்சங்களாகும் பிரஹ்மாத்ம ஸ்வரூபங்களின் ஸாமரஸ்யம் (ஐக்கியம்) வியக்தமாய் அநுபவிக்கப்படும்.

प्रकाशस्यात्मविश्रान्तिरहंभावो हि कीर्तितः ।
उक्ता च सैव विश्रान्तिः सर्वापेक्षानिरोधतः ॥

(தா--ம்) "பிரகாசத்தினுடைய ஆத்ம விஶ்ராந்தியே பராஹந்தையென்று கூறப்படும். எல்லா அபேக்ஷைகளும் நிரோதம் பண்ணப்பட்ட காரணத்தால், இந்த பராஹந்தையானது விஶ்ராந்தியென்று கூறப்பட்டது" என்னும் பிரமாணமும் ஈண்டறியத்தக்கது.

வீஜாங்குரரூபிணி — வித்திலிருந்து முளையும், முளையிலிருந்து வித்தும் உண்டாதலால் பீஜாங்குரந்யாயமென்று கூறப்படும்; இது அநாதியானது. பீஜம் முதலா அங்குரம் முதலாவென்று கூறமுடியாது. இது காரண காரிய பிரவாஹத்தை ஸூசிப்பதாகும். ஈண்டு வித்தியாப்பிரபஞ்ச காரண காரியத்துவமே கூறப்படுவதாகும்.

வித்தியாப் பிரபஞ்ச பீஜம் சித்சக்திக்கு அபிமுகமாயுள்ள சிவமும், வித்யாப் பிரபஞ்ச அங்குரம் சிவத்தின் ஸ்வரூபஞானமான பராஹந்தையை யுணர்த்தும் பராசக்தியேயாகுமென்பது ரஹஸ்யமாம்.

अणुतररूपानुत्तरविमर्शलिपिलक्ष्यविग्रहा । अनुत्तरविमर्शलिपिः — அகாரமும், ஹகாரமுமாகும் இரண்டெழுத்துக்கள்: இந்த இரண்டு எழுத்துக்கள் மாத்ருகைகளின் ஆதியந்தங்களைக் குறிக்கின்றன.

மாத்ருகைகள் ஐம்பத்தொன்றென்பது பிரஸித்தமாயினும், நாற்பத்தொன்பதென்பதே சிறப்புடையதாகும். ளகரம் லகாரத்திலும், க்ஷகாரம் ககார ஷகாரங்களிலும் அந்தர்ப்பூதமாவதால்,நாற்பத்தொன்பதென்னும் பக்ஷமே சரியானது.

வித்தியாப்பிரபஞ்சம் முழுமையும் அ-ஹ-என்னும் இரண்டெழுத்துக்களில் அடங்கியிருக்கின்றது.

அதன் விமர்சமாவது:—அ=பிரகாசஸ்வரூப சுத்தப்பிரஹ்மம். ஹ = விமர்ஸவடிவ பிரஹ்மவித்தை; ஜீவப்பிரஹ்மைக்கிய அபரோக்ஷ ஸாதனமான அகண்டாகாரவ்ருத்தி. அஹம்=வாச்சியார்த்தம் முமுக்ஷு ஜீவன்; லக்ஷ்யார்த்தம்—கூடஸ்தன் ; ஆத்மா.

அ = ஜகத்காரண பரமேஶ்வரன். சுக்கிலபிந்து. ஹ = ஜகத்காரண சித்சக்தி. ரக்தபிந்து. அஹம் = சிவ தத்துவம் முதல் பிரிதிவீ தத்துவம் வரையுள்ள முப்பத்தாறு தத்துவ வடிவபிரபஞ்சம். அதாவது அஹந்தா ஞானத்தால் விமர்சிக்கப் படுவதான இதந்தைக்கு விஷயமான ஸர்வதிரிசியப் பிரபஞ்சம்.

பிரபஞ்சம் சப்தமயீ, அர்த்தமயீ, சக்ரமயீ, தேஹமயீ என நான்கு வகைப்படும். இவற்றுள் சக்கிர மயம் தேஹமயம் என்னும் இரண்டும் அர்த்தமயத்திலேயே அடங்குவனவாகும்.

அர்த்தம் சிவஸ்வரூபமென்றும், சப்தம் சக்திஸ்வரூப மென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. சிவசக்திகள் அபின்னமென்னுங் காரணத்தால் சப்தார்த்தங்களும் பரஸ்பரம் அபின்னமே. ஒன்றைவிட்டு மற்ருென்றில்லை; ஆதலின் அவற்றிற்குப் பரஸ்பரம் அவிநாபாவ ஸம்பந்தமுண்டு. இத்தகைய சப்தார்த்தவடிவ ஸர்வப் பிரபஞ்சமும் "அஹம்" என்பதைக் காரணமாயுடையதாகும்.

அ = அர்த்தப் பிரபஞ்ச காரணம். ஹ = சப்தப்பிரபஞ்ச காரணம். வித்தியாப்பிரபஞ்சத்தின் அர்த்தமயப் பகுதியானது ஆத்மாபின்ன பிரஹ்ம ஸ்வரூபமாகவும், சப்தமயப் பகுதியானது ஜீவப் பிரஹ்மைக்கிய போதக மஹாவாக்கிய வடிவமாகவும் இருக்கின்றன.

ஆத்மஸ்வரூபத்தையும், பிரஹ்மஸ்வரூபத்தையும், அவற்றின் ஐக்கியத்தையும் ஸந்தேஹ விபரீதங்களறப் போதிக்கும் ஸத்குரு, ஶ்ருதி, சாஸ்திரங்கள் முதலியன யாவும் சப்தரூப வித்தியாப் பிரபஞ்சத்தில் அடங்கி

"அஹம்" என்பதனல் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. சாஸ்திரங்கள் யாவும் சப்தவடிவம்; சப்தம் வாக்ரூபம்; வாக்குக்கள் நான்குவகை; அவை பரா, பஶ்யந்தீ, மத்தியமை, வைகரீயென்பனவாம்.

பராஹந்தாஸ்புரணமே பராவாக்காகும். பஶ்யந்தீ முதலியவை பராவாக்கின் காரியங்களாகும். இவ்விஷயம்,

अहमात्मिकान्तर्गतसमस्तवर्णकदम्बकपरावाक् अकारादि-हकारान्तमेकोनपञ्चाशदक्षररूपिणी ॥

என்னும் பிரமாணத்தால் நன்கு விளங்குகின்றது.

சப்தாத்மக வித்தியாப்பிரபஞ்ச காரணத்தன்மை அஹம்பத வாச்சியத்திலும், காரணுதீதத்தன்மை அஹம் பத லக்ஷ்யார்த்தத்திலும் இருக்கின்றன. அஹம்பத லக்ஷ்யம் அணுதர ரூபமானது.

"अणोरणुतरा देवी महतोऽपि महीयसी" என்றும், "सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं तत्त्वमेव त्वमेव तत्" என்றும், "एष आत्मान्तर्हृदयेऽणीयान् व्रीहिरूपाद्वा सर्षपाद्वा" என்றும் உள்ள பிரமாணங்கள் ஆத்ம ஸ்வரூபத்தின் அதிஸூக்ஷ்மத்தன்மையை நிரூபிக்கின்றன.

"शिवशक्तिसमागम" சிவசக்திகளின் ஸம்யோகம். சிவ சக்திகள் அபின்னமாதலின் ஒரே பொருள். ஒரேபொருளுக்கு ஸம்யோகம் எங்ஙனம் பொருந்தும்? எனின் அதற்கு ஸமாதானம் கூறப்படுகின்றது:—

சிருஷ்டிக்கு முன்னர் ஏகமாயும் அத்விதீயமாயும், ஸத்தாயுமுள்ள பிரஹ்மமே இருந்தது. மஹாப்பிரளயத்தில் ஸர்வபோக்கியப் பிரபஞ்சங்களும் மாயையில் லீன

மாகி, அந்தமாயையும் நிர்விகல்பக, ஸ்வப்பிரதிஷ்டித சுத்தப் பிரஹ்மத்தில் லயப்பட்டிருந்தது. ஸர்வ ஜீவர்களோவெனின், மாயையிலும், பிரஹ்மத்திலும் லயமாயிருந்தனர். ஜீவர்களின் ஜடோபாதியாகிய அந்தக்கரணம், மாயையிலும், சேதனம் பிரஹ்மத்திலும் லீனமாயிருந்தன. மாயையில் லீனமாயுள்ள அந்தக்கரணத்தில்தான், அந்த அந்த அந்தக்கரண விசிஷ்ட ஜீவனது தர்மாதர்மரூப ஸகல கர்மங்களின் வாஸனைகள் அதிஸூக்ஷ்மமாய் அடங்கியிருக்கும்.

ஜீவர்களது சேதனும்சமான கூடஸ்தன் பிரஹமத்தில் ஐக்கியமாயிருந்ததென்று கூறினேமல்லவா, அது பிரஹ்மத்தின் சித்ஸ்வரூபமேயாகும்.

மறுபடியும் ஜன்மாந்தரத்தில் ஜீவர்களின் தர்மாதர்மங்கள் பயன் தரும் பரிபாகாவஸ்தையை யடையும் போது, நிர்விகல்பமாயும், ஸ்வப் பிரதிஷ்டிதமாயுமுள்ள பிரஹ்மத்தில் ஒரு கல்பிதமாயை தோன்றிற்று.

பிரஹ்மம் ஸ்வபாவமாகவே விகல்ப ரஹிதமானது. அதனிடத்தில் கற்பிதமாய்த் தோன்றிய மாயையோ ஜடம். ஆதலின், அதுவும் நிர்விகல்பமானது. இங்ஙனம் மாயையும் பிரஹ்மமும் நிர்விகல்பகமாயும் ஸ்வப்பிரதிஷ்டிதமாயும் இருந்துவிடின், போக்கியப் பிரபஞ்சமும், தர்மாதர்மங்களின் பயனான ஸுக துக்கங்களை யநுபவிக்கும் போக்த்ருத்வ ஜீவபாவமும் எங்ஙனம் ஏற்படும்? ஆதலின் பிரஹ்ம மாயைகள் இரண்டிற்கும் பொதுவான சித் சக்தியினிடத்தில் சிறிதளவு (ஸ்பந்தம்) அசைவு உண்டாகி, அது பிரஹ்மத்தைத் தனக்கு (சித்சக்திக்கு) அபிமுகமாக்கித் தானும் பிரஹ்மமும் ஸமரஸப்பட்டுக் கலந்து, ஒரு

வடிவமாய் விளங்கிற்று. இங்ஙனம் சித்சக்தியும் பிரஹ்மமும், கண்ணாடியும் முகமும் போல, ஒன்றுக்கொன்று எதிர் முகமாய் உள்ள ஸ்திதியே சிவசக்தி ஸமாகமமாகும். இந்த ஸமாகமத்தினால்தான், அஹம் என்னும் ஞானமேற்பட்டது. இந்த அஹந்தாஸ்வரூப சிவசக்திகளின் ஐக்கிய வடிவமானது மாயையில் அநுப்பிரவேசம் செய்தது.

சித் சக்தியில் ஏற்பட்ட அசைவே கல்பித ஜட சக்தியாகிய மாயை தோன்றியதற்குக் காரணமாயிற்று. சக்தி--சிவம் என்னும் வியவகாரமும் இவ்விடத்தில் தான் தோன்றிற்று.

அஹந்தா ஞானத்தோடு கூடிய சிவாபின்ன சித்சக்தி மாயையில் அநுப்பிரவேசம் செய்து சிருஷ்டவ்வியமான ஜகத்தைப்பற்றி யாலோசித்துச் சிருஷ்டி செய்தது.

இந்த மாயைக்குத்தான் மாஹேஸ்வரீ சக்தி யென்று பெயர். இது ஸ்வதந்திரமானதன்று. "एषा माहेश्वरी शक्तिः न स्वतन्त्रा" அநாத்ம திருஷ்டியோடு கூடிய இந்த மாஹேஸ்வரீ சக்தி ஸ்வதந்த்ரமானதன்று. இத்தகைய மாயையை உபாதியாய்க்கொண்ட சித்சக்தியபின்ன பரப்பிரஹ்மந்தான் காரணேஸ்வரனெனப்படுவன். இந்த காரணப்பிரஹ்மத்திற்குச் சக்திகள் பலவுள; அவற்றுள் ஸ்வாபாவிகீ சக்திதான் சித்சக்தி—இது ஸ்வபாவமாதலின் பாரமார்த்திகம். மற்றவையாவும் ஆகந்துகீ சக்திகளாகும். இவை மாயையின் காரியங்கள். இச்சாக்ஞானக்கிரியா வடிவினவாம். இவை அவித்தியாப் பிரபஞ்ச சிருஷ்டிக்கு இன்றியமையாதனவாகும். परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च என்றும், य एको जालवानीशत ईशनीभिः என்றும்

கூறும் உபநிஷத் பிரமாணங்கள் ஈண்டறியத்தக்கன. (3)

स्वपरावभासनक्षम आत्मा विश्वस्य यः प्रकाशोऽसौ ।
अहमिति स एक उक्तोऽहन्तास्थितिरीदृशी तस्य ॥

(அ—கை) காரணேஶ்வரவடிவ காமகலா ஸ்வரூபம் இந்த நான்காவது ஶ்லோகத்தில் கூறப்படுகின்றது.

परशिवरविकरनिकरे
प्रतिफलति विमर्शदर्पणे विशदे ।
प्रतिरुचिरुचिरे कुड्ये
चित्तमये निविशते महाबिन्दुः ॥ ४ ॥

(ப—ரை) परशिव = பிரகாசஸ்வரூபமாகும் சிவமென்னும், रवि=சூரியனுடைய, करनिकरे = கிரணங்களின் கூட்டமானது, विशदे = விளக்கமான, विमर्शदर्पणे = ஸ்புரண சக்தி ஸ்வரூப கண்ணாடியில், प्रतिफलति = பிரதிபலிக்கும்பொழுது இங்ஙனம் பிரதிபலிக்கும் காரணத்தினால், प्रतिरुचिरुचिरे = பிரதிப் பிரகாசத்தினால் ரமணீயமாய் விளங்கும், चित्तमये कुड्ये = ஞானரூபமான சித்தமென்னும் சுவற்றில், महा-बिन्दुः = பிரகாசவிமர்சாத்மகமான "அஹம்" என்னும் மஹாபிந்துவானது, निविशते = பிரவேசிக்கின்றது.

(வி-ரை) சூரியனுக்கெதிரேயுள்ள கண்ணாடியில் பிரதிபலித்த சூரியகிரணங்களானவை அக்கண்ணாடி சற்று கோணியபோது அதில் பிரதிபலித்த கிரணங்கள் சுவற்றில் தோன்றும். சுவற்றில் பிரதிபலிக்கும் கண்ணாடிப் பிரதிபலனம்தான் இந்த ஶ்லோகத்தால் நிரூபணம் செய்யப்பட்ட மஹாபிந்து வாகும்.

ஸூர்யன்—பிரகாசபிந்து; சுத்தப்பிரஹ்மம். கண்ணுடி— விமர்சபிந்து; சித் சக்தி. சூரிய கிரணங்கள் கண்ணுடியில் பிரதிபிம்பித்தலே சிவ சக்தி ஸமாகமமென்னும் அஹந்தா ஸ்புரணமாம். இந்த அஹந்தாஸ்புரணத்தோடு கூடிய பிரஹ்மமே சித் சக்தியபின்ன பரப்பிரஹ்மமாம். சுவறு என்பது ஜடமாயை. கண்ணுடியில் தோன்றிய ஸூர்யப் பிரதிபிம்பம் சுவற்றில் தோன்றுகின்றது. இங்ஙனம் தோன்றுவதற்குக் கண்ணுடி சூரியனுக்கெதிரே நேராக இருத்தலினின்றும் சற்று கோணலாகத் திரும்ப வேண்டும். இங்ஙனம் கண்ணுடியின் கோணுதலைத்தான் சித் சக்தியின் ஸ்பந்தம் என்று கூறப்பட்டது. ஸர்வ பிராணிகளின் அத்ருஷ்ட பரிபாகமே கண்ணுடியாகிய சித்சக்தியில் அசைவையுண்டாக்கியது. தர்ப்பண (கண்ணுடி) பிரதிபிம்பத்தோடு கூடிய சூரியகிரணங்கள் சுவற்றில் தோன்றுவது போல, சித்சக்தியபின்ன பரப்பிஹ்மமானது மாயையில் அநுப்பிரவேசம் செய்தது. காரணேஶ்வரன்—மாயாவச்சின்ன சேதனம்.

स्वेच्छया सृष्टमाविश्य विश्वं यो मनसि स्थितः ।
स्तोत्रेण स्तूयतेऽनेन स एव परमेश्वरः ॥

व्याख्यानं—स्वेच्छा नाम स्वशक्तिर्मायाख्या, तया सृष्टं चिदात्मनि विवर्तितं विश्वं स्थूलं सूक्ष्मं च समष्टिव्यष्टिरूपं क्रमेणाविश्य, सूर्यबिम्बमिव दर्पणे तत्सन्निहिते कुड्यादौ वाऽऽभासद्वारा प्रविश्य यो मनसि वृत्तिमदन्तःकरणे स्थितः तत्र विशेषरूपेणाभिव्यक्तिमुपगतः स एव परमेश्वरोऽनेन स्तोत्रेण स्तूयते ॥

(மானஸோல்லாஸம்) 3 சுலோ.

चित्तमये प्रतिरुचिरुचिरे कुड्ये । ज्ञानैकस्वरूपे प्रतिप्रकाशमनोहरे कुड्ये—சித்ஸ்வரூபத்தில் அத்தியஸ்தமாய்த் தோன்றுவது சித்தமாகும். இது சுத்த ஸத்துவப் பிரதானமாதலின் ஞானவடிவமெனப் பொருள் செய்யப்பட்டது, ஸர்வக்ஞத் துவாதி குணங்கள் தோன்றும் உபாதியாதலின், ஞான சக்தி.

महाबिन्दुः—பரிபூர்ணோஹம், ஸர்வக்ஞோஹம் என் பனவாதி வடிவஞானத்தோடுகூடிய பரமேஸ்வரன்.

குறிப்பு:—முதல் ஸ்லோகத்தினல் பிரகாசபிந்துவும், இரண்டாவதால் விமர்ஸபிந்துவும், மூன்ருவதால் பிரகாச விமர்சங்களின் ஐக்கியவடிவ பராகாமகலையும், நான்கா வதால் ஜகத்காரண மஹாபிந்துவும் கூறப்பட்டன. மஹா பிந்துவையே தேஜோபிந்துவென்றும் சாஸ்திரங்கள் கூறு கின்றன.

परशिवरविः—பரப்பிரஹ்மமாகும் ஸூர்யன். **प्रकाशमात्र-तनुः** — பிரகாசமொன்றனையே சரீரமாயுடைய தன்மை. இது பிரஹ்மத்திற்கு விசேஷணமாக முதல் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதால், இங்கே ஸூர்யனேடு உவமிக்கப் பட் டது அறியத்தக்கது.

இந்த நான்காவது ஸ்லோகத்தால் முதல் மூன்று சுலோகங்களின் விஷயத்தையும் ஆசிரியர் ஸிம்ஹாவலோ கன நியாயத்தால் குறிப்பிடுகின்றனர்.

पराशिव பதத்தினல் முதல் சுலோகத்தின் விஷயமும், **विमर्शदर्पणे** என்பதனல் இரண்டாவது ஸ்லோகத்தின் தாத் பரியமும், प्रतिफलति என்பதனல் மூன்ருவது ஸ்லோகத்தின் அர்த்தமும் குறிப்பிடப்படுவதறியத்தக்கது.

பிரகாசபிந்துவை ஸோமனென்றும், விமர்சபிந்துவை அக்கினியென்றும், தேஜோபிந்து, மஹாபிந்துவெனக் கூறப்படும், மிச்ரபிந்துவை ஸூர்யனென்றும் கூறுவது ஸம்பிரதாயமாகும்.

विमर्शदर्पणे—விமர்சமே கண்ணாடி. இவ்விஷயம், முன் இரண்டாவது ஶ்லோகத்தில் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

प्रतिफलनं — ஸ்வரூப ஸாக்ஷாத்காரம். பரமேஶ்வரனுக்கு ஆவரணமின்மையால், வ்ருத்தியின் அவசியமில்லை. ஆதலின், ஸ்வபாவஸ்புரணமே ஸாக்ஷாத்காரமாகும். இந்த நான்காவது ஶ்லோகம் முதல் ஏழாவது ஶ்லோகம் முடிவு வரை மஹாபிந்து வடிவ காரணேஶ்வரஸ்வரூபம் நிரூபிக்கப்படுவது அறியத்தக்கது. (4)

(அ--கை) ஜகத்காரண காமகலா ஸ்வரூபம் இந்த ஐந்தாவது ஶ்லோகத்தில் ஸ்துதிக்கப்படுகின்றது.

चित्तमयोऽहङ्कारः
सुव्यक्ताहार्णसमरसाकारः ।
शिवशक्तिमिथुनपिण्डः
कबलीकृतभुवनमण्डलो जयति ॥ ५ ॥

(ப-ரை) **चित्तमयः** = ஞானவடிவமான, **अहङ्कारः** = ஸ்வப்பிரகாச பிரஹ்மத்தின் விமர்சமான பராஹந்தாஸ்வரூபமானதும், **सुव्यक्त** = நன்கு விளக்கமானதுமான, **अ-ह-अर्ण** = அகாரம், ஹகாரம், என்னும் இரண்டு அக்ஷரங்களி

னுடைய, **समरस**=ஐக்கியமான, அதாவது, ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததென்றாவது தாழ்ந்த தென்றாவது கூறமுடியாத ஸமத்துவமுடைய, **आकार**=ஸ்வரூபத்தோடு விளங்கும், **शिवशक्ति मिथुनपिण्डः**—"பிரகாச விமர்சங்கள்" என்னும் சிவசக்திகளின் ஐக்கிய வடிவமாகும் காமகலையானது **कबलीकृतभुवनमण्डलः**—சப்தார்த்தவடிவ ஸர்வப்பிரபஞ்சத்தையும் தனக்குள் அடக்கிக்கொண்டு, **जयति**—ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகின்றது.

(வி--ரை) அஹம் என்னும் காமகலாஸ்வரூபம் இந்த ஶ்லோகத்தில் ஸ்துதிக்கப் படுகின்றது. **शिवशक्तिमिथुन-पिण्डः**—இங்கே சக்தியென்னும் பதம் மாயையைக் குறிக்கின்றது.

मिथुनपिण्डः—தாதாத்மியஸ்வரூபம்: சேதனமும் ஜடமாயையும் ஒன்றுபட்டதன்மை. இருட்டும் வெளிச்சமும் போல் பரஸ்பரம் விரோதஸ்வபாவமுள்ள ஜடசேதனங்கள் எங்ஙனம் ஒன்று படுமெனின், ஒன்று பட்டதாகக் கூறுவது அத்தியாஸமே யாகும். பிராணிகளின் தர்மாதர்மங்கள் பயன்தரத் தயாராய் இருக்கும்போது, போக்யரூபப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும் இச்சையுண்டாகின்றது. இந்த இச்சைக்குத்தான் ஈக்ஷணம், காமம், தபஸ், விசிகீர்ஷையென்னும் பெயர்கள் அமைந்துள்ளன.

स ईक्षत लोकान्नु सृजा इति । सोऽकामयत । तपसा चीयते ब्रह्म । என்னும் ஶ்ருதிகள் ஈக்ஷணகாமாதிகளைத் தெரிவிக்கின்றன. ஈக்ஷணம், காமம், தபஸ் முதலியவற்றிற்குச் சாந்தாசக்தி யென்று பெயர். இச்சா-ஞான-கிரியைகளின் ஸமஷ்டி வடிவ இந்த சாந்தாசக்திதான் மாயாசக்தியெனப்படும். இது அதிரஹஸ்யமானது. இவ்விஷயம்,

अवशिष्टैः प्राणिकर्मभिश्च तस्यां मायायां विलीयैव क्रमेण प्राप्तपरिपाकैः स्वफलप्रदानाय परमेश्वरस्य सिसृक्षात्मिका मायावृत्तिर्जन्यते । सैषा मायावस्था ईक्षणकामतपोविचिकीर्षादिशब्दैरभिधीयते ॥ 'विचिकीर्षुर्घनीभूत्वा क्वचिदभ्येति बिन्दुताम्'। परिपक्वकर्मभेदाद्धनीभावः तदर्थव्यापारो विचिकीर्षा । परिपक्वकर्माकारपरिणतमायाविशिष्टं बिन्दुः तदिदमविभागावस्था अव्यक्तमुच्यते ॥

என்னும் ஸூதஸம்ஹிதையின் வியாக்கியானத்தால் நன்கறியக் கிடக்கின்றது.

அத்தியாஸ லக்ஷணமாவது:—अतस्मिंस्तद्बुद्धिः—அதுவல்லாத (பாம்பல்லாத) ஒன்றில் (கயிற்றில்), அதன் (பாம்பின்) ஞானம். கயிற்றில் பாம்பின் தோற்றம் அத்தியாஸமெனப்படும்.

ஸச்சிதாநந்த அத்வயப்பிரஹ்மத்தில், அஸத், ஜட துக்க (துவைத) மாயை தோன்றிற்றென்று கூறுதல் அத்தியாஸமாகும். இந்த மாயை ஸத்துமல்ல; அஸத்துமல்ல; ஸதஸத்துமல்ல: இது பிரஹ்மத்தைவிடப் பின்னமுமல்ல; அபின்னமுமல்ல; பின்னபின்னமுமல்ல. இன்ன தன்மைத்தெனக் கூறமுடியாத அநிர்வசனீயமாம். இத்தகைய அநிர்வசனீய (மித்தியா) மாயையில் அநுப்பிரவேசம் செய்த சேதனம் ஈஸ்வரனெனப் படுவன். ஈஸ்வரனும் மாயையும் சிவ சக்தி மிதுனமெனப்படுவர். இந்த மிதுனம் உண்மையும் பொய்யுங் கலந்த ஒருவடிவமாகும்.

சிவக்கக் காய்ச்சப்பட்ட இரும்புருண்டையானது நெருப்பு உருண்டையாயிருக்கின்றதென்றும், இரும்பு எரிக்கின்றதென்றும் தோன்றும்படி செய்கின்றது.

ஆத்மாநாத்மாக்களுக்கு, அதாவது, பிரஹ்ம மாயைகளுக்கு ஸாமாநாதிகரண்யமே ஸம்பவியாது. ஸம்பவியாதாகவே, அவற்றின் பரஸ்பரசேர்க்கை (மிதுனீபாவம்) எங்ஙனம் பொருந்தும்? எனின், பொருந்தாது. ஆயினும் சாஸ்திரம் கூறுகின்றதே யெனின், அங்ஙனம் கூறுவது கற்பனை: மாயை கல்பிதம், ஆதலின் மாயைக்கும் பிரஹ்மத்திற்குமுள்ள ஸம்பந்தமும் கற்பனையே. சேதனத்தின் அநுப்பிரவேசமும் கல்பிதமே. அதனால் ஈஶ்வரத்துவம் கற்பனை. ஜகத்தும் கற்பனை. ஜகத்திற்கு ஈஶ்வரன் காரணனென்பதும் கற்பனை,

कबलीकृतभुवनमण्डल: — எதனால் ஸகலலோகங்களும் விழுங்கப்பட்டுள்ளனவோ அது. அது சிவசக்தி மிதுன பிண்டமேயாகும். பரப்பிரஹ்ம மாயைகளின் தாதாத்மிய வடிவமும் இதுவே. ஸர்வப்பிரபஞ்சங்களின் அத்தியந்தாபாவம் பரப்பிரஹ்மத்திலும், பிராகபாவம் மாயையிலும் உள்ளதென்பது அத்வைத சாஸ்திரத்தின் துணிபாம்.

सुव्यक्ताहार्ण समरसाकार:—விளக்கமான அகாரஹகாரங்களின் சேர்க்கையான அஹம் ஸ்வரூபமானது.

चित्तमय: अहङ्कार: — ஞானஸ்வரூபமானதும் அகண்டமானதுமான அஹம்பத வாச்சியம்; சித்தமயமென்பது சுத்த ஸத்வோபாதியாகும் மாயாமயம். இதனால் ஏற்பட்ட அஹம்பாவம் பிரபஞ்ச சிருஷ்டியின் ஸாதனவடிவ இச்சாஞானக்கிரியைகளோடு கூடியது.

जयति — ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகின்றது. அஸத் ஜட துக்க ஸ்வரூப பிரபஞ்சகாரணமான மாயா விசிஷ்ட காரணேஶ்வரவடிவத்தின் ஸ்துதியானது ஜயதி யென்னும் பதத்தால் அறிவிக்கப் படுகின்றது. துக்கமய

மான பிரபஞ்சகாரணம் ஸ்துதிக்கப்படுதல் தகுதியுடைய தாகுமா? எனின்,

ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தில் துக்க மென்பதே கிடையாது. துக்கமானது அநுகூலமாயுள்ள பிரியவஸ்து ஸித்திக்காததனாலும், பிரதிகூலமாயுள்ள அப்பிரியவஸ்துவின் ஸித்தியாலுமுண்டாவதாகும். அநுகூல, பிரதிகூலங்களாகும் பிரியாப்பிரியங்கள் ஜீவனால் கற்பிக்கப்பட்டவையே யன்றி, ஈஸ்வர சிருஷ்டமன்று. ஒரே ஸ்திரீ வியக்தியானது காமுகனுக்குப் பிரியவஸ்துவாகவும், வைராக்கிய புருஷனுக்கு அப்பிரிய வஸ்துவாகவும் இருக்கின்றது. இங்ஙனமே இந்தப் பிரபஞ்சமும் தத்துவஞானிக்கு ஆநந்தமாகவும், பாமர அக்ஞானிக்குத் துக்கமாகவும் விளங்குகின்றது. அன்றியும், ஈஸ்வர சிருஷ்டமான இந்தப் பிரபஞ்சம் இல்லாவிடில், தீவிரதர முமுக்ஷுக்களுக்கு அத்வைதஞானம் உண்டாகவே உண்டாகாது. ஜீவகற்பித துவைதத்தின் மித்யாத்துவ நிச்சயமே யன்றோ அத்வைத ஞானத்தின் முக்கியஸாதனம்?

अबाधकं साधकं च द्वैतमीश्वरनिर्मितम् ।
अपनेतुमशक्यं चेदास्तां तद्द्विष्यते कुतः ॥

(தா—ம்) ஈஸ்வரனாலுண்டாக்கப்பட்ட பிரபஞ்சம் பாதமற்றதும், ஸாதகமானதுமாகும்; அதைத் தள்ளுதற்கும் முடியாது. ஆகையால் அது (பிரபஞ்சம்) நன்றாய் இருக்கட்டும். ஏன் அது துவேஷிக்கப்படல் வேண்டும்?

அத்வைத ஞானோத்பத்திக்குச் சாதனமாயும், பிரஹ்மஸ்வரூபத்தின் அபிவியஞ்சகமாயுமுள்ள இந்தப் பிரபஞ்சம் முமுக்ஷுவுக்குத் தள்ளத்தக்கதல்ல. ஆதலின் முமு

ஸுஷுப்திற்கு ஸாதகமாயுள்ள ஜகத்தின் காரணனுகும் பரமேஸ்வரன் ஸ்துதிக்கத் தக்கவனேயாவன்.

ஸகல கற்பனைகளின் நாசவடிவ அதிஷ்டானஸ்வரூப ஸன்மாத்ரமாய் விளங்குவதே ஜயதி யென்பதன் பாவார்த்தமாம். (5)

(அ--கை) முன் ஸ்லோகத்தில் கூறப்பட்ட சிவசக்திகளின் மிதுனபிண்டவடிவ மாயாவிசிஷ்ட பரமேஸ்வரன் இந்த ஸ்லோகத்தில் சுக்கில ரக்த பிந்துக்களின் ஸமஷ்டி வடிவமாக வர்ணிக்கப்படுகிறார்.

सितशोणबिन्दुयुगलं
विविक्तशिवशक्तिसंकुचत्प्रसरम् ।
वागर्थसृष्टिहेतुः
परस्परानुप्रविष्टविस्पष्टम् ॥ ६ ॥

(ப-ரை) विविक्त शिवशक्तिसङ्कुचत्प्रसरं=பரஸ்பரம் ரமிக்கும் ஸ்வபாவமுள்ள சிவசக்திகளின் ஸங்கோச விகாஸஸ்வரூபமானதும், वागर्थसृष्टिहेतुः=பராபஶ்யந்தி முதலிய சப்தப் பிரபஞ்சத்திற்கும், சிவாதி பூமியந்தமான முப்பத்தாறு தத்துவவடிவ அர்த்தப் பிரபஞ்சத்திற்கும் காரணமானதும், परस्परानुप्रविष्टविस्पष्टं=சிவசக்திகள் ஒன்றில் ஒன்று அநுப்பிரவேசம் செய்து சிவம் வேருகவும், சக்தி வேருகவும், விளக்கமாய்த் தோன்றுவதாயுமுள்ள, सितशोणबिन्दुयुगलं—சுக்கிலம், ரக்தம் என்னும் இரண்டு பிந்துக்களின் துவந்துவமானது (जयति) சிறப்பாய் விளங்குகின்றது.

(வி--ரை) முன் நான்காவது ஸ்லோகத்தில் கூறப்பட்ட மஹாபிந்துவே இந்தஸ்லோகத்திலும் அடுத்த எழாவது ஸ்லோகத்திலும் ரக்த சுக்கில மிஸ்ர பிந்துக்களின் ஸ்வரூப காமகலேயாக ஸ்துதிக்கப்படுகின்றது. மாயையில் பிரதிபலித்த சேதனமே மஹாபிந்து வாகுமென்று முன்னர் கூறப்பட்டுள்ளது.

विविक्तशिवशक्तिसङ्कुचत्प्रसरं — சேதனம் மாயையிலும், மாயை சேதனத்திலும் விஹரிப்பதில் தத்பரமாய், ஒன்று ஸங்கோசத்தையும், மற்றொன்று விகாஸத்தையும் பெற்றது; என்றால், சேதனபாகம் மாயையில் ஒடுங்கி மாயை விகாஸத்தையடைந்தது ஒன்று;. இந்த நிலே அவித்யாப்பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமானது. மாயை சேதனத்தில் ஒடுங்கிச் சேதனம் விகாஸத்தையடைவது மற்றொன்று: இது வித்தியாப்பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமானது.

சேதனமாயைகளின் ஸங்கோச விகாஸங்களின் விமர்சமாவது:—

அத்வயம், நிஷ்பிரபஞ்சம் என்பனவாதிகள் சேதனத்தின் லக்ஷணங்களாகும். துவைதம், ஸப்பிரப்ஞ்சம் என்பனவாதிகள் மாயை (சக்தி) யின் லக்ஷணங்களாகும். சேதன மாயைகளின் அந்நியோன்ய கல்பித ஸம்பந்தத்தால் ஒன்றிலொன்று ரமிக்கும் தன்மையைப் பெற்றது. இதனுல் சேதன லக்ஷணங்களாகும் அத்வய நிஷ்பிராபஞ்சியங்கள் மாயையால் ஆவரிக்கப்பட்டு, ஸங்கோச பாவத்தையடைந்து, ஈக்ஷணம், காமம், விசிரீர்ஷை முதலியன விகஸித்துத் தோன்றின. இவை துவைத பிராபஞ்சிக சிருஷ்டிக்கு இன்றியமையாதவை.

இங்ஙனமே, சேதனம் மாயையில் அநுப்பிரவேசம் செய்து, அநிர்வசனீயமாயும், ஜடமாயுமுள்ள மாயாலக்ஷணங்களை மறைத்தொழித்து, ஸத்தையையும், விளக்கத்தையும் தந்தது. ஸத்தும், விளக்கமும் சேதனலக்ஷணங்களாகும்.

இங்ஙனம், சேதனம் மாயோபாதியால் ஈக்ஷணாதிகளையும், மாயை சேதனத்தின் ஆச்ரயத்தால் அஸ்தி (இருப்பு), பாதி(விளக்கங்)களையும் பெற்று, ஸங்கோச விகாஸங்களைப்பெற்றன. இதனால் கற்பித மாயைக்கு இருப்பும், நிஷ்பிரபஞ்சிய அஸங்க சேதனத்திற்குக் காம ஈக்ஷணாதிகளும், சிருஷ்டியாதிகளும் சித்தித்தனவென்றறியத்தக்கது.

சேதனம் சுக்கிலபிந்துவென்றும், மாயை ரக்தபிந்துவென்றும் முன்னர் கூறப்பட்டது. ரக்தபிந்துவென்னும் மாயையின் ஸாபேக்ஷத்தால் சேதனத்திற்குச் சுக்கில பிந்துத்தன்மை ஏற்பட்டதென்பது ரஹஸ்யமாகும்.

परस्परानुप्रविष्ट विस्पष्टं—ரக்த பிந்துவில் சுக்கிலபிந்து அநுப்பிரவேசம் செய்து, அதனால் ரக்த பிந்துவின் ஸபஷ்டத்தன்மையும், ரக்தபிந்துவின் ஆபிமுக்கியத்தன்மையாலும், உபாதித்தன்மையாலும் சுக்கில பிந்துவின் ஸ்பஷ்டத்தன்மையும் ஏற்பட்டன வென்றறிதல் அவசியம்.

वागर्थसृष्टिहेतुः—சப்தார்த்தங்களின் சிருஷ்டிக்கு, முறையே, ரக்த பிந்துவும், சுக்கில பிந்துவும் காரணங்களாகும்.

பரா, பச்யந்தீ, மத்தியமை, வைகரியென்பன வாக்குகளின் பேதங்களாகும். இவற்றின் ஸமஷ்டியே சப்தப்பிரபஞ்சமாம். இதுதான் நாமப்பகுதியெனப்படும். இதற்குக் காரணம் ரக்தபிந்து.

பிரிதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமாய் இருப்பது அர்த்தப் பிரபஞ்சமாகும். இதுதான் ரூபப்பகுதியெனப்படுவது. இதற்குக் காரணம் சுக்கில பிந்து.

ரக்தம், சுக்கிலம் என்னும் இரண்டு பிந்துக்களிலும் சேதனம் அந்தர்யாமியாய் இருப்பதால் நாமரூபங்கள் இரண்டும், இருப்பு (அஸ்தி), விளக்கம் (பாதி) களோடு கூடியிருக்கின்றன. சேதனத்தில் பிரகாச விமர்சங்களின் ஸாமரஸ்யம், இருப்பதனுல் நாமரூபங்களிலும் ஆநந்தம் (பிரியம்) தோன்றுகின்றது. எனவே, ரக்த சுக்கில பிந்துக்களின் காரியமாகிய நாமரூபப் பிரபஞ்சத்திற்கு அஸ்தி, பாதி, பிரியங்கள் சேதன அதிஷ்டானத்தினுல் சித்தித்தமை நன்குணரத்தக்கது.

சுக்கிலபிந்துவிலுள்ள சேதனும்சத்தில் பிரகாசாம்சம் அதிகமாகவும், ரக்தபிந்துவிலுள்ள சேதனும்சத்தில் விமர்சாம்சம் அதிகமாகவும் இருக்கும்.

சுக்கில பிந்துவிற்கு சித்பிந்துவென்றும் ரக்த பிந்துவிற்கு அசித் பிந்துவென்றும், நாமாந்தரங்கள் சாஸ்திரங்களில் விவகரிக்கப்படுகின்றன.

சுக்கில ரக்த பிந்துக்களின் ஸாமரஸ்யத்திற்கு சிதசின்மிச்ர பிந்துவென்று பெயர். இது ஸ்தூலமாகும். சித்பிந்து பரமும், அசித்பிந்து ஸூக்ஷ்மமுமாகும்.

அசித் பிந்து நாதமாகவும் சாஸ்திரங்களில் விவஹரிக்கப்படுகின்றன.

இங்ஙனம் அவ்வியக்தமான மஹாபிந்துவானது சிவசக்திகளாகவும், சிதசித் பிந்துக்களாகவும், சுக்கில ரக்தபிந்துக்களாகவும், வியக்தப்பட்டமை இதில் கூறப்பட்டது (6)

(அ—கை) இந்த சுலோகத்தில் மிஶ்ர (சிதசின்மிஶ்ர) பிந்து நிரூபிக்கப்படுகின்றது.

ब्रिन्दुरहङ्कारात्मा
रविरेतन्मिथुनसमरसाकारः ।
कामः कमनीयतया
कला च दहनेन्दुविग्रहौ बिन्दू ॥ ७ ॥

(ப--ரை) ब्रिन्दुः—முற்கூறிய ரக்த சுக்கிலபிந்துக்களின் சேர்க்கையால் ஏற்பட்ட மிஶ்ரபிந்துவானது, अहङ्कारात्मा— அகார ஹகாரங்களையே ஸ்வரூபமாகவுடைய பிரகாசவிமர் சாத்மகமான, एतत्—பரப்பிரஹ்மம், சக்தி இவைகளின், मिथुनसमरसाकारः—ஐக்கியவடிவ பராஹந்தாஸ்வரூபத்தின் பிரதிபிம்பமானதும், दहनेन्दुविग्रहौ—அக்கினீஷோமீய ஸ்வ ரூபமான, बिन्दू—இரண்டு பிந்துக்களின் ஸமஷ்டி வடிவ மானதும், रविः—சூரியன் என்னும் பெயரையுடையதும், कमनीयतया—ரமணீயமாயுள்ள காரணத்தால், कामः कला च— தத்துவஞானிகளாலும் விரும்பக்கூடிய காமகலையென்னும் நாமாந்தரமுடையதுமாய் விளங்குகின்றது.

(வி--ரை) முன் ஶ்லோகத்தில் ஸோம அக்கினிகளெ ன்னும் சுக்கிலபிந்துவும், ரக்தபிந்துவும் நிரூபிக்கப்பட்டு, இந்த ஶ்லோகத்தில் அவற்றின் ஸாமரஸ்யவடிவ மிஶ்ர பிந்து நிரூபிக்கப்படுகின்றது. மிஶ்ரபிந்துவிற்கு ஸூர்ய பிந்துவென்னும் மற்றொரு பெயருண்டு. இது த்ரிபிந்து ஸ்வரூபமாய் இருத்தலின் காமகலாஸ்வரூபம் இதற்கு ஏற்படுகின்றது. இது அபராகாமகலையாகும். இதுவே அவித்யாப்பிரபஞ்ச காரணமாகும்.

विद्याप्रपञ्चः ।

शुद्धब्रह्म—प्रकाश
अ (१)

चिच्छक्तिः—विमर्शः
हं (२)

परा कामकला
अहं (३)
परब्रह्म—संविद्बिन्दुः

अविद्याप्रपञ्चः ।

महाबिन्दुः
अहं
अपरा कामकला
मायाविशिष्टकारणेश्वरः
अव्यक्तं (४)

सोमः—अ
शुक्लबिन्दुः
चेतनं (५)

अग्निः—हं
रक्तबिन्दुः
माया (६)

अग्नीषोमीयं—अहम्
रविः मिश्रबिन्दुः (७)
(जीवः)

முன் ஆறுவது ஸ்லோகத்தில் ஸோம, அக்கினி பிந்துக்களையும், இந்த ஏழாவது ஸ்லோகத்தில் ஸூர்ய பிந்துவையும் கூறியதால் திரிபிந்து ஸ்வரூப காமகலை கூறப்பட்டதென்பது உணரத்தக்கது. காமகலையென்றால் பராபஸ்யந்தீ முதலிய லௌகிக சப்தாத்மகமாயும், பாஞ்சபௌதிக அர்த்தாத்மகமாயும், விளங்கும் அவித்தியாப் பிரபஞ்சத்திற்கும், மஹாவாக்யரூப சப்தாத்மகமாகவும், கூடஸ்த பிரஹ்மாத்மக பாரமார்த்திகமாகவும் விளங்கும் வித்தியாப் பிரபஞ்சத்திற்கும் அபின்ன நிமித்தோபாதான விவர்த்த காரணமாயுள்ள பரமேஶ்வர ஸ்வரூபமேயாகுமென்பது இது காறும் கூறப்பட்ட ஏழுஸ்லோகங்களாலேற்படுகின்றது.

बिन्दुरहङ्कारात्मा— அஹங்காரவடிவ மிஶ்ரபிந்து. இந்த அஹந்தாஸ்வரூபம் அபரா காமகலை யெனப்படும். இது இரண்டாவது அஹங்காரமாகும்.

सर्वस्माद्व्यतिरिक्तोऽहं वालाग्रादप्यहं तनुः ।
इति संविच्च या ब्रह्मन् द्वितीयाऽहंकृतिः शुभा ।
मोक्षायैषा न बन्धाय जीवन्मुक्तस्य विद्यते ॥

என்னும் மஹோபநிஷத்தின் பிரமாணத்தின்படி இரண்டாவது அஹங்காரத்தின் ஸ்வரூபம் நன்கு விளங்குகின்றது. रविः—सितशोणबिन्दुसमरसीभूतो मिश्रबिन्दुः சுக்கில ரக்த பிந்துக்களென்னும் சந்திர அக்கினி பிந்துக்களின் ஸாமரஸ்யமே மிஶ்ரபிந்துவாகும் ஸூர்யனும்.

उद्यन्तं वादित्यमग्निरनुसमारोहति । अग्निं वादित्यः सायं प्रविशति । अमा सह सूर्याचन्द्रमसावत्रस्यां तिथौ तिष्ठतः इत्य-

स्राशब्दव्युत्पत्त्या चन्द्रसूर्ययोः प्रवेशनिर्गमने प्रसिद्धे । तस्माद्रविः सिश्रबिन्दुरेव ॥

மிஸ்ரபிந்துவிற்குக் காமனென்னும் பெயர், सोऽकामयत என்னும் பிரமாணத்தின்படி இந்த ஜகத்தைச் சிருஷ்டிக்கும் இச்சையுண்டானமையால் ஏற்பட்டது. இந்த மிஸ்ரபிந்துவே காரியஸ்வரூபப் பிரபஞ்சத்திற்குக் காரணமும், ஸ்வரூபமுமாகும். காரியகாரணங்களுக்குத் தம்முள் பேதமின்மையால். ஸர்வப்பிரபஞ்சமும் ஜீவனிடத்தில் தோன்றுகின்றமையால் ஜீவனே காமனேன்னும் மிஸ்ர பிந்துவாகும். ரக்த சுக்கில பிந்துக்களென்னும் மாதா பிதாக்களின் ஸாமரஸ்யத்தால் சோணித சுக்கிலங்களின் ஸாமரஸ்ய பிண்டமாகும் ஸந்தானம் ஏற்படுகின்றது. இந்த ஸந்தானமே காமனென்னும் ஜீவன், அல்லது சிதாபாஸனவன். (7)

(அவதாரிகை) இங்ஙனம், நூலாசிரியர் முதல் சுலோகத்தினல் மஹாப்பிரகாஶஸ்வரூப சுத்தப் பிரஹ்மத்தையும், இரண்டாவது ஸ்லோகத்தினல் விமர்சஸ்வரூப ஆதிசக்தியையும், மூன்ருவதால் ஆதிசக்தியால் வியாபிக்கப்பட்ட பரப்பிரஹ்மத்தையும், நான்காவது ஸ்லோகத்தால் மஹாபிந்துவென்னும் மாயாவிசிஷ்ட சேதன காரணேஶ்வரனேயும், ஐந்தாவதால் அவ்வியக்த காமகலாஸ்வரூபத்தையும்; ஆருவதாலும், ஏழாவதாலும், வியக்த காமகலையாகும் சுக்கில, ரக்த, மிச்ரபிந்துக்களென்னும் அக்னீஷோமீய ஸ்வரூபத்தையும் நிரூபித்து, இந்த எட்டாவது ஸ்லோகத்தால் காமகலாஸ்வரூபத்தை யறிவதனுலுண்டாகும் பயனை நிரூபிக்கின்றனர்.

इति कामकला विद्या-
देवीचक्रक्रमात्मिका सेयम् ।
विदिता येन स मुक्तो
भवति महात्रिपुरसुन्दरीरूपः ॥ ८ ॥

(ப—ரை) विद्या—பராஹந்தாஸ்வரூப பிரஹ்மவித்தை அல்லது அஹம் என்னும் ஆத்ம மந்த்ரம், देवी—விமர்சஸ்வரூப சித்சக்தி, चक्र—பிந்து-திரிகோணமென்னும் சக்கிரம் இவைகளின் क्रमात्मिका—மந்த்ர, தேவதா, சக்கிராத்மகமான, सा इयं—இது காறும் விமர்சிக்கப்பட்ட பரதேவதை, कामकला इति—பிரகாச விமர்சாத்மக சிவசக்திகளின் ஐக்கிய ஸ்வரூப காமகலையாக येन—எந்த மஹாபுருஷனால், विदि-ता—அறியப்படுமோ सः—அந்த மஹாபுருஷன், महात्रि-पुरसुन्दरीरूपः — சிவசக்தியைக்கிய சித்சக்தியின் ஸாயுஜ்யரூப மோக்ஷத்தைப் பெற்று मुक्तः भवति—ஜீவன்முக்தனாய் விளங்குகின்றனன்.

(விசேஷவுரை) ஸ்ரீகாமகலா விலாஸமென்னும் இந்த கிரந்தத்தின் துரீய பாதமாகும் இதில், ब्रह्मैवाहं என்னும் மஹாவித்தையும், ஸச்சிதாநந்தாத்வய அஸங்க சித்சக்தியென்னும் பரதேவதையும், பிரகாச விமர்ச ஸாமரஸ்ய ஸம்வித்ஸ்வரூபம் பிந்துவாகவும், ரக்த, சுக்கில, மிச்ர பிந்துக்கள் திரிகோணமாகவும் ஏற்பட்டுள்ளதனால் சக்கிர ஸ்வரூபமும் இலைமறை காய்போல் விளங்குகின்றன.

இங்ஙனம் விளங்கும் மந்த்ர, தேவதா சக்கிரங்களின் ஐக்கியஸ்வரூபத்தைச் சந்தேஹ விபரீதங்களற நன்குணர்ந்த பாக்கியசாலிகள் திரிபுரஸுந்தரீ ஸ்வரூபமாகவே

ஆய்விடுகின்றனர். அதனால் நித்தியாநந்த நிலையாகும் மோக்ஷம் ஸித்திக்கின்றது.

परं धाम त्रैपुरं चाविशन्ति ॥

त्रिपुरसुन्दरी—सैव पुरत्रयं शरीरत्रयं व्याप्य बहिरन्तरवभासयन्ती देशकालवस्त्वन्तरासङ्गान्महात्रिपुरसुन्दरी वै प्रत्यक्चितिः ॥

ஆத்மஸ்வரூப பிரஹ்மாபின்னமே த்ரிபுரை.

ध्यातृध्यानध्येयेभ्यः पुरा
ब्रह्मविष्णुरुद्रेभ्यः पुरा } त्रिपुरा.
इच्छाज्ञानक्रियाभ्यः पुरा

ब्रह्मविद्ब्रह्मैव भवति । यो वेद निहितं गुहायां परमे व्योमन् । सोऽश्नुते सर्वान् कामान् सह ॥

என்னும் பிரமாணங்களின்படி, அஹம்பத லக்ஷ்ய மஹாத்திரிபுரஸுந்தரியை எவன் பிரஹ்மாபின்னமாக அறிகின்றானோ, அவன் பிரஹ்மஸ்வரூப மஹாத் திரிபுரஸுந்தரியே யாகின்றான்.

ஸ்ரீகாமகலா விலாஸம்

தூரீய பாதம்

முற்றிற்று.

ஸ்ரீகாமகலாவிலாஸம்.

ஆநந்தோல்லாஸம்

அவித்யாபாதம்.

(அவதாரிகை) முதலாவதாகிய துரீய பாதத்தில் வித்தியாப்பிரபஞ்ச காரணமாகும் பரா காமகலையும், அவித்தியாப் பிரபஞ்ச காரணமாகும் அபரா காமகலையாகும் மஹாபிந்துவும் நிரூபிக்கப்பட்டன. இந்த அவித்தியா பாதத்தில் சப்தார்த்தவடிவ அவித்தியா பிரபஞ்ச சிருஷ்டி நிரூபிக்கப்படுகின்றது. அவற்றுள் இந்தஶ்லோகம் சப்தப் பிரபஞ்சோத்பத்தியைக் கூறுகின்றது.

स्फुटितादरुणाद्बिन्दो-
नादब्रह्माङ्कुरो रवो व्यक्तः ।
तस्माद्गगनसमीरण-
दहनोदकभूमिवर्णसंभूतिः ॥ ९ ॥

(பதவுரை) स्फुटितात्=நன்கு விகாஸத்தை யடைந்த, अरुणात् बिन्दोः=ரக்தபிந்துவிலிருந்து, नादब्रह्माङ्कुरः=நாதமென்னும் பிரஹ்மத்தையே முளையாகவுடைய, रवः=சப்தப் பிரஹ்மமானது, व्यक्तः=ஆவிர்ப்பவித்தது. तस्मात्=அந்த சப்தப் பிரஹ்மத்திலிருந்து, गगन, समीरण, दहन, उदक, भूमि—वर्ण=ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமியென்னும் பஞ்ச

பூதங்களினுடைய பீஜங்களின் வடிவ மாத்ருகைகளின்; संभूतिः = உத்பத்தி ஏற்பட்டது.

(விசேஷார்த்தம்) பிந்துவிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து பீஜமும் உண்டாயினவென்பது ஸூதஸம்ஹிதை-சிவமாஹாத்மிய கண்டம், சக்தி பூஜாத்தியாயத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. மாத்ருகைகள் நாற்பத்தொன்பதென்பது ஒரு பக்ஷம்; ஐம்பதென்பது மற்றொரு பக்ஷம்; ஐம்பத்தொன்றென்பது வேறொரு பக்ஷம். இந்த மூன்று பக்ஷங்களும் சாஸ்திரீயமே.

பஞ்சபூத பீஜங்களாவன

ஹ—ஆகாச பீஜம்; ய—வாயு பீஜம்; ர—அக்கினி பீஜம்; வ—ஜல பீஜம்; ல—பிரிதிவீ பீஜம். அகாராதி ஹகாராந்த ஸர்வ மாத்ருகைகளும் பஞ்ச பூதங்களின் ஸமுதாய வடிவமேயாகும்; ஆயினும், சிறப்பு லக்ஷணமாய் ஐந்து பீஜங்கள் மேலே கூறப்பட்டன. இவை சப்தப் பிரஹ்மத்திலிருந்து தோன்றியவை.

सच्चिदानन्दविभवात् सकलात्परमेश्वरात् ।
आसीच्छक्तिस्ततो नादो नादाद्बिन्दुसमुद्भवः ॥
पराशक्तिमयः साक्षात् त्रिधाऽसौ भिद्यते पुनः ।
बिन्दुर्नादो बीजमिति तस्य भेदाः समीरिताः ॥
भिद्यमानात्पराद्बिन्दोरव्यक्तात्मा रवोऽभवत् ।
शब्दब्रह्मेति तं प्राहुः सर्वागमविशारदाः ॥
पञ्चभूतात्मकं सर्वं चराचरमिदं जगत् ।

என்னும் பிரமாணத்தின்படி, பரமேச்வர விபவமான ஸச்சிதாநந்தத்தினின்றும் மாயாசக்தி தோன்றி, அதினின்

றும் நாதமும், அதனின்று பிந்துவும் தோன்றின. நாத பிந்துஸ்வரூப பராசக்தியினின்றும், மறுபடியும், பிந்துநாத பீஜங்கள் தோன்றின. பின்னர், அப்பிந்துவிலிருந்து அவ்வியக்தமாயுள்ள ஒரு சப்தம் தோன்றிற்று. இந்த அவ்யக்தமாயுள்ள சப்தந்தான் சப்தப்பிரஹ்மமென்று கூறப்படுவது. இதனின்றேதான் பாஞ்ச பௌதிக பீஜங்கள் தோன்றின. சராசராத்மகமாய் விளங்கும் இந்த ஜகத்தானது பாஞ்சபௌதிக பீஜங்களின்வடிவ சப்தப் பிரஹ்மவடிவமேயாகும்.

சப்தப்பிரஹ்மமே ஜகத்தின் உபாதான காரணம்.

स रवः श्रुतिसंपन्नैः शब्दब्रह्मेति गीयते ।

स एव शब्दब्रह्मात्मको रवः जगदुपादानं बिन्दुतादात्म्येन अभिव्यज्यते ॥

என்றபடி, சப்தப் பிரஹ்மந்தான் ஜகத்திற்கு உபாதான காரணமாய் இருக்கின்றது. இதுதான் பராவாக் என்பது. பஶ்யந்தீ முதலிய மற்றவாக்குகள் மூன்றும் இதனின்றும் தோன்றியவை. பரா பஶ்யந்தீ முதலிய நான்கு வாக்குகளின் விமர்சம், இனி அநந்த பாகத்தில் "या सान्तरोहरूपा" என்னும் சுலோகத்தின் உரையில் நன்கு செய்யப்படும். வைகரீ வாக்கின் ஸ்வரூபமே மாத்ருகைகள். மாத்ருகைகள் ஸ்வரங்களென்றும், வியஞ்சனங்களென்றும் இரண்டுவகைப்படும். இந்த மாத்ருகைகளேதாம் ஸர்வ அர்த்தப் பிரபஞ்சத்திற்கும் காரணமானவை. (9)

(அ—கை) சப்தசிருஷ்டியினின்றும் அர்த்த சிருஷ்டி கூறப்படுகின்றது.

अथ विशदादपि विन्दो-
र्गगनानिलवह्निवारिभूमिजनिः ।
एतत्पञ्चकविकृति-
र्जगदिदमण्वाद्यजाण्डपर्यन्तम् ॥ १० ॥

(ப—ரை) **विशदादपि विन्दोः** = சுக்கிலபிந்துவின் மலர்ச்சியினால், **अथ** = பின்னர், **गगनानिलवह्निवारिभूमिजनिः** = ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி ஆகிய பஞ்சபூதங்களின் சிருஷ்டியாயிற்று. **एतत्पञ्चकविकृतिः** = இங்ஙனம் உத்பத்தியான பஞ்சபூதங்களின் விகாரமே, **इदं अण्वादि अजाण्डपर्यन्तं जगत्** = காணப்படும் அணுமுதல், கேழ்க்கப்படும் பிரஹ்மாண்டமீறுகவுள்ள ஸகலப் பிரபஞ்சங்களுமாயிருக்கின்றது.

(வி—ரை) ஸர்வப்பிரபஞ்சமும் பஞ்ச பூதமயமே. அர்த்தரூபமான பஞ்சபூதங்கள் சப்தரூப பீஜங்களினின்றும் தோன்றினவென்பது சாஸ்திர சித்தாந்தமாகும்.

இங்ஙனம் ஒன்பதாவது ஸ்லோகத்தால் சப்தப்பிரஹ்மத்தின் ஸ்வரூபமும், பத்தாவது ஸ்லோகத்தால் அர்த்தரூப பஞ்சமஹா பூதங்களின் உத்பத்தியும் கூறப்பட்டன. **गगनसमीरणदहनोदकभूमि—वर्णसंभूतिः** என்பதிலுள்ள **वर्णसंभूतिः** என்னும் பதத்தால் சப்தரூப பீஜங்களின் உத்பத்தியும், **गगनानिलवह्निवारिभूमिजनिः** என்பதனால் அர்த்தரூப பஞ்சமஹா பூதங்களும் குறிப்பிடப்படுவன அறியத்தக்கது. இத்தகைய சப்தார்த்தவடிவ பிரபஞ்சமே நாமரூபவுலகமாகும். நாமப்பகுதியாகும் சப்தமானது வர்ண,

பத, மந்த்ர வடிவமாகவும், ரூபப்பகுதியாகும் அர்த்தமானது கலே, தத்துவம், புவனம் இவைகளின் வடிவமாகவும் இருக்கின்றன.

வர்ண, பத, மந்த்ர, கலா, தத்துவ, புவனங்களென்னும் இவையாறும் அத்துவாக்களெனப்படும். அத்துவாவென்றால் வழி அல்லது மார்க்கமாகும்.

அகாராதி க்ஷகாரந்தமான மாத்ருகைகள் யாவும் வர்ணுத்வா வென்றும், அம்மாத்ருகைகளின் சேர்க்கையாலானவை பதாத்துவாவென்றும், மந்த்ராத்மகமானவை மந்த்ராத்வாவென்றும் கூறப்படும். இவை மூன்றும் விமர்ஶ சக்தியின் அம்சமான நாமப் பகுதியிற்சேர்ந்தன.

பிரகாசாம்சத்தினின்றும் தோன்றியவை கலாதத்துவ புவனங்களென்னும் ரூபப்பகுதியாம். கலேகள் பதினறு; ஐம்பதென்பதும் ஒரு பக்ஷம். தத்துவங்கள் சிவாதி பூமியந்தமான முப்பத்தாறு; புவனங்கள் இருநூற்று இருபத்தினன்கு. இங்ஙனம் இந்த இரண்டு ஶ்லோகங்களினலும் நாமரூபாத்மக ஸகலபிரபஞ்ச சிருஷ்டி கூறப்பட்டது. பஞ்ச மஹா பூதங்களின் விரிவே (விகாரமே) பிரபஞ்சமென்பது மிகப்பிரஸித்தமான விஷயமாம். **प्रकर्षेण पञ्चते प्रपञ्चः** நாமரூபங்களிரண்டும் மாயிகமெனப்படும்.

அவித்யாப் பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிய இன்றியமையாத சில சிறந்த விஷயங்களாவன:—

सदेव सोम्येदमग्र आसीत् । तन्नित्यमुक्तमविक्रियम् । सत्यं ज्ञानमनन्तं ब्रह्म । सत्यज्ञानानन्दपरिपूर्णं सनातनमेकमेवाद्वितीयं ब्रह्म ॥ १ ॥

இந்தப் பிரபஞ்ச சிருஷ்டிக்குமுன் ஸத்ஸ்வரூபம் ஒன்றே இருந்தது. அது நித்தியமுக்தம்; விகாரப்படாதது. ஸச்சிதாநந்த வடிவினது; எங்கும் வியாபித்துப் பரிபூர்ணமாயிருப்பது. ஸநாதனமானது. இரண்டற்று ஏகமாய் விளங்குவது. அது பிரஹ்மமேயாகும்.

तस्मिन् मरुशुक्तिकास्थाणुस्फटिकादौ जलरौप्यपुरुषरेखादिवल्लोहितशुक्लकृष्णगुणमयी गुणसाम्यरूपाऽनिर्वाच्या मूलप्रकृतिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तत्साक्षिचैतन्यमासीत् । सा पुनर्विकृतिं प्राप्य सत्त्वोद्रिक्ताऽव्यक्ताख्या आवरणशक्तिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तदीश्वरचैतन्यमासीत् । स स्वाधीनमायः सर्वज्ञः सृष्टिस्थितिलयानामादिकर्ता जगदङ्कुररूपो भवति । स्वस्मिन्विलीनं सकलं जगदाविर्भावयति । प्राणिकर्मवशादेष पटो यद्वत्प्रसारितः प्राणिकर्मक्षयात्पुनस्तिरोभावयति । तस्मिन्नेवाखिलं विश्वं सङ्कोचितपटवद्वर्तते ॥ २ ॥

பரப்பிரஹ்மத்தினின்று, பேய்த்தேரில் ஜலம் போலவும், கிளிஞ்சலில் வெள்ளி போலவும், கட்டையிற் கள்வன் போலவும், ஸ்படிகத்தில் ரேகைபோலவும், கயிற்றிற் பாம்பு போலவும் மித்தையாய், ரஜஸ் ஸத்துவம் தமஸ் என்னும் முக்குண ஸாம்மியவடிவ மூலப் பிரக்ருதி தோன்றிற்று. இது ஸத்துமல்ல; அஸத்துமல்ல; ஸதஸத்துமல்ல. ஆதலின் அநிர்வாச்சியை(இத்தகையதென்று கூறமுடியாதது). இதில் பிரதிபிம்பித்த சேதனத்திற்கு ஸாக்ஷிசைதன்யமென்று பெயர். பின்னர், அந்த மூலப்பிரக்ருதியானது விகாரபாவத்தையடைந்து அவ்வியக்தமென்று கூறப்படும் ஆவரண சக்தியாயிற்று. இதில் பிரதிபலித்த சேதனத்திற்கு ஈஸ்வரசைதன்யமென்றுபெயர். இந்த ஈஸ்வரனுக்கு

மாயை ஸ்வாதீனமானது; இவர் ஸர்வக்ஞர். ஸகல பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு ஆகி கர்த்தாவாயும், அங்குர (முளை) வடிவமாயும் விளங்குகின்றவராவர். ஒரு மடித்த துணியை விரிப்பதுபோல், தன்னிடத்தில் லயித்திருந்த பிரபஞ்சத்தை, இவர் ஜீவகோடிகளின் கர்மபோகங்கள் காரணமாக, மறுபடியும் சிருஷ்டிக்கின்றனர். அவர்களின் கர்மலயத்தில் இவர் பிரபஞ்சத்தைத் தன்னிடத்தில் மறைத்துக் கொள்ளுகின்றனர்.

ईशाधिष्ठितावरणशक्तितो रजोद्रिक्ता महदाख्या विक्षेपशक्तिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तद्धिरण्यगर्भचैतन्यमासीत् । स महत्तत्वाभिमानी स्पष्टास्पष्टवपुर्भवति ॥ ३ ॥

ஈஶ்வரோபாதியாகும் அவ்வியக்தமானது ரஜோகுணத்தின் ஆதிக்கியத்தினால் மஹத்தத்துவமென்னும் பெயர் பெற்றது. இதுதான் விக்ஷேப சக்தியெனப்படும். இதில் பிரதிபலித்த சேதனம் ஹிரண்யகர்ப்பனெனப்படுவன். இவன் ஸ்பஷ்டாஸ்பஷ்ட (அருவுருவ) சரீரத்தோடு கூடி, மஹத்தத்துவ அபிமானியாயிருக்கின்றனன்.

हिरण्यगर्भाधिष्ठितविक्षेपशक्तितः तमोद्रिक्ताऽहङ्काराभिधा स्थूलशक्तिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तद्विराट्चैतन्यमासीत् । स तदभिमानी स्पष्टवपुः सर्वस्थूलपालको विष्णुः प्रधानपुरुषोऽभवत् ॥

ஹிரண்ய கர்ப்பனது உபாதியாகும் விக்ஷேப சக்தியிலிருந்து தமோகுணத்தின் ஆதிக்கியத்தினால் அஹங்காரமென்று கூறப்படும் ஸ்தூல சக்தியாயிற்று; அதில் பிரதிபலித்த சேதனன் ஸர்வஸ்தூலப்பிரபஞ்ச பரிபாலகனான விஷ்ணுவென்னும் பிரதான புருஷனாவான். இவனே விராட் எனப்படுவன்.

तस्मादात्मन आकाशः संभूतः; आकाशाद्वायुः; वायोरग्निः; अग्नेरापः; अद्भ्यः पृथिवी; तानि पञ्च तन्मात्राणि त्रिगुणानि भवन्ति। स्रष्टुकामो जगद्योनिः तमोगुणमधिष्ठाय सूक्ष्मतन्मात्राणि भूतानि स्थूलीकर्तुं सोऽकामयत। सृष्टेः परिमितानि भूतान्येकमेकं द्विधा विधाय, तयोरेकं पुनश्चतुर्धा कृत्वा स्वस्वेतरद्वितीयांशैः पञ्चधा संयोज्य पञ्चीकृतभूतैः अनन्तकोटिब्रह्माण्डानि तत्तदण्डोचितचतुर्दशभुवनानि तत्तद्भुवनोचितगोळकस्थूलशरीराण्यसृजत् ॥ ५ ॥

பிரதான புருஷனுகும் விஷ்ணுவினிடத்திலிருந்து ஆகாசமும், அதனின்று வாயுவும், அதனின்று அக்கினியும், அதனின்று ஜலமும், அதனின்று பூமியும் உண்டாயின. ஜகத்காரணனுகும் அப்பரமாத்மா, சிருஷ்டிக்கும் இச்சையோடு கூடியவனுய்த், தமோகுணத்தை யதிஷ்டித்துக்கொண்டு, மேற்கூறிய பஞ்சதன்மாத்திரைகளை ஸ்தூலீகரிக்கச்செய்தனன்.

பஞ்சீகரண விளக்கம்.

ஒவ்வொரு ஸூக்ஷ்ம பூதத்தையும் இவ்விரண்டாகப் பிரித்து, அதில் ஒருபாகத்தை நான்காகப் பிரித்தனன். ஆகாசத்தின் பாதிபாகத்தோடு, வாயுவின் அரைக்கால் பாகம், அக்கினியின் அரைக்கால்பாகம், ஜலத்தின் அரைக்கால்பாகம், பூமியின் அரைக்கால்பாகங்களைச் சேர்க்க ஸ்தூல ஆகாசமாகும்.

இங்ஙனமே, வாயுவின் பாதிபாகமும், ஆகாசம், அக்கினி, ஜலம், பூமிகளின் அரைக்கால் அரைக்கால்பாகங்களையும் சேர்க்க ஸ்தூல வாயுவாகும்.

அக்கினியின் பாதிபாகத்தோடு, ஆகாசம், வாயு, ஜலம், பூமிகளின் அரைக்கால் பாகங்களைச் சேர்க்க ஸ்தூல அக்கினியாகும்.

பாதிபாகம் ஜலத்தோடு, அக்கினி, ஆகாசம், வாயு, பூமிகளின் அரைக்கால் அம்சங்களைச் சேர்க்க ஸ்தூல ஜலமாகும்.

பூமியின் பாதிபாகத்தோடு, ஜலம், அக்கினி, வாயு ஆகாசங்களின் அரைக்கால் பாகங்களைச் சேர்க்க ஸ்தூல பூமியாகும்.

இங்ஙனம் பஞ்சீக்ருதமான ஸ்தூல பஞ்ச மஹா பூதங்களைக்கொண்டே அநந்தகோடி பிரஹ்மாண்டங்களும், அந்த அந்த அண்டங்களுக்குரிய சதுர்த்தச புவநங்களும், அவ்வவற்றிற்குரிய கோளங்களும், ஸ்தூல சரீரங்களும் சிருஷ்டிக்கப் பட்டன.

சரீரமாகும் பிண்டசிருஷ்டி விளக்கம்.

ஸூக்ஷ்ம சரீரம் :— பஞ்சிகரணம் செய்யப்பட்ட பஞ்சபூதங்களால் ஸ்தூலசரீரமாகும் பிண்டம் சிருஷ்டிக் கப்பட்டதென்று மேலே கூறப்பட்டது. அபஞ்சீக்ருத ஸூக்ஷ்ம பூதங்களின் ஸத்வகுண ஸமஷ்டியால் அந்தக் கரணமும், ஒவ்வொரு பூதத்தின் வியஷ்டி ஸத்துவாம்சத் தினுல் கண், காது, முதலிய ஞாநேந்திரியங்களும் சிருஷ்டிக் கப்பட்டன. இங்ஙனமே, அபஞ்சீக்ருத ஸூக்ஷ்ம பூதங்களின் ரஜோகுண ஸமஷ்டியால் பிராணுதிகளும், ஒவ்வொரு பூதத்தின் வியஷ்டி ரஜோ அம்சத்தினுல் வாக்கு, பாணி முதலிய கர்மேந்திரியங்களும் சிருஷ்டிக்கப்பட்டன.

அந்தக்கரணம், ஞானேந்திரியங்கள், பிராணுதிகள், கர்மேந்திரியங்களென்னும் இவற்றின் ஸமுதாயமே ஸூக்ஷ்ம சரீரமெனப்படும்.

இதில் பிராணமயம், மனேமயம், விக்ஞானமயம் என்னும் மூன்று கோசங்கள் அடங்கியிருக்கின்றன.

ஸ்தூலசரீரம்:—பஞ்சீகாணம் செய்யப்பட்ட ஸ்தூல பஞ்ச பூதங்களின் தமோகுண ஸூக்ஷ்மாம்சத்தினல் எலும்பு, நரம்பு, தோல், இரத்தம், மாம்ஸம், நகம், ரோமம், சுக்கிலம் முதலிய தாதுக்களோடு கூடிய ஸ்தூல சரீரம் சிருஷ்டிக்கப்பட்டது. இது அந்நமயகோசமாகும்.

காரணசரீரம்:—மூலப்பிரக்ருதியே காரணசரீரமெனப் படும். இது குணஸாம்மியாவஸ்தையில் மாயையென் னும் பெயர் பெற்றுக், காரணேபாதியாய் ஈஸ்வரனுக்குக் காரண சரீரமாகின்றது. குணவைஷம்மியாவஸ்தையில் அவித்தையென்னும் பெயர் பெற்றுக், காரியோபாதியாய் ஜீவனுக்குக் காரணசரீரமாகின்றது. இது ஆநந்தமயகோச மெனப்படும். ஜீவன் ஸ்தூல சரீரத்தை யபிமானித்து விஸ்வனென்றும், ஸூக்ஷ்ம சரீரத்தையபிமானித்துத் தை ஜஸனென்றும், காரண சரீரத்தையபிமானித்துப் பிராக்ஞ னென்றும் விவஹரிக்கப்படுவான்.

இங்ஙனமே, ஈஸ்வரனும் ஸமஷ்டிஸ்தூலோபாதி யோடு கூடி விராட்டென்றும், ஸமஷ்டி ஸூக்ஷ்மோபாதி யோடு கூடி ஹிரண்யகர்ப்பனென்றும், ஸமஷ்டி காரணே பாதியோடு கூடி ஸூத்திராத்மா, அல்லது அந்தர்யாமி யென்றும் விவஹரிக்கப்படுவான்.

இதன் பிரமாணங்களாவன: —

सर्वज्ञेशो मायालेशसमन्वितो व्यष्टिदेहं प्रविश्य तया मोहितो जीवत्वमगमत् । शरीरत्रयतादात्म्यात्कर्तृत्वभोक्तृत्वमगमत् । जाग्रत्स्वप्नसुषुप्तिमूर्च्छामरणधर्मयुक्तो घटीयन्त्रवदुद्विग्नो जातो मृत इव कुलालचक्रन्यायेन परिभ्रमति ॥

ज्ञानेन्द्रियपञ्चकं, कर्मेन्द्रियपञ्चकं, अन्तःकरणचतुष्टयम्, अविद्या-काम-कर्म-तमांसि च पुरम् । ईशाज्ञया विराट् व्यष्टिदेहं प्रविश्य बुद्धिमधिष्ठाय विश्वत्वमगमत् । विज्ञानात्मा चिदाभासो विश्वो व्यावहारिको जाग्रत् स्थूलदेहाभिमानी कर्मभूरिति च विश्वस्य नाम भवति ॥

ईशाज्ञया हिरण्यगर्भः व्यष्टिसूक्ष्मशरीरं प्रविश्य मनोऽधिष्ठाय तैजसत्वमगमत् । तैजसः प्रातिभासिकः स्वप्नकल्पित इति तैजसस्य नामानि भवन्ति ॥

ईशाज्ञया सूत्रात्मा मायोपाधिरव्यक्तसमन्वितो व्यष्टिकारणशरीरं प्रविश्य प्राज्ञत्वमगमत् । प्राज्ञः अविच्छिन्नः पारमार्थिकः सुषुप्त्यभिमानीति प्राज्ञस्य नामानि भवन्ति ॥

अव्यक्तलेशाज्ञानाच्छादितपारमार्थिकजीवस्य तत्त्वमस्यादिमहावाक्यानि ब्रह्मैकतां जगुः । नेतरयोः व्यावहारिकप्रातिभासिकयोः । जाग्रत्स्वप्नसुषुप्तिमूर्च्छानामन्या ब्रह्मादिस्तम्बपर्यन्तं सर्वजीवभयप्रदा स्थूलदेहविसर्जनी मरणावस्था भवति ॥

कामकर्मान्विताविद्याभूतवेष्टितो जीवो देहान्तरं प्राप्य लोकान्तरं गच्छन् प्राक्कर्मपरिपाकेनावर्तान्तरकीटवद्विश्रान्तिं नैव गच्छति । सत्कर्मपरिपाकतो बहूनां जन्मनामन्ते नृणां मोक्षेच्छा

जायते । तदा सद्गुरुमाश्रित्य चिरकालसेवया बन्धान्मोक्षं कश्चित्प्रयाति ॥

अविचारकृतो बन्धो विचारान्मोक्षो भवति । तस्मात्सदा विचारयेत् । अध्यारोपापवादतः स्वरूपं निश्चेतुं शक्यते । तस्मात् सदा विचारयेत् । जगज्जीवपरेषां जीवभाव-जगद्भाव-परभावबाधे प्रत्यगभिन्नं ब्रह्मैव शिष्यते ॥

நாமரூபப் பிரபஞ்சத்தின் அத்தியாரோபமே இந்த அவித்யாபாதத்தின் விஷயமாகும். இதில் ஜகத்து, ஜீவன், ஈஶ்வரன் என்பவற்றின் பேதமும், இதுகாரணமாய்த்தோன்றிய துவைதப்பிராந்தியும், இதுகாரணமாய்ப் பிரவிருத்தி நிவர்த்திகளும், இவைகாரணமாய் ஸுகதுக்கங்களும் ஏற்பட்டு, புண்ணிய பாபரூப கர்மத்தின் வயப்பட்டு ஜனனமரணரூப ஸம்ஸார பந்தமானது ஏற்படுகின்றது. இதன் (கல்பித பந்தத்தின்) நிவ்ருத்தி அபவாதத்தினுல் ஏற்படுகின்றது. அவித்தையால் மித்தியா பந்தமேற்பட்டது. இங்ஙனம் ஏற்பட்ட மித்தியா பந்தமானது வித்தையால் நிவர்த்தியாகுமென்பது சாஸ்திரஸித்தமாகும்.

ज्ञानादेव तु कैवल्यम् । विद्ययाऽमृतमश्नुते ॥

என்னும் ஶ்ருதிப்பிரமாணங்கள் ஞானம், அல்லது வித்தையே பந்த நிவர்த்திக்கு ஸாக்ஷாத் ஸாதனமென்று அறிவுறுத்துகின்றன.

ஸ்ரீகாமகலா விலாஸம்
அவித்யா பாதம்
முற்றிற்று.

ஸ்ரீகாமகலாவிலாஸம்.

ஆநந்தோல்லாஸம்

வித்தியாபாதம்

(அவதாரிகை) அவித்தியாபாதத்தில் சிருஷ்டிக்கிரமம் கூறப்பட்டது. சிருஷ்டியானது பாரமார்த்திகமாய் இல்லவே யில்லையென்றும், அது மயக்கம் காரணமாய்த் தோன்றிய அத்தியாஸமே யாமென்றும் முன் அவித்தியா பாதத்தில் நன்குவிமர்சிக்கப்பட்டுள்ளது. அவித்தியா நிவர்த்தியானது வித்தையினாலும், அத்தியாஸ நிவர்த்தியானது அதிஷ்டான ஞானத்தினாலு மேற்படுமென்பது பரம ஸித்தாந்தமாகும்.

वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम् ॥

காரணமாகும் மண்ணிலிருந்து தோன்றிய பருத்த வயிறு, குறுகலான கழுத்து இவைகளோடு கூடிய கடமானது சொன்மாத்திரமாய் விளங்குவதாகும். கடத்திலுள்ள உண்மையான பொருள் மண்ணேயன்றோ? இங்ஙனமே, பரமாத்மாவினிடத்தில் அவித்தையால் தோன்றும் பிரபஞ்சம் பரமாத்மாவைத்தவிற இல்லவேயில்லை. உள்ளது பரமாத்மா ஒன்றுதான். பிரபஞ்சம், பேதஞானம், விருப்புவெறுப்புகள், பிரவ்ருத்திநிவ்விருத்திகள், ஸுக துக்கங்கள், தர்மாதர்மங்கள், புண்ணியபாபங்கள், முதலியவற்றின் தோற்றம் அத்தியாஸமே யாமென்று ஸந்தேக விபரீதங்களற அறிந்து ஸ்வஸ்வரூப ஸ்திதியில் நிலைத்து

நிற்கும் ஸாதனங்களைக் கூறுதலே வித்தியாபாதத்தின் நோக்கமாகும்.

வித்யை தேவதைகளின் அபேதம்.

(அ--கை) மந்த்ர தேவதைகளின் அபேதம் இந்த ஸ்லோகத்தில் நிரூபணம் செய்யப்படுகின்றது.

> बिन्दुद्वितयं यद्व-
> द्भेदविहीनं परस्परं तद्वत् ।
> विद्यादैवतयोरपि
> न भेदलेशोऽस्ति वेद्यवेदकयोः ॥ ११ ॥

(பதவுரை) यद्वत्=எங்ஙனம், बिन्दुद्वितयं=இரக்த சுக்கில ஸ்வரூப இரண்டு அபராபிந்துக்களும், அல்லது பரா அபராவென்னும் இரண்டுபிந்துக்களும், परस्परं=ஒன்றுக்கொன்று, भेदविहीनं=பேதமற்றனவோ, तद्वत्=அங்ஙனமே, विद्यादैवतयोः=மந்த்ரம், தேவதை இவைகளுக்கும், वेद्यवेदकयोरपि=வாச்சியவாசகங்களுக்கும், அல்லது உபாஸ்ய உபாஸகர்களுக்கும், भेदलेशोऽपि नास्ति=சிறிதளவும் பேதமில்லை.

குறிப்பு:—பரப்பிரஹ்மமானது பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க நினைத்தபோது அதற்கு மஹாபிந்துவென்னும் விவகாரம் ஏற்படுகின்றது. ஜடசக்தியாகும் மாயோபாதியால், மஹாபிந்துவென்னும் பராபிந்துவே அபராபிந்துவாக மாறுகின்றது.

அஸத் ஜட துக்கரூப அவித்தியாப் பிரபஞ்சகாரணத்துவம் அபராபிந்துவிலும், ஸத், சித், ஆநந்தவடிவ வித்யாப் பிரபஞ்ச காரணத்துவம் பராபிந்துவிலும் உள்ளதாக அறியத்தக்கது.

(விசேஷவுரை) அபேத தரிசனமே ஞானமாதலின் இந்த பாதத்தில் அபேதமே பிரதிபாதிக்கப்படுகின்றது.

வாச்சியமாகும் அர்த்தப் பிரபஞ்சத்திற்கும், வாசகமாகும் சப்தப்பிரபஞ்சத்திற்கும், பேதமில்லை. சிவ சக்திகளுக்குப் பேதமில்லையாதலின். இங்ஙனமே வாக்பவாதி மூன்று பீஜங்களுக்கும், சிருஷ்டியாதி கிருத்தியங்களுக்கும், பிரமாணாதி திரிபுடிகளுக்கும், ஜாக்கிரதாதி மூன்று அவஸ்தைகளுக்கும், காமகிரியாதி பீடத்திரயங்களுக்கும், இச்சையாதி சக்தித்திரயங்களுக்கும் யாதொரு பேதமுமில்லையென்று இந்த வித்தியாபாதம் பிரதிபாதிக்கின்றது.

அபேதத்தைப் பிரதிபாதிக்கும் பிரமாணங்களாவன:—पराबिन्दुस्वरूपम्—

पराबिन्दुस्वरूपं तु सृष्टेः पूर्वस्थितिः स्मृता ।
शिवशक्तिसामरस्यं तुरीयपदसंज्ञिका ॥

तुरीयस्वरूपम्—

लोकत्रयादतीतं च मण्डलत्रयतः परम् ।
शरीरत्रयतोऽन्यत्तु कूटत्रयपरं तथा ॥
त्रिभुजायाः परं यत्तु मूर्तित्रितयतः परम् ।
यस्मात्पदत्रयं जातं कालत्रयपरं तथा ॥
अवस्थात्रयतोऽन्यत्तु तत्तुरीयमितीर्यते ।
तुरीयं तु परारूपं परा ब्रह्मस्वरूपिणी ॥
चिदानन्दस्वरूपा सा ज्योतीरूपा महेश्वरी ।
चिच्चन्द्रमण्डलं बिन्दुरग्नीषोममयं स्मृतम् ।
सर्वशक्तिमयं ब्रह्मतत्वं चिद्बिन्दुरुच्यते ॥

सृष्टिक्रमः —

गर्भस्थमायोद्रेकाच्च सृष्टिकालस्य संभवात् ।
स विन्दुः स्फुटितं याति त्रिभुजाकारतां गता ॥
गुणत्रयतनुः सोऽभूत् कोणविन्दुत्रयान्वितः ।
अव्यक्तमातृकारूपस्तत्वात्मा व्यक्त उच्यते ॥
पराशक्तेस्तु संकल्पाज्जाता तच्छायतां गता ।
मायारूपा हि पश्यन्ती सृष्टिस्थित्यन्तकारिणी ॥
परापरेति विख्याता परा ब्रह्मस्वरूपिणी ।
अपरा हि जगद्रूपा मोहिनीति प्रकीर्त्यते ॥
विन्दुभूता पराशक्तिः सर्वकारणकारणा ।
तत्प्रतिच्छायरूपा सा पश्यन्ती सर्वमोहिनी ॥
चिद्बिन्दुरेव पुरुषः प्रकाशात्मा सदाशिवः ।
विमर्शरूपिणी शक्तिः पश्यन्तीरूपतां गता ॥
सितशोणविमिश्राख्यं यस्माच्चिद्बिन्दुरुच्यते ।
पश्यन्त्यामपि तन्मिश्रमुभयांशात्मिका हि सा ॥ इति ।

இந்தப் பிரமாணங்களின் தாத்பர்யம் யாதெனில், சிருஷ்டிக்குமுன் சிவசக்திஸாமரஸ்யமாகும் பராபிந்து ஒன்றே யிருந்தது.

அது லோகத்திரயங்கள், மண்டலத்திரயங்கள், சரீரத் திரயங்கள், கூடத்திரயங்கள், மூர்த்தித்திரயங்கள், பதத் திரயங்கள், காலத்திரயங்கள், அவஸ்தாத்திரயங்கள் முத லியவற்றிற்கு அதீதஸ்வரூபமானது. இது தூரியவடிவின

தாகும். இதுவே சித்பிந்துவுமாகும். இது பரப்பிரஹ்ம ஸ்வரூபிணியான பரையென்றும், சிதாநந்தவடிவு ஸ்வயம் பிரகாசமஹேஸ்வரியென்றும், அக்னீஷோமாத்மக அத் சந்த்ரமண்டல பிந்துவென்றும், ஸர்வசக்திமயமான பிரஹ்மதத்துவமென்றுங் கூறப்படும்.

இந்த சித்பிந்துவானது சிருஷ்டிகாலத்தில் தனக்குள் அடங்கியுள்ள மாயையைத் தோற்றுவித்து, விகஸிக்கச் செய்கின்றது. மாயை விகஸித்து, முக்குணங்களோடு திரிகோணரூபமாய்த் தோன்றிற்று.

பரையின் ஸங்கல்பத்தினுல் தோற்றிய பிரதிபிம்ப வடிவ மாயையே சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணமாகிய பஶ்யந்தியாயிற்று. இந்த பஶ்யந்தியே வித்யா அவித்யாஸ்வரூபங்களுக்கு மத்தியகதஸ்தானம். இது சித்பிந்துவின் விமர்சாம்சம். சித்பிந்துவின் பிரகாசாம்சம் ஸதாசிவமாகும். சித்பிந்துவினது பிரகாசவிமர்சங்களின் ஸாமரஸ்யவடிவ மிஶ்ரபிந்துவே ஜகத்காரண அபராகாமகலையாம்.

ஆகவே காரணகாரியங்களுக்குப் பேதமில்லையென்னும் நியாயம் பற்றி, மேற்கூறிய பிரமாணங்கள் அபேதத்தைப் பிரதிபாதிக்கின்றனவென்று கூறப்பட்டது.

வித்தை-அவித்தைகளின் விமர்சமாவது:—

विद्यां चाविद्यां च यस्तद्वेदोभयँ सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते ॥

வித்தை-அவித்தைகளின் ஸ்வரூபத்தை நன்கறிந்து அவித்தையால் மிருத்யுவைத்தாண்டி, வித்தையால் மோக்ஷத்தை யடைகின்றான்.

அவித்தையால் மிருத்யுவைக் கடத்தல் எங்ஙனமெனின், வர்ணாஸ்ரமதர்மவிகிதங்களான கர்மாக்களைப் பயன் கருதி (காம்யத்தோடு) செய்யின், அவன் அவித்யாபாசபத்தனாகின்றனன். நிஷ்காமனாய் ஈஸ்வராக்ஞையென்று கருதி விஹிதகர்மாக்களைச்செய்யின், அவை கர்த்தாவினது சித்தசுத்திக்குக் காரணமாய், அவித்தையென்னும் மிருத்யுவைக் கடத்தற்குச் சிறந்த ஸாதனமாகின்றன.

உபாஸ்ய-உபாஸக அபேத, அல்லது, தேவதாத்ம அபேத, அல்லது, வித்யா-வேதக அபேதஞானமாகும் வித்தையால் அநர்த்த நிவர்த்தி, பரமாநந்தப் பிராப்திரூப அம்ருதத்துவம் ஸித்திக்கின்றது.

विद्या=स्वात्मरूपं ; अभेदज्ञानम् ।
अविद्या=भ्रान्तिरूपं ; भेदज्ञानम् ॥

சிவஸ்வரூபமானது பரம், வித்தை, பிராந்தியென மூன்றுரூபமாய் விளங்குகின்றது.

भ्रान्तिर्विद्या परं चेति शिवरूपमिदं त्रयम् ।
अर्थेषु भिन्नरूपेषु विज्ञानं भ्रान्तिरुच्यते ॥
आत्माकारेण संवित्तिः बुद्धेर्विद्येति कथ्यते ।
विकल्परहितं तत्त्वं परमित्यभिधीयते ॥
मोक्षप्रदज्ञानरूपत्वाद्विद्या—

विद्या नाम श्रीविद्यैव=வித்தையென்றால் ஸ்ரீவித்தையேயாகும். இது,

न शिल्पादिज्ञानयुक्ते विद्वच्छब्दोऽभियुज्यते ।
मोक्षैकहेतुविद्यावान् यः स विद्वानितीर्यते ॥

मोक्षैकहेतुर्विद्या तु श्रीविद्यैव न संशयः ॥

என்னும் பிரமாணத்தால் நன்கு விளங்குகின்றது.

அவித்தையாலேற்பட்டதும், பிரத்தியக்ஷ ஸித்தமானதுமான பேதத்தை யொழிப்பது வித்தையாதலின், அது வேதப்பிரமாணமொன்றினாலேயே ஸித்திப்பதாயிருக்கின்றது.

வேதப்பிரமாண ஸாத்தியமாயுள்ள ஸ்ரீபிரஹ்மவித்தையும் ஆத்மப் பிரஹ்மைக்கிய ஞானத்தை லக்ஷணையால் உணர்த்துகின்றதென்பதறியத்தக்கது.

ஐக்கியஞானபோதகம் மஹாவாக்கியங்களாம்.

எந்த முமுக்ஷு ஸத்குருவின் பால் ஐக்கிய ஞான ஜனகமாகிய மஹாவாக்கியத்தையுபதேச பூர்வகமாய்ச் சிரவணம் செய்கின்றானோ, அவன், அந்தக்ஷணத்திலேயே அவித்தையினின்றும் நீங்கி, ஆத்மாபின்ன பிரஹ்மஸ்வரூபனாகின்றனன். ஆதலின்,

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन; तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

ஸாதனங்களோடு கூடிய முமுக்ஷுவானவன் நல்லதும் தீயதுமான கர்மபலன்களால் கிலேசத்தையடைந்து தவிக்கும் ஜனங்களைப்பார்த்து விவேகமுற்றவனாய், உலகத்தில் வைராக்யத்தையடைந்து, "ஒரு ஜீவன் கர்மாசரணையால் துக்கநிவர்த்தியைப் பெறுதற்குமுடியவேமுடியாதென்றும், அக்ருதமாயுள்ள ஞானத்தினால்தான் அநர்த்த நிவர்த்தி,

ஆநந்தப் பிராப்திவிசித்திக்குமென்றும்'' நன்கறிந்து, அத்தகைய தத்துவ ஞானோபதேசத்தின் பொருட்டு உலர்ந்த ஸமித்தொன்றைக் கையில் தாங்கி, சுரோத்திரியனும் பிரஹ்ம நிஷ்டனுமான ஸத்குருவை நாடிச் செல்லல் வேண்டும்.

அக்ருதம்—கர்மாவினால் அடைய முடியாதது.

இங்ஙனம் ஸத்குருவை நாடிச்சென்று அவரது அநுக்கிரஹத்தைப் பெற்றவனே ஜனன மரண ரூப ஸம்ஸாரத்தைக் கடக்கின்றான்; आचार्यवान् पुरुषो वेद ஆசாரியனையடைந்த புருஷனே யுண்மையை யறிகின்றான். அபேதமே உண்மையாகும்.

இவ்வபேதம் वेद्यवेदकयोः भेदलेशोऽपि नास्ति என்பதனால் கூறப்பட்டுள்ளதறியத்தக்கது.

வேத்தியம்—ஜீவப்பிரஹ்மைக்கியம்; வேதகம்—அகண்டார்த்த போதக மஹாவாக்கியம். அல்லது, வேத்யம் — மஹாத்திரிபுரஸுந்தரி; வேதகம் — ஸ்ரீபஞ்சதசாக்ஷரீ மஹாவித்யை. இவ்விரண்டிற்குமுள்ள ஐக்கியம் சக்கியார்த்தத்தினாலா ? அல்லது லக்ஷ்யார்த்தத்தினாலா ? எனின், லக்ஷ்யார்த்தத்தினாலேயேயாமென்று கூறுதல் தகுதியாகும்.

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह । अवाङ्मनसगोचरम् ॥

முதலிய ஶ்ருதிகள் வாச்சியார்த்தத்தை நிஷேதிக்கின்றன.

बिन्दुद्वितयं यद्वद्भेदविहीनं परस्परं तद्वत् ।

பராபர பிந்துக்கள் எங்ஙனம் தம்முள் பேதமற்றன வோ, அங்ஙனமே என்று ஹேது கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.

பராபர பிந்துக்களுக்கு ஐக்கியங் கூறுமிடத்தில் கவனிக்கவேண்டிய விஷயமாவது:—பரத்தில் அபரம் அத்தியாஸம்; ஆதலின் அபரம் உபாதி; பரம் உபாதியற்ற சித்சக்தி வடிவம். அபரம் ஜடசக்திஸ்வரூப மாயோபாதி ஸஹிதமானது; நிருபாதிகத்தில் ஸோபாதிகத்துவம் கற்பனை. உபாதி நீக்கமாகும் பேதராஹித்தியம் அகண்டாகார விருத்தியாலேற்படுவதாகும். ஆகவே இந்த ஸ்லோகம் பேதராஹித்தியத்தைக் கூறியதாகும். (11)

திரிபுடித்தோற்றம்

(அ—கை) உபாதியும், உபஹிதசேதனமுமாகிய சக்திசிவங்கள் (ஜடசேதனங்கள்) தாதாத்மிய ஸம்பந்தத்தினால் சப்தார்த்த வடிவங்களாய் விளங்கி, சிருஷ்டி, ஸ்திதி, லயங்களென்னும் திரிபுடீரூப பேதத்தோடு கூடிய த்ரிபீஜ ரூபமாய் ஆயினவென்று இதில் கூறப்படுகின்றது.


वागर्थौ नित्ययुतौ
परस्परं शक्तिशिवमयावेतौ ।
सृष्टिस्थितिलयभेदौ
त्रिधा विभक्तौ त्रिबीजरूपेण ॥ १२ ॥

(ப--ரை) **एतौ वागर्थौ शक्तिशिवौ**=முற்கூறிய சப்தார்த்த வடிவங்களான சக்தி சிவங்கள், **त्रिधा विभक्तौ**=மூன்று பிரகாரங்களாகப் பகுக்கப்பட்டவையாய், **सृष्टिस्थितिलयभेदौ**=

சிருஷ்டி, ஸ்திதி, லயங்களென்று கூறப்படும் பேதத்தோடு கூடியவையாய், **त्रिबीजरूपेण** =மூன்று பீஜங்களின் வடிவமாக, **परस्परं** = (ஜடசேதனங்களாகிற சக்தி சிவங்கள்) ஒன்றோடொன்று, **नित्ययुतौ** = தாதாத்மிய ஸம்பந்தத்தோடு கூடினவையாய் ஆகின்றன. தாதாத்மியம்—மண்ணும் கடமும் போலக் கற்பித பேதம் வாஸ்தவ அபேதம்.

(வி-ரை) **त्रिबीजरूपेण** வாக்பவ, காமராஜ, சக்தி பீஜங்களின் வடிவமாய் மூன்று விதமாய்ப் பகுக்கப்பட்டன. இந்த மூன்று பீஜங்களும், முறையே, சிருஷ்டி, ஸ்திதி லயமென்னும் பேதங்களோடு கூடியனவாகும். ஒவ்வொரு பீஜத்திலும் வாகர்த்தரூப சக்திசிவங்கள் விளங்குகின்றன.

सोऽकामयत । स ईक्षत என்னும் பிரமாணங்களின்படி ஜகத் சிருஷ்டியின் இச்சையேற்பட்டபோது பிரகாச விமர்சங்களின் ஸாமரஸ்யமான ஜகத்காரண அபராபிந்துவானது முக்குண விபாகத்தால் த்ரிகோண வடிவ மூன்று ரூபங்களாயிற்று.



1. வாக்பவம்—சிருஷ்டி, ஸரஸ்வதீபிரஹ்மா, அக்கினிமண்டலம்.
2. காமராஜம் — ஸ்திதி, லக்ஷ்மீநாராயணர், ஸூர்யமண்டலம்.
3. சக்தி—லயம் (ஸம்ஹாரம்), பார்வதீ பரமேஸ்வரர், ஸோமமண்டலம்.

परस्परं शक्तिशिवमयौ—ஜடசக்தி சிவமயமாகவும், சிவம் ஜடசக்திமயமாகவும் விளங்கும் துவந்துவ நிலை; இது அந்நியோந்யாத்தியாஸமெனப்படும்.

பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புருண்டையைப் பார்க்கின், “நெருப்பு உருண்டையாயிருக்கின்றது; இரும்பு

எரிக்கின்றது" என்னும் உணர்ச்சி ஏற்படுகின்றது. இவ்வுதாரணத்தில் இரும்பு நெருப்பு மயமாயும், நெருப்பு இரும்புமயமாயும் விளங்குவதறியத்தக்கது. வாக்கு-அர்த்தம் என்பவைகளே நாமரூபங்களாம். சக்திஸ்வரூபமான (வாக்கு) சப்தமே திரிகோண ரூபமாய்ப் பரிணமித்து, அதன் ஒவ்வொரு ரேகையிலும், அ க த என்னும் பதினாறு பதினாறு அஸ்பஷ்ட மாத்ருகைகளாலும், கோணங்களில் ह ळ क्ष என்னும் மூன்று வர்ணங்களாலும் கூடி விளங்குகின்றது.

சிவஸ்வரூபமான அர்த்தம் திரிகோணரூபமாய்ப் பரிணமித்தபோது, சிவாதி பூம்யந்த முப்பத்தாறு தத்துவங்களின் ரூபமாய் விளங்குகின்றது. இருபத்திநான்காகப் பகுக்கப்பட்ட ஆத்மதத்துவம் ஒருரேகை; ஏழாகப் பகுக்கப்பட்ட வித்யா தத்துவம் மற்றொரு ரேகை; ஐந்து பேதங்களோடு கூடிய சிவதத்துவம் மூன்றாவது ரேகையாகும்.

நாமரூபாத்மக திரிகோணம் கற்பிதம். இதன் அதிஷ்டானம் ஸச்சிதாநந்தஸ்வரூப பிரகாச விமர்ச ஸாமரஸ்ய பரப்பிரஹ்மாபின்ன சித்சக்தியேயாமென்பது பரம ரஹஸ்யமாம்.

சிருஷ்டிஸ்திதிலய ரூப மூன்று பீஜங்களையும், வாக் (சப்தம்—நாமம்) அர்த்த (ரூபம்) ரூப சக்திசிவபேதங்களையும், அவற்றின் அதிஷ்டானஸ்வரூபத்தில் ஒடுக்கிப் பராவடிவமாய் நிற்கவேண்டுமென்று இந்த ஸ்லோகம் கூறியதறியத்தக்கது (12)

கூடத்திரயாதிகளின் அபேத நிரூபணம்

(அ-கை) கூடத்திரய வடிவமாயும், திரிபுடி வடிவமாயும், மற்றும் பற்பல பேத வடிவங்களாயும் பாவிக்கப்படுவனவெல்லாம் அபேத வடிவ ஒன்றே யாமென்னும் விஷயம் இந்த ஸ்லோகத்தில் பிரதிபாதிக்கப் படுகின்றது.

माता मानं मेयं
बिन्दुत्रयभिन्नबीजरूपाणि ।
धामत्रयपीठत्रय-
शक्तित्रयभेदभावितान्यपि च ॥ १३ ॥

(ப-ரை) **माता मानं मेयं**=(காரண காமகலையானது) பிரமாதா, பிரமாணம், பிரமேயங்களாகும் திரிபுடியாகவும், **बिन्दुत्रयभिन्नबीजरूपाणि** = ரக்த, சுக்கில, மிச்ர பிந்துக்களாகவும், வாக்பவ, காமராஜ, சக்தி பீஜங்களாகவும் உள்ள பின்ன பின்ன வடிவங்களாகவும், **अपिच**=அன்றியும், **धामत्रय**=ஜாக்கிரஸ்வப்ன ஸுஷுப்திகளாகவும், அல்லது, ஸோம ஸூர்ய அக்கினி மண்டலங்களாகவும், **पीठत्रय**= காமகிரி, பூர்ணகிரி, ஜாலந்தர மென்னும் மூன்று பீடங்களாகவும், **शक्तित्रयभेदभावितानि**=இச்சை, ஞானம், கிரியை, யென்னும் முச்சக்திகளாகவும், இங்ஙனம் பற்பல விதங்களாகப் பாவிக்கப்படுவனவாயும் விளங்குகின்றது; என்றால், காரணகாமகலையே மும்மூன்றாகக் கூறப்படும் பற்பல பேதங்களாய் ஆயிற்று.

(வி-ரை) **अध्यारोपापवादाभ्यां प्रपञ्चो निष्प्रपञ्च्यते**—இல்லாததைக் கற்பித்தலாகிய அத்தியாரோபத்தினால் பிரபஞ்சத்தின் தோற்றமும், கற்பனையின் நீக்கமாகும் அபவாதத்தினால் மித்தியா பிரபஞ்சத்தின் நாசமும் உண்டாகின்றன.

அத்தியாஸ நிவர்த்தியே அதிஷ்டானவடிவ ஸ்வஸ்வரூப நிச்சயமாகும்.

ஆதலின், முன் அவித்தியாபாதத்தில் ஆத்மஸ்வரூபத்தில் ஆரோபிக்கப்பட்ட ஜகத், ஜீவ, பர பாவங்களின் அபவாதத்தின் பொருட்டே இந்த வித்தியாபாதம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜகஜ்ஜீவபரங்களின் பேதம் ஆரோபமும், அவற்றின் அபேதவுணர்ச்சி அபவாதமுமாகும். (13)

திரிபுடித் தோற்றம்.

(அ--கை) இதில் திரிபுடித் தோற்றமும், அதன் அபவாதமும் கூறப்படுகின்றன.

तेषु क्रमेण लिङ्ग-
त्रितयं तद्वच्च मातृकात्रितयम् ।
इत्थं त्रितयपुरी या
तुरीयपीठा च भेदिनी विद्या ॥ १४ ॥

(ப-ரை) तेषु = அந்த மூன்று பீஜங்களில், **क्रमेण** = முறையே, लिङ्गत्रितयं = ஸ்வயம்புவாதி மூன்று, லிங்கங்களும், அல்லது, பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும், तद्वच्च = அங்ஙனமே, मातृकात्रितयं =अ, क, थ என்னும் மூன்றுமாத்ருகைகளும், इत्थं = இங்ஙனமே, या = எந்த பராசக்தி, त्रितयपुरी =மூன்றென்னும் ஸங்கியையுள்ள காரியத்தொகுதியான சரீரத்தை யுடைத்தாய் விளங்குகின்றனளோ, அவளே, तुरीयपीठा च = நான்காவதான அதிஷ்

டான காரணஸ்வரூபமாயிருந்துகொண்டு, भेदिनी विद्या= நாநாவாய் விளங்கும் பிரபஞ்சோல்லாஸ வடிவமாயும், அதைப் பேதிக்கும் அகண்ட அபேதத்தை யுணர்த்தும் ஞானமாயும் விளங்குகிருள்.

(தா--ம்) அத்தியாரோபத்திஞல் அத்விதீயமாயுள்ள வொன்றே இரண்டாகவும், மூன்ருகவும், பலவாகவும் தோன்றுகின்றது. இந்தத் தோற்றத்தை யபவாத யுக்தி யைக்கொண்டு பேதித்து "ஏகமாயுள்ள நிலைதான் உண் மை" யென்று தீர்மானம் செய்தல் வேண்டும்.

இந்த விவேகந்தான் வித்தையென்னும் பெயரால் விவகரிக்கப்படுகின்றது. இந்த ஜகத்தானது திரிபுடீ ரூப மாய்த் தோன்றுகின்றது.

இவ்விஷயந்தான் 12, 13, 14 ஶ்லோகங்களில் கூறப்பட்டுள்ளதன் திரண்டபொருளாகும்.

இங்ஙனம், எந்த சிவாபின்ன சித்சக்தியானது மூன் றென்னும் ஸங்கியைகளையுடைய சரீரங்க (புரங்க) ளைப் பெற்று விளங்கினும், அவை யதிஷ்டானமாகும் துரீயத் திற்குப் பின்னப்பட்டதன்று எனத் திடமாய்த் தெரிந்து தெளிவதே தத்துவஞானமாகும். (14)

ஸூக்ஷ்ம பஞ்சபூதங்களின் விவரணம்.

शब्दस्पर्शौ रूपं
रसगन्धौ चेति भूतसूक्ष्माणि ।
व्यापकमाद्यं व्याप्तं
तूत्तरमेवं क्रमेण पञ्चदश ॥ १५ ॥

(ப-ரை) **शब्दस्पर्शौ** = சப்தமும், ஸ்பர்சமும், **रूपं** = ரூபமும்; **रसगन्धौ चेति** = ரஸம், கந்தம் என்னும் இரண்டும் ஆக ஐந்தும் சேர்ந்து, **भूतसूक्ष्माणि** = ஸூக்ஷ்ம பூதங்களெனப்படும். (இவற்றில்) **व्यापकमाद्यं** = முன் முன்னுள்ளது வியாபகமும், **व्याप्तं तूत्तरं** = பின் பின்னுள்ளது வியாப்பியமுமாகும். **एवं क्रमेण** = இவ்வாறாக, **पञ्चदश** = பதினைந்து.

குறிப்பு:—ஸூக்ஷ்ம பூதங்களே தன்மாத்திரைகள். இவை பூதங்களின் குணங்களாகவும் விவகரிக்கப்படும். பஞ்சபூதங்களிலும் உள்ள குணங்கள் பதினைந்தாகும்.

(வி-ரை) **गन्धवती पृथिवी; शब्दगुणकमाकाशं.** கந்த குணமுடையது பிரிதிவி; சப்தத்தைக் குணமாகவுடையது ஆகாசம். என்பன லக்ஷணவாக்கியங்களாகும்.

சிருஷ்டிக் கிரமத்தின்படி ஆகாசம் முதலில் தோன்றிற்று. அதனின்று வாயுவும், அதனின்று அக்கினியும், அதனின்று ஜலமும், அதனின்று பிரிதிவியும் தோன்றின. ஓவ்வொரு பூதத்திலும் அதனுடைய குணத்தோடு காரண பூதத்தின் குணமும் உண்டு. அதன் விவரமாவது:—

பூதம்—		தன்னுடையகுணம்—	காரணகுணம்.
ஆகாசம்—	1.	சப்தம்.	—
வாயு—	2.	ஸ்பர்சம்.	சப்தம்.
அக்கினி—	3.	ரூபம்,	ஸ்பர்சம், சப்தம்.
ஜலம்—	4.	ரஸம்,	ரூபம், ஸ்பர்சம், சப்தம்.
பூமி—	5.	கந்தம்,	ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம்.
	15		

வியாபக-வியாப்திகளின் விமர்சமாவது:—

வியாபகம்-அதிகதேச அதிககாலத்திலுள்ளது.

வியாப்தம்-குறைந்த தேச குறைந்த காலத்துள்ளது.

சிருஷ்டிக் கிரமத்தில் ஆகாசம் தோன்றியபின் வாயு முதலிய இதர பூதங்கள் தோன்றியிருப்பதால், வாயு முதலிய காரிய பூதங்களைவிடக் காரணபூதமான ஆகாசம் வியாபகம். அங்ஙனமே சப்தம் எல்லாப்பூதங்களிலும் வியாபித்துள்ளது. சப்தகுணகமான ஆகாசத்தில் ஸ்பர்சம் இல்லாமையால் ஸ்பரிசம் வியாப்தம்.

இங்ஙனமே மற்ற குணங்களிலும் அறிந்துகொள்க.

குறிப்பு:—நிரபேக்ஷிக வியாபகத்துவம் சைதன்னியத்திற்கேயுள்ளது; ஸாபேக்ஷிக வியாபகத்துவம் ஜடத்திற்குள்ளது. ஆகாசம் ஜடமாதலின், அதற்கு நிரபேக்ஷிக வியாபகத்துவம் இல்லை; அதன் வியாபகம் ஸாபேக்ஷிகமேயாகும். ஸ்பர்சாபேக்ஷையால் சப்தத்திற்கு வியாபகத்துவமுண்டு. இங்ஙனமே, ரூபாபேக்ஷையால் ஸ்பர்சத்திற்கும், ரஸாபேக்ஷையால் ரூபத்திற்கும், கந்தாபேக்ஷையால் ரஸத்திற்கும் வியாபகத்துவமுண்டு. கந்தம் வியாப்தமேயாகும். (15)

ஸ்ரீவித்யா பஞ்சதசாக்ஷரீ ஆவிர்ப்பாவம்.

(அ-கை) மேற்கூறிய பஞ்ச தன்மாத்திரைகளின் பதினைந்து குணங்களினின்றும் ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரீ வித்தை யாவிர்ப்பவித்ததெனக் கூறப்படுகின்றது.

पञ्चदशाक्षररूपा
नित्या चैषा हि भौतिकाभिमता ।
नित्याः शब्दादिगुण-
प्रभेदभिन्नास्तथानया व्याप्ताः ॥ १६ ॥

(ப-ரை) एषा—இந்த சித்சக்தியானவள், हि—எந்தக் காரணத்தினல், भौतिकाभिमता—குணங்களோடுகூடிய தன் மாத்திரைகளின் ஸம்பந்தினியாய் அங்கீகரிக்கப்பட்டனளோ, அந்தக் காரணத்தால், पञ्चदशाक्षररूपा—பதினைந்து பீஜாக்ஷரவடிவினளாயும், नित्या च—கூடஸ்த மஹாநித்தியா ஸ்வரூபிணியாயுமாகின்றனள். शब्दादिगुणप्रभेदभिन्नाः — சப்தாதி குணங்களின் பேதத்தால் பின்ன பின்னமாய் விளங்கும், नित्याः —காமேஸ்வரி, பகமாலினி முதலிய பதினைந்து நித்தியாதேவிகளும் तथा—அங்ஙனமே, अनया—கூடஸ்த மஹா நித்தியையாகும் ஷோடசீ நித்தியை (திரிபுரஸுந்தரி) யால், व्याप्ताः—வியாபிக்கப்பட்டவர்களா யாகின்றனர்.

(வி·ரை) எங்ஙனம், முன்ஸ்லோகத்தில் சப்தம் வியாபகமும், மற்றவை வியாப்தங்களாகவும் கூறப்பட்டதோ, அங்ஙனமே, இந்த ஸ்லோகத்திலும், கூடஸ்த மஹாநித்தியாஸ்வரூப திரிபுரஸுந்தரி வியாபகமும், காமேஸ்வரி முதல் சித்திரை யீருகவுள்ள பதினைந்து நித்தியைகளும் வியாப்தமுமாவர். இந்த விஷயத்தை तथा என்னும் பதம் ஸூசிப்பிக்கின்றது.

முன்னர் பதினோராவது ஸ்லோகத்தில், வித்தைக்கும் அதிதேவதைக்கும் அபேதம் கூறப்பட்டது. एषा भौतिकाभिमता என்று கூறப்பட்டதனுல், தன்மாத்திரைகளின் ஸமஷ்டியான பதினைந்து குணங்களினின்றும் ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையின் பீஜாக்ஷரங்கள் தோன்றின வென்றேற்படுகின்றது. ஆதலின், பஞ்ச தன்மாத்திரைகளின் ஸமஷ்டிக்கும், ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தைக்கும் அபேதமென்பது தெளிவாகின்றது.

பதினைந்து பீஜங்களும் பதினைந்து நித்தியைகளின் வாசகங்களாயும் இருப்பதனுல், பஞ்சதசாக்ஷரீ வித்தைக்கும்

நித்தியைகளுக்கும் அபேதம். வாச்சிய வாசகரூப நித்தியை களும், பீஜங்களும், லக்ஷ்யமான ஷோடசீஸ்வரூப சித்சக்தி யினின்றும் தோன்றியவை யாதலின், அவ்வதிஷ்டான காரண சித்கலையில் அவை தாதாத்மியத்தையடைகின்றன. இது ரஹஸ்யமாம். **तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः** என்னும் பிரமாணத்தின்படி **तस्माद्वा एतस्मात्** என்று கூறப்பட்டதனால், ஆத்மாவிலிருந்து அவ்வியக்தம், அதிலிருந்து மஹத்தத்துவம், அதிலிருந்து அஹங்காரம் தோன்றின.

ஆத்மா நிர்க்குணம், நிரம்சம், நித்தியம். அதனின்று முண்டான அவ்வியக்தம் குணத்திரயமிளிதமானது. அதனின்றும் தோன்றின மஹத்தத்துவம் ஸ்பஷ்டாஸ்பஷ்டமானது. அதனின்றும் தோன்றின அஹங்காரம் ஸ்பஷ்டமான ரூபமுடையது. இந்த அஹங்காரம் குணத்திரயவியாபகத்தை யடைந்தபோதுதான் திரிபுடியின் ஆவிர்ப்பாவம்.

ஆத்மாவிலிருந்து ஆகாசாதிகள் உண்டாயினவென்று கூறும் சுருதி வாக்கியத்திற்கு, அவ்வியக்த, மஹத்தத்துவ, அஹங்காராதிகளாய் விளங்கும் ஆத்மாவினின்று தான் ஆகாசாதிகள் தோன்றின வென்பது தாத்பரியமாம்.

ஆதலின் ஸர்வகாரண காரணமாகும் ஆத்மாதான் மஹாநித்யையாகும். இதுவே ஷோடசிகலை.

ஆகாசாதி பஞ்சபூதங்களின் தோற்றத்திற்குக் காரணமாகும் ஆத்ம ஸ்வரூபத்திற்கு அஹங்காரம் ஸ்தூலோபாதியும், மஹத்தத்துவம் ஸூக்ஷ்மோபாதியும், அவ்வியக்தம் காரணோபாதியுமாகின்றன. பிந்துவே ஆத்மா; திரிகோணம் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணோபாதிகள். சப்ததன்மாத்திரை

கள் ஐந்து, ஸ்பர்ச தன்மாத்திரைகள் நான்கு, ரூபதன் மாத்திரைகள் மூன்று, ரஸ தன்மாத்திரைகள் இரண்டு, கந்த தன்மாத்திரை ஒன்று ஆகப் பதினைந்தும் பஞ்சதச பீஜங்களோடுகூடிய ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையா கும். இவையே பஞ்சதசதிதிநித்தியைகள். இந்த நித்தியைகள் பதினைந்துபேருக்கும் விருத்தி (வளர்வு) க்ஷயங் (தேய்வு) களுண்டு. (16)

நித்தியைகளின் விமர்சம்.

नित्यास्तिथ्याकारा-
स्तिथयः शिवशक्तिसमरसाकाराः ।
दिवसनिशामय्यस्ताः
श्रीवर्णास्तेऽपि तद्द्वयीरूपाः ॥ १७ ॥

(ப-ரை) नित्याः — முற்கூறிய பதினைந்து நித்தியைகளும், तिथ्याकाराः —பிரதமை முதல் பௌர்ணமி வரையிலுள்ள பதினைந்துதிதிகளின் வடிவமாயுள்ளவர்கள். तास्तिथयः —இந்த பதினைந்து திதிகளும், दिवसनिशामय्यः —பகல் இரவு மயமாய் விளங்குகின்றன. அன்றியும், शिवशक्तिसमरसाकाराः—சிவசக்தி ஸாமரஸ்ய வடிவமானவை. ते श्रीवर्णा अपि—ஸ்ரீவித்யையின் பதினைந்து அக்ஷரங்களும், तद्द्वयीरूपाः —முற்கூறிய அஹோராத்ர வடிவமாகவும் சிவசக்தி ஸாமரஸ்யவடிவமாகவும் விளங்குகின்றன. ஆதலின், நித்யைகளும், பஞ்சதசியின் வர்ணங்களும் அஹோராத்திர ஸ்வரூபிணிகளாகவும், சிவசக்தி ஸாமரஸ்யவடிவினராகவும் விளங்குகின்றனர்.

(வி-ரை) பஞ்சதசீ வித்தையிலுள்ள ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு நித்தியையைக் குறிக்கும்.

ஒவ்வொரு நித்யையும் பகலில் பிரகாசரூப சிவாத்மக மாகவும், இரவில் விமர்சவடிவ சக்தியாத்மகமாகவும் விள ங்குவது அறியத்தக்கது.

ஸ்ரீவித்தையின் பதினைந்து பீஜங்கள் பாஞ்சபௌதி கப் பிரபஞ்சவடிவமாய் இருப்பதோடு கால ஸ்வரூபமாக வும் விளங்குகின்றன வென்பது இதில் பிரதிபாதிக்கப்பட் டுள்ள விஷயமாகும். காலாதிஷ்டான தேவதைகள்தான் திதிநித்தியைகள். காலதேசாதிகள் யாவும் சிவாபின்ன சித்சக்தியில் கற்பனையாகும். (17)

பஞ்சதசீவித்தைக்கு விஸ்வாத்மகத்துவமும், விஸ்வோ த்தீர்ணத்துவமும் கூறப்படுகின்றன.

अज्व्यञ्जनबिन्दुत्रय-
समष्टिभेदैर्विभाविताकारा ।
षट्त्रिंशत्तत्वात्मा
तत्वातीता च केवला विद्या ॥ १८ ॥

(ப-ரை) अचः — உயிர் எழுத்துக்கள் (ஸ்வரங்கள்) व्यञ्जनानि—மெய்யெழுத்துக்கள், बिन्दुत्रयं—மூன்று அநுஸ் வாரங்கள், ஆகிய இவைகளின் வியஷ்டியும், समष्टिभेदैः — ஸமஷ்டியுமான பேதத்தால், विभाविताकारा—நன்கு பாவிக் கப்பட்ட ஸ்வரூபமுடையனவாய், षट्त्रिंशत्तत्वात्मा—முப்பத் தாறு தத்துவாத்மகமாயும், तत्वातीता च — அத்தத்துவங் களுக்கு அதீதமானதாயும், केवला—அத்விதீயமாயும் விளங் குவது, विद्या—ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரீ மஹாவித்தையாகும்.

(வி-ரை) உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், அநுஸ்வாரங்கள் என்னும் பேதத்தினுல் மஹாவித்தையில் வியஷ்டியாய்ப் பிரிதிவி முதல் சிவாந்தமான முப்பத்தாறு தத்துவாத்மகத்துவமும், ஸமஷ்டியாய்த் தத்துவாதீதஸ்வரூபமும் ஸூசிப்பிக்கப்படுகின்றன.

குறிப்பு :—இந்நூலாசிரியர் ஸ்ரீமத் புண்ணியாநந்தநாதர் ஹாதிவித்யோபாஸகராதலின், அந்த ஹ்ராதி வித்தைக்கே இத்தகைய விமர்சத்தைச் செய்கின்ருரென்பதறியத்தக்கது.

அதன் விளக்கமாவது:—ஹாதிவித்தை :—

முதல் கூடம் = ह् + अ + स् + अ + क् + अ + ल् + अ + ह + र् + ईं + म् = உயிர் 5. மெய் 6. பிந்து 1 ஆ 12.

இரண்டாவது கூடம் = ह् + अ + स् + अ + क् + अ + ह् + अ + ल् + अ + ह् + र् + ईं + म् = உயிர் 6. மெய் 7. பிந்து 1. ஆ 14.

மூன்ருவது கூடம் = स् + अ + क् + अ + ल् + अ + ह् + र् + ईं + म् = உயிர் 4. மெய் 5. பிந்து 1 ஆ 10.

ஆக மூன்று கூடங்களிலும் சேர்ந்து உயிர் 15, மெய் 18, பிந்துக்கள் 3 ஆ முப்பத்தாறு வர்ணங்கள். இவை தனித்தனியாய் முப்பத்தாறு தத்துவங்களேயும், ஸமஷ்டியாய்த் தத்துவாதீத ஸ்வரூபத்தையும் தெரிவிக்கின்றன.

இத்தகைய விமர்சம் காதி வித்தையில் பொருந்துவதில்லே.

இதற்கு வியாக்கியானம் செய்த ஸ்ரீநடனாநந்த நாதர்

இது காதிவித்தைக்கும் பொருந்தும் என்று கூறியிருக்கின்றனர். எங்ஙனம் பொருந்துமென்பது நன்கு விளக்கப்படவில்லை.

காதிவித்தையில் இந்த ஸ்லோகம் பொருந்தாத பாகம் வாக்பவகூடமேயாகும். காதிவித்யா வாக்பவ (முதல்)கூடத்தில் क्+अ+ए+ई+ल्+अ+ह्+र्+ई+म्= உயிர் 5. மெய் 4. பிந்து 1. ஆக 10 வர்ணங்கள்தான் இருக்கின்றன. ஆதலின் ஹாதி வித்தைக்கும், காதி வித்தைக்கும் முதல் கூடத்தில் இரண்டு வர்ணங்கள் வித்தியாஸம். ஆதலின் ஸ்ரீபாஸ்கரராயர், வரிவஸ்யாரஹஸ்யத்தில் (II-27) ஒவ்வொரு கூடத்திலும் பிந்துவோடு ஒவ்வொரு நாதத்தையும் சேர்த்து முப்பத்தேழென்று கூறி, அவற்றில் முப்பத்தேழாவது தத்துவாதீதஸ்வரூபமென்று கூறியுள்ளார். முப்பத்தேழாவது முதல் கூடத்திலுள்ள ஏகாரமேயாகும்.

ரஹஸ்யாகமம், தத்துவ விவேகம் முதலிய கிரந்தங்களில் தத்துவாதீதஸ்வரூபம் சக்தி கூடத்திலுள்ள நாதமாகுமென்று கூறப்பட்டுள்ளது. அந்தியகூட நாதமெனின், பிந்து முதல் உன்மநீ, வரையிலுள்ள ஒன்பது வர்ணங்களையும் அதிக்கிரமித்து விளங்கும் ஸ்தானமென்றறியத்தக்கது. காதி வித்தையில் ஒவ்வொரு கூடத்திற்கும் உயிர், மெய் எழுத்துக்களின் கணக்கின் விவரம்:—

வாக்பவம்—உயிர்	5	காமராஜம்—உயிர்	6	சக்தி—உயிர்	4
மெய்	4	மெய்	7	மெய்	5
பிந்து	1	பிந்து	1	பிந்து	1
நாதம்	1	நாதம்	1	நாதம்	1
	11		15		11

ஆக மொத்தம் 37.

இவற்றுள் முப்பத்தாறு தத்துவங்களும், ஒன்று தத்துவாதீத ஸ்வரூபமுமாகும்.

यस्य यस्य पदार्थस्य या या शक्तिरुदाहृता ।
सा सा सर्वेश्वरी देवी स सर्वोऽपि महेश्वरः ॥
व्याप्ता पञ्चदशार्णैषा विद्या भूतगुणात्मिका ।
पञ्चभिश्च तथा षड्भिश्चतुर्भिरपि चाक्षरैः ॥
स्वरव्यञ्जनभेदेन सप्तत्रिंशत्प्रभेदिनी ।
सप्तत्रिंशत्प्रभेदेन षट्त्रिंशत्तत्वरूपिणी ।
तत्वातीतस्वरूपा च विद्यैषा भाव्यते सदा ॥

(வாமகேஶ்வர தந்த்ரம் VII. 31-33)

என்னும் பிரமாணத்தின்படி, எந்த எந்த வஸ்துக்களுக்கு என்ன என்ன ஸாமர்த்தியமுள்ளதோ, அது அது, பராசக்தியின் வடிவமாகும். இந்த பராசக்தி மஹேஶ்வரனுக்குப் பின்னமல்லாதவளே. முப்பத்தாறு தத்துவங்களின் வடிவ ஸர்வப்பிரபஞ்ச ஸமஷ்டி ஸாமர்த்திய வடிவினளான இந்த பராசக்தியானவள் பஞ்ச பூதங்களின் குணங்களினின்றும் அபிவியக்தமான ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ மஹாவித்தையால் குறிப்பிடப்படுகின்றனள்.

இவ்வித்தையானது, முறையே ஐந்து, ஆறு, நான்கென்று கூறப்படும் அக்ஷரஸங்கியையையுடைய மூன்று கூடங்களாகவும், உயிர், மெய் பேதத்தால் முப்பத்தேழு அக்ஷரங்களோடு கூடியதாகவும் விளங்குகின்றது. இந்த முப்பத்தேழு அக்ஷரங்கள் முப்பத்தாறு தத்துவ வடிவமாயும், அவற்றிற்கு அதீதமாயும் பாவிக்கப்படுகின்றன. இது காதி வித்தைக்கு அநுஸாரிணியான பிரமாணமாகும்.

விசேஷக்குறிப்பு:—

1. வித்தைக்கும் அதன் அதிஷ்டான தேவதைக்கும் அபேதம் கூறப்பட்டது.

2. வித்தைக்கும் முப்பத்தாறு தத்துவ வடிவ பிரபஞ்சத்திற்கும் அபேதம் கூறப்பட்டது; ஆதலின் வித்தியாதிஷ்டான தேவதையாகும் சித்சக்தியும் பிரபஞ்ச அபின்னையேயாவள்.

பிரபஞ்சம் அண்டபிண்ட வடிவம். அண்டபிண்டங்களுக்கு பேதமின்மை பிரஸித்தம்.

ஆதலின் உபாஸகனுக்கும் பிண்டத்திற்கும் வித்தைக்கும் பேதமில்லை.

இங்ஙனம் வித்யை, பிரபஞ்சம், உபாஸகன், தேவதை இவற்றின் அபேதத்தையுணர்தல் அத்தியாவசியம். இதற்குத்தான் சதுர்வித ஐக்கியமென்று சாஸ்திரம்கூறும். (18)

தேவிக்கும் பிரபஞ்சவடிவமாந்தன்மையும், பிரபஞ்சாதீதத் தன்மையும் கூறுதல்.

विद्यापि तादृगात्मा
सूक्ष्मा सा त्रिपुरसुन्दरी देवी ।
विद्यावेद्यात्मकयो-
रत्यन्ताभेदमामनन्त्यार्याः ॥ १९ ॥

(ப-ரை) विद्या = ஞானஸ்வரூபிணியும், सूक्ष्मा = அபரிச்சேத்யையும், देवी = ஸ்வயம்பிரகாச ரூபிணியும் ஆன, सा त्रिपुरसुन्दरी अपि = ஸர்வவேதாந்தங்களிலும் மிகப் பிரஸித்தையான அந்த திரிபுரஸுந்தரீதேவியுங்கூட, तादृगात्मा =

தத்துவாத்மகமாயும் தத்துவாதீதமாயும் விளங்கும் ஸ்வரூபத்தையுடையவளாவள்; ஆதலின், आर्याः = ஆத்மஞானிகள், विद्यावेद्यात्मकयोः = ஸ்ரீமத் பஞ்சதசீவித்தைக்கும், அதனால் அறியப்படும் அதிஷ்டான மஹாத்ரிபுரஸுந்தரீ தேவிக்கும், अत्यन्ताभेदं = ஸார்வகாலிக அபேதத்தை, आमनन्ति—ஸித்தாந்தம் செய்கின்றார்கள்.

(வி-ரை) வித்தியாபாதத்தின் ஆரம்பமாகும் பதினோராவது ச்லோகத்தில் विद्यादेवतयोरपि न भेदलेशोऽस्ति वेद्यवेदकयोः என்று உபக்கிரமிக்கப்பட்டு, இந்த அபேதம் உபஸம்ஹாரம் செய்யப்படுகின்றது; ஆதலின், இதில் வித்தியா பாதத்தின் முடிவு ஸூசிப்பிக்கப்படுவதறியத்தக்கது.

विद्यावेद्यात्मकयोः —வித்தையும் அவ்வித்தையால் அறியப்படும் தேவதையும், என்றால், ஞானமும் ஞேயமும் கொள்ளத்தக்கது; உபலக்ஷணமாய் ஞாதாவும் கொள்ளத்தக்கதே. ஞாதா, ஞானம், ஞேயமென்னும் திரிபுடியில் ஒன்றுக்கொன்று அபேதமென்பது ஸித்திக்கின்றது.

अत्यन्त अभेदं—முற்றும் அபேதம். பேதமானது கால தேசவஸ்து பரிச்சேதங்களால் ஏற்படக்கூடிய வொரு கல்பிதவுணர்வாகும். பேதத்தின் அத்தியந்த அபாவத்திற்கு அத்தியந்த அபேதமென்றுபெயர். எப்பொழுதும், எங்கும், எதிலும் பேதமேயில்லையென்பது திரண்டபொருளாகும். நாமம், ரூபம், காலம், தேசம். முதலியன பேதவுணர்ச்சிக்கு உபாதிகளாம். உபாதி நீக்கத்தில் பேதமே கிடையாது.

ஜீவன்முக்த ஞானிகளாகிய ஆரியர்கள் ஸதா அபேத தரிசிகளாதலின், அவர்கள் அபேதத்தையே பிரதிபாதனம் செய்கின்றனர்.

வித்யா விஷயமாய்ச் சில விஷயங்கள் இங்கே விமர் சிக்கப்படுதல் அவசியம்.

வித்யையென்பது ஸ்ரீவித்தை அல்லது பிரஹ்மவித் தையாகும். இது உபநிஷத்துக்களில் பிரதிபாதிக்கப்பட் டுள்ளது. பொதுவாய்ப் பஞ்சதசாக்ஷரியை ஸ்ரீவித்தை யென்று கூறினும், ஏகாக்ஷரியாகும் புவனேஸ்வரி-காமகலை, த்ரியக்ஷரி (பாலை), நவாக்ஷரி (சண்டி), ஷோடசி, மஹா ஷோடசி முதலியவைகளும் ஸ்ரீவித்தையில் சேர்ந்தவை யேயாகும்.

புவனேஸ்வரீ வித்தையாகும் ஏகாக்ஷரம் தேவீ உபநிஷத்தில் நன்கு பிரதிபாதிக்கப்பட்டுள்ளது.

காமகலாவித்தையையும் உபநிஷத் பிரதிபாத்தியமே.

பாலை—மூன்று பீஜங்களோடுகூடியதென்பது மிகப் பிரஸித்தமாயினும், ஷடக்ஷரியாய்த்தான் ஆசரணையில் இருக்கின்றது.

நவாக்ஷரீ—இதன் உத்தாரம் தேவீ உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. ஸப்தசதி யென்னும் ஸ்ரீதேவீமாஹா த்மியம் முழுமையும் இந்த நவாக்ஷரீ வித்தையின் அதிஷ் டான தேவியைப்பற்றிக் கூறுவதேயாகும்.

ஷோடசீவித்தை—இது ஸ்ரீமத் பஞ்சதசீ வித்தையின் கடைசியில் லக்ஷ்மீ பீஜத்தைச் சேர்ப்பதால் ஏற்படுவதா கும். இது லகுஷோடசியென்று கூறப்படும்.

மஹாஷோடசி—இது இருபத்தெட்டு பீஜங்களோடு கூடி விளங்குவது. இது ஸர்வோத்க்ருஷ்டமானது. त्रिया हृष्टाविंशतिवर्णमयी என்பது ஸ்ரீகௌடபாத ஸூத்ர மாகும். இதன் உத்தாரம் தந்த்ரங்களில் மிகரஹஸ்ய மாய்க் கூறப்பட்டுள்ளதால் அது இங்கே கூறப்படுகின்றது.

महाषोडश्युद्धारः —

मा-माया-स्मर-वाग्भवाश्च सपरा वेदादिवीजं ततो
हृल्लेखा स्मरमातृवीजसहिता कूटत्रयं तद्वत् ।
शक्तिर्वाग्भव-मार-माय-रमया युक्तं त्वदीयं मनुः
भाव्यं षोडशबीजराजसहितं श्रीराजराजेश्वरी ॥

(உரை) मा—லக்ஷ்மீ, माया—ஹ்ருல்லேகை, स्मर—மந்மதன், वाग्भव—பாலாப்பிரதமபீஜம். सपराः—பாலையின் அந்தியபீஜம். वेदादिवीजं—பிரணவம். स्मरमातृ—லக்ஷ்மீ, कूटत्रयं—பஞ்சதசி.

கூடத்திரயங்களை மூன்ருகக் கணக்கிடின் பதினுறு பீஜங்களே ஏற்படுகின்றன வென்பதறியத்தக்கது.

மேலே கூறப்பட்ட எல்லாவித்தைகளும் காயத்ரீஸ்வரூபத்தைவிடப் பின்னமானதன்று.

காயத்ரீ மந்த்ரார்த்தம்.

உலகத்தில் மிகப்பிரஸித்தமாயுள்ள ஆண், பெண், நபும்ஸகமென்னும் லிங்கதர்மங்களற்ற ஸச்சிதாநந்தலக்ஷணமுடைய, ஸூர்யமண்டல அந்தர்க்கதமான எந்த பிரஹ்ம தேஜஸ்ஸானது நம்முடைய புத்திவ்ருத்திகளைப் பிரேரணை செய்கின்றதோ, ஜகத்தின் சிருஷ்டியாதி தர்மங்களையுடையதாயும், பிரகாச ஸ்வரூபமுடையதாயும், யாவராலும் ஸேவிக்கத்தக்க சிரேஷ்டமானதாயும், ஸகல நிகமாகமங்களில் மிகப்பிரஸித்தமாயுமுள்ள அந்தப் பிரஹ்ம தேஜஸ்ஸை தியானிக்கின்ருேம். ஸர்வ ஜகத்காரணமாகும் பிரக்ருதியைவிட வேருகவுள்ள பராசக்தி

தனது ஸாயுஜ்யரூப மோக்ஷத்தை, அதாவது, பிரஹ்மாப ரோக்ஷ ஞானத்தையருளி நம்மை ரக்ஷிக்கட்டும்—என்பது நான்கு பாதங்களோடு கூடிய காயத்ரியின் அர்த்தமாகும்.

பாலாமந்த்ர தாத்பரியம்:

वाग्भववीजेन वेदचतुष्टयस्वरूपं, ब्रह्मविष्णुरुद्रमहेश्वर-स्वरूपं, परा-पश्यन्ती-मध्यमा-वैखरीरूपशब्दब्रह्मस्वरूपं प्रतिपादितम् ॥ १ ॥

कामराजवीजे ककारस्य ब्रह्मार्थः, ईकारस्य तेजःपुञ्जात्मक-चिच्छक्तिरर्थः, लकारस्य लाति गृह्णातीति व्युत्पत्त्या तद्विशिष्टमर्थः। अन्तर्यामिरूपेण प्रतिपादितो विन्दुः शिवस्वरूप इत्यर्थः ॥ २ ॥

शक्तिवीजस्य स् औः इति छेदः । स् (सः) पूर्वोक्तस्वरू-पाभिन्नब्रह्मवस्तु । विसर्गोऽहंपदवाच्यो जीवः । औकारेण अभेदः प्रतिपादितः । अहं ब्रह्मास्मि ब्रह्मैवाहमस्मि ॥ ३ ॥

சப்தப் பிரமாணத்தின் லக்ஷணவ்ருத்தியால் அதாவது, ஜஹதஜஹல்லக்ஷணையால் காரிய காரணோபாதிகளை நிரஸனம் செய்து "ஸோஹம்; அஹம் ஸ:" என்று அநுஸந்தானம் செய்வதே பாலாமந்த்ரார்த்தத்தின் ஸாரமாகும்.

பஞ்சதசீ வித்தையின் தாத்பரியம்—ஹே மஹாமாயையே! பிரஹ்மத்தில் கற்பிதமாய்த் தோன்றும் மாயாவ்ருத்திகளை நீக்கி, அகண்டாகார பிரஹ்ம வ்ருத்தியை யுண்டாக்கிப் பின்னர், அவ்வகண்டாகாரவ்ருத்தியையும் நீக்கி, ஸஹஜ ஸ்திதியில் நிலைபெறச் செய்வாயாக—என்பதாம்.

மஹாஷோடசீ வித்தையின் தாத்பரியம் :—ஏகமாயும் அத்விதீயமாயுமுள்ள ஆத்மாபின்ன பிரஹ்மமானது, அவ்யக்த, மஹத்தத்துவ, அஹங்கார, அர்த்தநாரீஸ்வரஸ்வரூபமாயும், பார்வதீபரமேஸ்வர, வாணீஹிரண்யகர்ப்ப, லக்ஷ்மீநாராயண மிதுனங்களாயும், அக்னீஷோமாத்மக பிரிதிவியாதி பாஞ்சபௌதிக ஸர்வப்பிரபஞ்சமாகவும் விளங்குகின்றது. இங்ஙனம் அத்தியாரோபத்தால் நானுவாய்த்தோன்றும் பேதவிருத்திகளை நீக்கி, ஹே மாயாதீத பரதேவதையே! அகண்டாகாரவ்ருத்தியை யருளி ஜீவன் முக்த ஸஹஜஸ்திதியில் நிறுத்துவாயாக—வென்பதாகும்.

காமகலை—ஏகாக்ஷரீ மந்த்ரதாத்பரியம் :—

श्+र्+ई+म् என்னும் நான்கு பீஜங்கள் இவை முறையே, பிரகாச, விமர்ச, மிஸ்ர, ஸம்வித்பிந்துக்களென்றும், ஆத்மதத்துவ, வித்யாதத்துவ, சிவதத்துவ, துரீயதத்துவஸ்வரூபமென்றும், ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண, சித் சரீரங்களென்றும், ஜாக்கிர, ஸ்வப்ன, ஸுஷுப்தி, துரீயாவஸ்தைகளென்றும், விஸ்வ, தைஜஸ, பிராக்ஞ கூடஸ்தர்களென்றும் பொருள்படும்—என்று சாஸ்திரங்கள் பறைசாற்றுகின்றன.

புவனேஸ்வரி—ஏகாக்ஷரீ மந்த்ர தாத்பர்யம் :—

ह्+र्+ई+म्=என்னும் நான்கு பீஜங்கள். இதற்கும் மேலே காமகலைக்குக் கூறியபடியே அர்த்தம் செய்யப்பட்டுள்ளது. அன்றியும் இந்த மந்த்ரத்திற்கு ஷோடச கலாத்மகஸ்வரூபம் கூறப்பட்டுள்ளது. ह=8. र=2. ई=4. பிந்து 1. ஆக 15 கலைகள் வியஷ்டியிலும், ஸமஷ்டியாய் ஒன்றுங்கூடி பதினாறு கலைகள் கணக்கிடப்பட்டுள்ளன.

அன்றியும், இந்த புவனேஸ்வரீமந்த்ரமானது மஹா வாக்கிய ஸ்வரூபமாயும் இருக்கின்றது. ह्=தத்பதம்; र्=துவம்பதம். ईम्=அஸிபதம்.

நவாக்ஷரீ மந்த்ர தாத்பர்யம்:—

निर्धूतनिखिलध्वान्ते नित्यमुक्ते परात्परे ।
अखण्डब्रह्मविद्यायै चित्सदानन्दरूपिणीम् ॥
अनुसंदध्महे नित्यं वयं त्वां हृदयाम्बुजे ।
इत्थं विशदयत्येषा या कल्याणी नवाक्षरी ॥

தாத்பரியம்:—காரியகாரண அக்ஞானங்களை யொழித்த ஞானஸ்வரூபிணியே! எப்பொழுதும் அக்ஞான ஸம்பந்தம் அற்பமுமின்றி விடுபட்டுள்ளவளே!! எல்லாவற்றுள்ளும் பரம சிரேஷ்டமாய் யாவராலும் மதிக்கப்படும் பிரஹ்மாநந்த ஸ்வரூபியே!!! காலதேசவஸ்து பரிச்சேதமற்ற ஜீவப்பிரஹ்மைக்கியஸ்வரூப பிரஹ்மவித்தையின் பொருட்டு நான் உம்மை அநுஸந்தானம் செய்கின்றேன். இங்ஙனம், நவாக்ஷரீ மந்த்ராதிஷ்டான ஸ்வரூபமாயும், மோக்ஷப்ரதையாயுமுள்ள சண்டீவித்தையின் அர்த்தம் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளதறியத்தக்கது.

மேற்கூறியவித்யைகள் யாவும் ஆத்மாபரோக்ஷஞான ஸாதனங்களாயிருத்தலின், பிரஹ்மவித்தைக்குத் தினையளவும் வேறுபடாத ஸ்ரீவித்தையில் சேர்க்கப்பட்டுள்ளனவென்று அறிதல் வேண்டும்.

எங்ஙனம் பிரணவமானது பரமேஸ்வரனுக்கு வாசகமோ, அங்ஙனமே மேற்கூறியனவும், பிறவுமான வித்தை

-கள் பிரஹ்மாபின்ன சித்சக்தியின் வாசகங்களாம். பர தேவதைக்கு வித்யாத்மகத்துவம் வாச்யார்த்தத்திஞலும், அதிஷ்டானத்துவம் லக்ஷ்யார்த்தத்திஞலும் சித்திக்கின் றன.

சப்தாத்மகவித்தைக்கும், வித்யாதிஷ்டானதேவதைக் கும் அபேதம் கூறிய காரணத்தால் அர்த்தாத்மக பிரபஞ் சத்திற்கும், பிரபஞ்சாதிஷ்டான பரதேவதைக்கும் அபே தம் சித்திக்கின்றது. இங்ஙனம் அண்டபிண்டவடிவ பிர பஞ்சத்திற்கும், தேவதைக்கும், வித்தைக்கும் யாதொரு பேதமுமில்லையென்று ஸந்தேஹவிபரீதங்களறத் திடமாய் அறிந்து தெளிந்த பாக்கியவாஞுக்குத் துக்கமென்பது ஒரு சிறிதும் கிடையாதென்பது சிதையாத ஸித்தாந்தமாகும்.

அத்தகைய, மஹாநுபாவனுக்கு இவ்வுலகம் பரமா நந்தமயமாய் விளங்கும். அபேததரிசனமே ஆநந்த அபி வியஞ்ஜகமாகும்.

ஸ்ரீகாமகலா விலாஸம்
வித்யா பாதம்
முற்றிற்று.

ஸ்ரீகாமகலாவிலாஸம்.

ஆநந்தோல்லாஸம்

ஆநந்தபாதம்.

(அவதாரிகை) முன் வித்யாபாதத்தில் அபேதம் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. அபேத தர்சனத்தின் மஹாபலன் அபயரூப ஆநந்தமே யாதலின் வித்யாபாதத்திற்குப் பின்னர் ஆநந்தபாதம் வைக்கப்பட்டுள்ளது அறியத்தக்கது. இந்த பாதத்தில் ஸ்ரீசக்கிரத்தின் நிரூபணம் செய்யப்படுகின்றது. ஸ்ரீசக்கிரத்திற்கும் ஆநந்தத்திற்கும் என்ன ஸம்பந்தமென்று யாவருக்கும் சங்கையுண்டாகலாம். அதற்கு ஸமாதானம் கூறப்படுகின்றது.

आनन्दं ब्रह्मणो रूपं तच्च देहे व्यवस्थितम् ।
तस्याभिव्यञ्जको देहो रक्षणीयो महामुने ॥

என்று திரிபுரார்ணவம், சர்யாபாதம் கூறுவதால் சரீரமே ஆநந்தஸ்வரூப சிவத்தின் அபிவியஞ்ஜகமென்றேற்படுகின்றது.

ஸ்ரீசக்கிரத்தைச் சிவசக்திகளின் சரீரமாகச் சாஸ்திரங் கூறுவதால் ஆநந்தாநுபவத்தின் ஆயதனமாகும். சிவசக்திகளின் சரீரவடிவ ஸ்ரீசக்கிரம் இந்த பாதத்தில் விமர்சிக்கப்படுவது நியாயமே யாகும். மேலும் இந்த ஸ்ரீசக்கிரத்திற்கும், பிண்டமாகும் ஜீவர்களின் சரீரத்திற்கும், பிரபஞ்சமாகும் அண்டத்திற்கும் அபேதம் சாஸ்திரம் பிரதிபாதிக்கின்றது.

சிவாபின்ன ஆத்மாநந்தம் சுத்தஸத்துவப்பிரதான அந்தக்கரணத்தில் அகண்டாகாரவ்ருத்தியால் அநுபவிக்கப்படுவதாதலின் அந்தக்கரணமே ஸ்ரீசக்கிரமென்பது பரம ரஹஸ்யமாகும். பரதேவதையே ஸ்ரீசக்கிரவடிவமாய் விளங்குகின்றனள்.

சக்கிர ஸங்கேதம்.

यासान्तरोहरूपा
परा महेशी त्रिभाविता सैव ।
स्पष्टा पश्यन्त्यादि-
त्रिमातृकात्मा च चक्रतां याता ॥ २० ॥

(பதவுரை) या—எந்த பரதேவதை असान्तरोहरूपा—அந்தக்கரணவிருத்தியால் இத்தகைய ஸ்வரூபமுடையவளென்று அளவிட்டுக் கூறமுடியாதவளும், ஆதலின் மனோவாக்குக்களுக்கு அதீதையானவளும், சிவாதி தரணியீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றுதற்குரிய பரமகாரண பூமியாகவுமுள்ள, परा महेशी—ஸர்வ வியாபியாயும் ஸர்வநியந்தாவாயுமுள்ள பராசக்தியாய் விளங்குகின்றனளோ, सैव—அவளே, त्रिभाविता—மூன்று விதமாய் ஆவிர்ப்பவித்தவளாய், स्पष्टा—விளக்கமான, पश्यन्त्यादि त्रिमातृकात्मा—பஶ்யந்தி, மத்தியமை, வைகரி என்று கூறப்படும் மூன்று மாத்ருகா வடிவத்தோடுள்ளவளாய், चक्रतां याता—ஸ்ரீசக்கிரரூபத்தை அடைந்தனள்.

பராவாக்ஸ்வரூப சித்சக்தியே பஶ்யந்தி, மத்தியமை, வைகரீ என்னும் மூன்று வாக்குகளின் வடிவ ஸ்ரீசக்கிர ரூபத்தை யடைந்தனள். இந்த ஶ்லோகத்தினால் பரா,

பஶ்யந்தீ முதலிய நான்கு வாக்குக்களே ஸ்ரீசக்கிரவடிவ மாயினவென்னும் தத்துவமும் வெளியாகின்றது.

चत्वारि वाक्परिमिता पदानि तानि विदुर्ब्राह्मणा ये मनीषिणः ।
त्रीणि गुहानिहितानीङ्गयन्ति तुरीयं वाचो मनुष्या वदन्ति ॥

(தாத்பர்யம்) பிரஸித்தமாயுள்ள பரா, பஶ்யந்தீ, மத்தியமை, வைகரியென்னும் நான்குவித வாக்குகளின் ஸ்தானங்களை எந்த ஸாதக முமுக்ஷுக்கள் அறிகின்றார்களோ அவர்களே மநீஷையோடு கூடியவர்கள் அதாவது வித்துவான்களாவர். அவற்றுள் பரா, பஶ்யந்தீ, மத்தியமையென்னும் மூன்றுவாக்குகளும் பராநாடியென்னும் குஹைக்குள் இருப்பதால் பாமரர்கள் அறியமாட்டார்கள். ஆயினும் மந்தமதியினராகிய மனுஷ்யர்கள் நான்காவதான வைகரீ வடிவத்தை நாவினால் உச்சரிக்கின்றார்கள்.

துரீயபாதத்தில் பிரகாசவடிவ சுத்தப் பிரஹ்மத்தின் அஹந்தா விமர்சமே பராசக்தியென்று கூறப்பட்டுள்ளது. ஆதலின் பரையின் வடிவம் अनुत्तररूपानुत्तरविमर्शलिपिलक्ष्यமேயாகும்; என்றால் अ-हं என்னும் இரண்டு அக்ஷரங்களின் லக்ஷ்யார்த்தவடிவினளே பரையென்றேற்படுகின்றது. अ முதல், ह வரையிலுள்ள நாற்பத்தொன்பது எழுத்துக்களே மாத்ருகைகளாமென்பது சித்தாந்த பக்ஷமாகும். இந்த ஸ்தூலமாத்ருகைகளே வைகரீவாக்காகும். வைகரீ வாக்கிற்குக் காரணம் மத்தியமை; அதற்குக் காரணம் பஶ்யந்தி; அதற்குக் காரணம் பரா. இந்த பராஸ்வரூபம் மஹாப்பிரகாச பிரஹ்மத்தின் அஹந்தாரூப விமர்சசக்தியே யாகும்.

காணப்படும் இந்த பிரபஞ்சமானது ஸத்-அஸத்-என்னும் இரண்டு பகுதிகளோடுகூடி விளங்குகின்றது. ஸத் = பிரஹ்மம். அஸத்து = மாயை.

अस्ति भाति प्रियं रूपं नाम चेत्यंशपञ्चकम् ।
आद्यत्रयं ब्रह्मरूपमन्त्यं मायिकमेव च ॥

மாயிகமாயுள்ள நாமரூப பாகங்களிலும் சிவசக்தியம்சங்களுள. நாமம் சக்தியம்சமும், ரூபம் சிவாம்சமுமாகும். ஸர்வஜகத் சிருஷ்டிக்கு ஆதிகாரணம் நாமாத்மக சப்தந்தான் என்று அவித்யாபாதத்தில் நன்கு பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே சப்தப்பிரஹ்மவடிவ சிற்சக்தியினின்றும் ஜோதிஸ்வரூப பிந்து ஒன்று தோன்றிற்று. இந்த பிந்துவினின்று பீஜமும், நாதமுமுண்டாயின. இந்த பீஜ, நாதங்களின் ஸமஷ்டிஸ்வரூபமே பராவாக்கெனப்படும். இந்த பராவாக்கு மூலாதாரத்தில் தோன்றிப் பொன் போல் விளங்கும். இந்த பரை பிராணவாயுவோடு கலந்து நாபிஸ்தானத்தை யடைந்தபோது முன்னிலும் அதிக பிரகாசமுள்ளதாய் விளங்கும். இதற்குத்தான் பஶ்யந்தீ யென்றுபெயர். பின்னர், இது ஸுஷும்னா மார்க்கமாய் ஹ்ருதயத்தை யடையும். அப்பொழுது இது மத்தியமையென்னும் பெயர் பெறும். மத்தியமையென்னும் இந்தவாக்கு பிரஹ்மரந்த்ரத்தை யடைந்து அக்ஷர ஸ்வரூபமாய் விளங்கும். இதற்கு வைகரீ வாக்கென்று பெயர். இங்ஙனம் ஸூதஸம்ஹிதை யக்ஞவைபவ கண்டம் நான்காவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. அன்றியும்,

शिवः शक्त्या समागमात् ।
शिवेच्छैव च सर्वेषामुत्पत्त्यर्थमनन्तरम् ॥

तदभूत्क्षोभितं विश्वकारणं योगमायया ।
तत्क्षोभतः समुत्पन्नं शास्त्रं नादस्वरूपतः ॥
प्रवृत्तं तदधः किंचिद्विकुब्जाकारतः शिवम् ।
स बिन्दुरिति विख्यातः शरच्चन्द्रसमप्रभः ॥

சிருஷ்டிகாலத்தில் சிவன் சக்தியோடு பொருந்துத லால் சிவேச்சையினுலேயே விஸ்வோத்பத்தியின் பொருட்டு யோகமாயையினுல் ஜகத்காரணமாகும் அது கலக்கப் பட்டது. அக்கலக்கத்தால் நாதஸ்வரூபமாக சாஸ்திர முண்டாயிற்று. அந்நாதத்தின் கீழ்ப்பாகத்தில் சற்று வளைந்த வடிவமாகப் பிரவர்த்தித்தது சிவம். சரத்கால சந்திரனைப்போன்ற பிரகாசமுடைய அது பிந்துவென்னும் பெயர் பெற்றது. (பௌஷ்கரம்)

मूलाधारगता शक्तिः स्वाधारा बिन्दुरूपिणी ।
तस्मादुत्पद्यते नादः सूक्ष्मबीजादिवाङ्कुरः ॥
तां पश्यन्तीं विदुर्विश्वं यया पश्यन्ति योगिनः ।
हृदये व्यज्यते घोषो गर्जत्पर्जन्यसंनिभः ॥
तत्र स्थिता सुरेशान मध्यमेत्यभिधीयते ।
प्राणेन च स्वराख्येन प्रथिता वैखरी पुनः ॥
शाखापल्लवरूपेण ताल्वादिस्थानघट्टनात् ।
अकारादिक्षकारान्तान्यक्षराणि समीरयेत् ॥

மூலாதாரத்திலுள்ள சக்தியானது ஸ்வாதாரமான பிந்துவடிவினதாம். அதனின்றும், வித்தினின்று முளை யுண்டாவதுபோல, நாதமுண்டாயிற்று; ஸர்வக்ஞரான

யோகிகளுக்கு அது விளங்கும் காரணத்தால் அதற்கு பஶ்யந்தீயென்னும் பெயரேற்பட்டது. ஹ்ருதயத்தில் மேகத்தின் கர்ஜனைபோல் ஒருகோஷம் வெளிப்படுகின்றது. இதற்கு மத்யமையென்று பெயர். இந்த மத்தியமை, பின்னர் பிராணனோடும், ஸ்வரத்தோடும் சேர்ந்து வைகரீயெனப்படுகின்றது. அண்ணம், நாக்கு முதலிய ஸ்தானங்களில் மோதுதலால் அகாராதி அக்ஷரங்கள் ஸ்புடமாகின்றன.

(யோக சிகோபநிஷத்)

இதன் ரஹஸ்யார்த்தம் கூறப்படுகின்றது:—

பிரஹ்மாண்டம், பிண்டாண்டம், மாத்ருகைகள் முதலியன சிவசக்தியாத்மகங்கள். ஸாதகர்களின் சிரஸில் பிரஹ்மரந்த்ரத்தின் கீழ் ஸஹஸ்ராரகமல மிருக்கின்றது. இதுதான் சித்சந்திரமண்டலம்--பரசிவஸ்தானம். ஸர்வ காரண ஸம்வித்பிந்து. இந்த ஸஹஸ்ராரத்திலிருந்து மூலாதாரம் வரை ஸுஷும்னை யென்னும் பராநாடி வியாபித்திருக்கின்றது. இது சக்திஸ்வரூபம். மேலுள்ள சித்சந்திரமண்டலத்தின் தேஜஸ்ஸானது இந்த நாடியின் மூலமாயப்பிரஸரித்து, மத்தியிலுள்ள ஷட்கமலங்களேயும் பிரகாசிப்பிக்கச் செய்கின்றது. இதற்கு பிரஹ்மதண்டமென்றும் மற்றொரு பெயருண்டு. ஆகவே பிரஹ்மசக்தியாகும் ஸரஸ்வதி, அகாராதி க்ஷகாராந்தமான ஐம்பது மாத்ருகைகளாக விசுத்தி முதலிய கமலங்களில் விளங்குகின்றனள். விசுத்தி முதலிய ஆறு கமலங்களில் விளங்குவன வைகரீ வாக்கேயாகும். இது ஸ்தூலம். வாக்ரூபிணியாகும் சித்சக்தியானவள் மூலாதாரத்தில் பிந்துவடிவங்கோண்டு பரையாகவும், நாபிஸ்தானத்தில் நாதவடிவங்கோண்டு பஶ்யந்தீயாகவும், ஹ்ருதயத்தில் துவனி வடிவங்கோண்டு மத்தியமை

யாகவும், முகத்தில் அக்ஷரவடிவங்கொண்டு வைகரீயாகவும் விளங்குகின்றனளென்றறியவும்.

எங்ஙனம், சரீரத்திலுள்ள மூலாதாராதி சக்கிரங்கள் பஶ்யந்தி முதலிய மூன்றுவித மாத்ருகைகளின் வடிவமோ அங்ஙனமே, ஶ்ரீசக்கிரமும் மூன்றுவித மாத்ருகைகளின் வடிவமேயாகும். ஆதலின் சரீரத்திற்கும் ஶ்ரீசக்கிரத்திற்கும் அபேதம் கூறப்பட்டதாகும். (20)

(அ-கை) ஶ்ரீசக்கிரத்திற்கும் பரதேவதைக்கும் அபேதம் கூறப்படுகின்றது.

चक्रस्यापि महेश्या
न भेदलेशोऽपि भाव्यते विबुधैः ।
अनयोः सूक्ष्माकारा परैव
सा स्थूलयोश्च क्वापि भिदा ॥ २१ ॥

(ப-ரை) महेश्याः=திரிபுரஸுந்தரீ தேவிக்கும், चक्रस्यापि =ஶ்ரீசக்கிரத்திற்குங் கூட, भेदलेशोऽपि=அணுவளவு பேதமும், विबुधैः=பண்டிதர்களால், न भाव्यते = பாவிக்கப்படுவதில்லை. अनयोः=சக்கிரம், தேவதை இவர்களின், सूक्ष्माकारः= அபரிச்சேத்யமான ஸ்வரூபமானது, सा परैव=அந்த பராசக்தியேயாகும். स्थूलयोः=ஸ்தூலரூப திரிகோணாதி பூபுராந்தசக்கிரவடிவமாயும், அவற்றின் ஈஶ்வரிகளாயும் அந்த பராசக்தியே விளங்குவதால் ஸூக்ஷ்மமாயுள்ளபிந்து-பராசக்திகளுக்கும், ஸ்தூலமாயுள்ள இதரசக்கிர சக்கிரேஶ்வரிகளுக்கும், न क्वापि भिदा=கொஞ்சங்கூட பேதமில்லை.

(வி—ரை) முன்னர் பத்தொன்பதாவதுஸ்லோகத்தில் வித்யைக்கும் தேவதைக்கும் அபேதங் கூறப்பட்டது. பின்னர் இருபதாவது ஸ்லோகத்தில் அந்த வித்யாபின்ன தேவதையே பராவாக் ஸ்வரூபமாய் இருக்கின்றனளென்றும், அவளே ஸூக்ஷ்மமாயும், ஸ்தூலமாயுமுள்ள ஸ்ரீசக்கிராகாரம் எய்தினளென்றும் கூறப்பட்டது.

பராசக்தியின் ஸூக்ஷ்மரூபம் பராவாக்வடிவம். இது தேஜோபிந்து வடிவினது.

” ஸ்தூலரூபம் — ஐம்பத்தோரெழுத்துக்கள் வடிவ வைகரீவாக்கு. பஶ்யந்தீயும், மத்திமையுங்கூட பராவாக்கை நோக்க ஸ்தூலமேயாகும்.

இந்த ஸ்லோகத்தில் பராவாக்கிற்கும் ஸ்ரீசக்கிரத்திற்கும் அபேதம் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீசக்கிரத்தின் ஸூக்ஷ்மரூபம் பிந்து; ஸ்தூலரூபம் திரிகோணம், அஷ்டகோணம், அந்தர்த்தசாரம், பஹிர்த்தசாரம், மன்வஸ்ரம், அஷ்டதள-ஷோடசதள கமலங்கள், திரிவலயங்கள், பூபுரத்திரயம்; இவை முறையே முன்னதைவிட பிந்தியது ஸ்தூலமாகும். பூபுரம் அதிக ஸ்தூலமாம். பிந்துசக்கிரேஶ்வரியாகும் பரையே ஸூக்ஷ்மமானது. திரிகோணம் முதலிய சக்கிரேஶ்வரிகள் ஸ்தூலரூபமானவர்கள்.

सेयं परा महेशी चक्राकारेण परिणमेत यदा ।

என்னும் வாமகேஶ்வரதந்த்ர பிரமாணத்தின்படியும் சக்கிரதேவதைகளுக்கு அபேதமே ஸித்திக்கின்றது. (21)

(அ-ைக) இனி பராசக்தியின் பரிணாமமாகும் நவ யோனிவடிவ ஸ்ரீசக்கிரத்தை விமர்சிக்கத்தொடங்கி முதலில் ஸர்வாநந்தமயமென்னும் பெயரையுடைய பிந்துசக்கிரத்தை வர்ணிக்கின்றார்.

பிந்துமண்டல நிரூபணம்.

मध्यं चक्रस्य स्यात्
परामयं बिन्दुतत्वमेवेदम् ।
उच्छूनं तच्च यदा
त्रिकोणरूपेण परिणतं स्पष्टम् ॥ २२ ॥

(ப-ரை) चक्रस्य—ஸ்ரீசக்கிரத்தினுடைய, मध्यं—மத்தியிலுள்ள, इदं बिन्दुतत्वं — ஸ்வஸாக்ஷாத்காரஸ்தானமாகிய பிந்துவினுடைய யதார்த்தஸ்வரூபமானது, परामयमेव — பரையென்னும் சித்சக்தியின் வடிவமேயாகும். तच्च—அந்த பைந்தவஸ்தானமும், यदा—எப்பொழுது, उच्छूनं भवति—விகாஸபாவத்தை யடைகின்றதோ, तदा — அப்பொழுது, स्पष्टं त्रिकोणरूपेण—ஸ்பஷ்டமாக ஸ்தூலத்ரிகோணவடிவமாய், परिणतं—பரிணமித்ததாய், भवति—ஆகின்றது.

(வி-ரை) ஸ்ரீசக்கிரத்திலுள்ள பிந்து பராஸ்வரூபமே. இது ஸ்ரீசக்கிரத்திலுள்ள ஒன்பது சக்கிரங்களுக்கும், பஶ்யந்தி, மத்தியமை, வைகரீயென்னும் மாத்ருகைகளுக்கும் காரணமாய் இருக்கின்றது. त्रिमातृकात्मा च चक्रतां याता என்று கூறப்பட்டுள்ளதனால் பஶ்யந்தி முதலிய மூன்றுமாத்ருகைகளே திரிகோணம் முதலிய சக்கிரவடிவங்களாய்ப் பரிணமித்தனவென்றேற்படுகின்றது. ஆதலின் மாத்ருகைகளின் உத்பத்தியையும், அதன் மூலமாய் சக்கிரங்களின் உத்பத்தி

யையுங் கூறுதல் பொருத்தமுடையதாகும். பிந்துஸ்தானமானது மாத்ருகைக்கும், சக்கிரத்திற்கும் பிரதம காரணமாயிருக்கின்றது. பிந்துவிலிருந்து பஶ்யந்தியாதி மூன்று மாத்ருகைகளும் தோன்றிற்று; அங்ஙனமே அதிலிருந்து திரிகோணாதி ஒன்பது சக்கிரங்கள் தோன்றின. ஆதலின் மாத்ருகையும், சக்கிரமும் முறையே, நாமரூபங்களாயிருக்கின்றன. இந்த பிந்து விகாஸபாவத்தை யடையுங்கால் தேஜோமயமான திரிகோணமண்டலம் உண்டாகின்றது. பின்னர், கிரமக்கிரமமாய் அஷ்டகோணம் முதலிய சக்கிரங்களுண்டாகின்றன. (22)

யோநிசக்கிர நிரூபணம்.

एतत्पश्यन्त्यादि-
त्रितयनिदानं त्रिबीजरूपं च ।
वामा ज्येष्ठा रौद्री
चाम्बिकयानुत्तरांशभूताः स्युः ॥ २३ ॥

(ப—ரை) **एतत्** — மத்தியபிந்துவின் விகாஸரூபமான இந்த திரிகோணசக்கிரமானது, **पश्यन्त्यादित्रितयनिदानं** — பஶ்யந்தீ, மத்தியமை, வைகரீயென்னும் மூன்று மாத்ருகைகளின் ஆவிர்ப்பாவ காரணமாயும், **त्रिबीजरूपं च**—வாக்பவ, காமராஜ, சக்திபீஜஸ்வரூபமாயும் இருக்கின்றது. **वामा ज्येष्ठा रौद्री**—வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீயென்னும் முச்சக்திகள், **अम्बिकया**—அம்பிகையோடு, **च**—பரையின் விலாஸ வடிவ பஶ்யந்தியோடும், ஆக பஞ்சசக்திகளும் சேர்ந்து, **अनुत्तरांशभूताः स्युः**—ஸ்ரீசக்கிரத்திலுள்ள அதோமுகத்ரிகோணங்களின் அதிதேவதைகளாய் இருக்கின்றனர்.

குறிப்பு :—ஸ்ரீசக்கிரத்தில் திரிகோணம் முதல் சதுர்த்தசாரம் வரையுள்ள ஐந்து சக்கிரங்களில் அதோமுக திரிகோணங்கள் ஐந்தும், ஊர்த்துவமுக திரிகோணங்கள் நான்கும் இருக்கின்றன.

பிந்து சக்கிரமானது உச்சூனத்தை யடைந்து திரிகோணாகாரமாய்ப் பரிணமித்தது. மூன்றுகோணங்களில் மூன்றுபிந்துக்களும், இவற்றோடு அந்நியோன்ய ஸம்பந்தமுள்ள மூன்று ரேகைகளும் ஏற்பட்டன. இம்மூன்று ரேகைகளும் பச்யந்தி முதலிய மூன்றுமாத்ருகைகளின் ஆவிர்ப்பாவ காரணங்களாம். கோணபிந்துக்கள், வாக்பவாதி பீஜங்களாகும். பராவாக்கின் விலாஸமான பச்யந்தியின் ஸ்வரூபமே வாமா முதலிய சக்திகளாகும். இவ் விஷயம் மேல் ச்லோகத்தில் நன்கு புலப்படும். அது வருமாறு :— (23)

इच्छा ज्ञानं क्रियया
शान्तेति चतस्र उत्तरावयवाः ।
व्यस्ताव्यस्ततदर्ण-
द्वयमिदमेकादशात्म पश्यन्ती ॥ २४ ॥

(ப-ரை) इच्छा—இச்சை, ज्ञानं—ஞானம், क्रियया—கிரியையுடன், शान्ता—சாந்தை, इति—என்னும், चतस्रः—நான்கு சக்திகளும், उत्तरावयवाः—ஸ்ரீசக்கிரத்திலுள்ள ஊர்த்துவமுக திரிகோணங்கள் நான்கின் தேவதைகளாவர். இவர்கள் ஒன்பது சக்திகளும், அதாவது, வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ, பச்யந்தீ, அம்பிகை, இச்சை, ஞானம், கிரியை,

சாந்தையென்னும் ஒன்பது சக்திகளும், व्यस्ताव्यस्ततदर्णद्वयं—வியஷ்டியாகவும், ஸமஷ்டியாகவுமுள்ள பிரகாசவிமர்ஶ ஸாமரஸ்யமான अहं—என்னும் காமகலேயும், பராசக்தியுங் கூடி, इदं एकादशात्म—இவ்விதம் பதினொரு ரூபங்களோடு விளங்குவது, पश्यन्ती—பஶ்யந்தீ மாத்ருகையாம்.

(வி-ரை) சப்தசிருஷ்டியை யுத்தேசித்து, பிரகாச விமர்ச ஸாமரஸ்யவடிவ அஹந்தாஸ்வரூப காமகலே பிரதம காரணமாகும். இதனின்றும் பராவாக்கு ஆவிர்ப்பவித்தது. சப்தசிருஷ்டிக்கு பராவாக்கு பீஜமாகும். இது உச்சூனத் தையடைந்து பஶ்யந்தீ வாக்காகின்றது.

இந்த பஶ்யந்தீவாக்கும் பிரகாசம் விமர்ஶம் என்னும் இரண்டுபகுதிகளோடுகூடியது. பிரகாசாம்சத்தின் விலாஸ சக்திகள் இச்சை, ஞானம், கிரியை, சாந்தா என்னும் நால்வராவர். விமர்ஶாம்சத்தின் விலாஸசக்திகள் வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ, அம்பிகையென்னும் நால்வர். சக்தியம்சத்தின் ஆதிக்யத்தால் காரணமான பஶ்யந்தியானது வாமா முதலியவர்களோடு சேர்ந்து அதோமுக பஞ்சத்திரி கோணவடிவமாயிற்று. அதோமுக திரிகோணத்திற்குச் சக்தியென்றுபெயர். ஊர்த்துவத் திரிகோணத்திற்கு சிவம் அல்லது வஹ்நியென்றுபெயர். ஸர்வகாரண காமகலேயும் பராவாக்கும் பிந்துவடிவினர், பஶ்யந்தீயின் ஸமஷ்டியானது மத்திய திரிகோண அதோமுக கோணத்திலும், பஶ்யந்தீயின் வியஷ்டிசக்திகளில் பிரகாசாம்சமான நால்வர் ஊர்த்துவமுக கோணங்களிலும், விமர்சாம்சமான நால்வர் அதோமுக கோணங்களிலும் பாவித்தற்குரியரென்பது இந்த ஶ்லோகத்தின் பரம தாத்பரியமாம்.

उच्छूनं तच्च यदा — यदा यस्मिन् काले प्राणिनामदृष्टवशादुच्छूनं तच्च बैन्दवमपि उच्छूनं संजातविकासं भवति तदा त्रिकोणरूपेण अनुत्तरानन्देच्छाशृङ्गाटरूपेण परिणतं त्रिकोणाकारं भवतीत्यर्थः ॥

अनुत्तरानन्दचितिरिच्छाशक्तौ नियोजिता ।
त्रिकोणमिति तत्प्राहुर्विसर्गानन्दसुन्दरम् ॥
मेयमातृप्रमामानप्रसरैः संकुचत्प्रभम् ।
शृङ्गाटरूपमापन्नमिच्छाज्ञानक्रियात्मकम् ॥

इति त्रिंशिकाशास्त्रे.

या सा तु मातृका लोके परतेजःसमन्विता ।
तया व्याप्तमिदं सर्वमाब्रह्मभुवनान्तरम् ॥ (श्रीतन्त्रसद्भावे)

(24)

குணத்ரய நிருபணம்.

एवं कामकलात्मा
त्रिबिन्दुतत्वस्वरूपवर्णमयी ।
सेयं त्रिकोणरूपं
याता त्रिगुणस्वरूपिणी माता ॥ २५ ॥

(ப—ரை) एवं — இங்ஙனம், कामकलात्मा—பிரகாசஸ்வபாவ அகாரலக்ஷ்யார்த்த பரமசிவனும், விமர்சஸ்வபாவ ஹகாரலக்ஷ்யார்த்த சித்சக்தியும் ஐக்கியப்பட்ட பரா காம

கலையாகவும், त्रिबिन्दुतत्वस्वरूपवर्णमयी—ரக்தம், சுக்கிலம், மிஸ்ரம் என்னும் திரிபிந்துக்களின் வர்ணங்களாகிய हं, अं, अहं என்னும் திரிபீஜவடிவ தேஜோபிந்துஸ்வரூப அபரா காம கலையாகவும், त्रिगुणस्वरूपिणी—ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் திரிகுணாத்மகமான, माता—ஸகலஜகத்காரண மாதாவாகவுமுள்ள, सेयं—அந்த சித்சக்தியே, त्रिकोणरूपं—திரிகோணவடிவத்தை, याता—எய்தினள்.

(வி--ரை) காமகலை, த்ரிபிந்துதத்துவஸ்வரூபவர்ணமயீ, த்ரிகுணஸ்வரூபிணீயென்னும் விசேஷணங்கள் ஜகத் சிருஷ்டியை இச்சிக்கும் மாதாவைக் குறிக்கின்றன. இவை யாவும் பிந்துதத்துவத்திலடங்கும்.

गर्भस्थमायोद्रेकाच्च सृष्टिकालस्य संभवात् ।
स बिन्दुः स्फुटितं याति त्रिभुजाकारतां गता ॥
गुणत्रयतनुः सोऽभूत् कोणबिन्दुत्रयान्वितः ।
अव्यक्तमातृकारूपा तत्वात्मा व्यक्त उच्यते ॥
पराशक्तेस्तु संकल्पाज्जाता तच्छायतां गता ।
मायारूपा हि पश्यन्ती सृष्टिस्थित्यन्तकारिणी ॥

என்னும் பிரமாணங்களை விமர்சிக்கின், பிந்துவே சிருஷ்டிகாலத்தில் திரிகோணரூபமாய்ப் பரிணமித்ததென்றும், திரிகோணத்திலுள்ள மூன்று பிந்துக்களும் திரிகுணங்களைக் குறிப்பிடுகின்றனவென்றும், பராசக்தியினது ஸங்கல்பவலிமையால், அவ்வியக்தமான தத்துவத்தோடு கூடியதும், சாயாரூபமானதுமான மாயையே பஶ்யந்தி வாக்காக ஆயிற்றென்றும் ஏற்படுகின்றது.

பராவாக்கை பரையென்றும், பஶ்யந்தி வாக்கைப் பராபரையென்றும், மத்தியமாவாக்கை அபராவென்றும் கூறு

வாருமுளர். நிற்க, பிந்துவிலிருந்து திரிகோணம் ஏற்பட்டதெனின் பிந்து காரணம், திரிகோணம் காரியம். காரணமாகும் பிந்துவிற்குப் பரா காமகலாத்துவம், அபரா காமகலாத்துவம் என்னும் இரண்டு தர்மங்களுமுள. வித்தியா பிரபஞ்சகாரணம் பரா காமகலையென்றும், அவித்தியா பிரபஞ்சகாரணம் அபரா காமகலையென்றும் முன் கூறப்பட்டுள்ளது.

ஆரம்பம், பரிணமம், விவர்த்தம் என்னும் திரிவித காரணங்களில் சித்சக்திக்கு விவர்த்தகாரணத்துவமும், மாயையாகும் ஜடசக்திக்குப் பரிணமகாரணத்துவமும் துரியபாதத்தில் விமர்சித்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆங்கறியவும். (25)

பஶ்யந்தீ முதலியவற்றின் பேதவிமர்சனம்.

एका परा तदन्या
वामादिव्यष्टिमातृसृष्ट्यात्मा ।
तेन नवात्मा जाता
माता सा मध्यमाभिधानाभ्याम् ॥ २६ ॥

(ப-ரை) परा — ஸர்வகாரணபிந்துவடிவ பராசக்தியானது, एका—இரண்டற்ற ஏகமாய் இருக்கின்றது. देवी ह्येकाग्र आसीत् என்னும் உபநிஷத் பிரமாணம் ஈண்டறியத்தக்கது. तदन्या—அதனிடத்தில் கற்பிக்கப்பட்டு, அதைவிட வேருய்த் தோன்றும்படியான பராவிலாஸமான, माता — பஶ்யந்தீயென்னும் காரணபூத ஜனனியானவள், येन—எந்தக் காரணத்தினல், वामादिव्यष्टिमातृसृष्ट्यात्मा — வாமாமுதல் சாந்தாவரையுள்ள சக்திகளின் சிருஷ்டியைச்செய்து, அவற்ருேடு

தானும் ஸமஷ்டியாய்க் கலந்து விளங்குகின்றனளோ, तेन—அந்த ஹேதுவினால், नवात्मा जाता—ஒன்பதுவிதமாய் விளங்கி, நவயோன்யாத்மகமாயும் விளங்குகின்றனள். सा—அந்த பஶ்யந்தி மாத்ருகையே, अभिधानाभ्यां—ஸூக்ஷ்மம் ஸ்தூலம் என்னும் பெயர்களால் இருவிதமாயுள்ள, मध्यमा—மத்தியமையாக ஆயிற்று.

இந்த ஶ்லோகத்தில் பஶ்யந்தீ மாத்ருகைக்கு ஒன்பதுவிதமாந்தன்மையும், மத்தியமைக்கு இருவிதமாந்தன்மையும் கூறப்பட்டது அறியத்தக்கது. (26)

இருவிதமான மத்தியமாஸ்வரூபம்.

द्विविधा हि मध्यमा सा
सूक्ष्मा स्थूलाकृतिस्तथा सूक्ष्मा ।
नवनादमयी स्थूला
नववर्गात्मा च भूतलिप्याख्या ॥ २७ ॥

(ப--ரை) सा मध्यमा — அந்த மத்தியமையும், द्विविधा हि—இரண்டுவித ஸ்வரூபங்களையுடையது. सूक्ष्मा स्थूलाकृति-स्तथा—ஸூக்ஷ்மம், ஸ்தூலமென்னும் இரண்டு வடிவங்களையுடையதாகும். सूक्ष्मा नवनादमयी — ஸூக்ஷ்மமத்தியமை நவவித நாதவடிவமாயும், स्थूला—ஸ்தூலமத்தியமை, नव-वर्गात्मा—ஒன்பது வர்க்கங்களின் வடிவமாயும், भूतलिप्याख्या—பூதலிபியென்னும் பெயரையுடையதாயும் இருக்கின்றது.

மத்தியமை இரண்டுவகை; ஒன்று ஸூக்ஷ்மம், மற்றொன்று ஸ்தூலம். ஸூக்ஷ்மமத்தியமை நவநாதஸ்வரூபிணி.

ஸ்தூலமத்தியமை अ, क, च, ट, त, प, य, श, ळ என்னும் ஒன்பது வர்க்கங்களின் ஸ்வரூபமாயும் பூதலிபியென்னும் பெயரையுடையதாயும் விளங்குகின்றது. பூதலிபிகள் ஐந்து. அவை, ह, य, र, व, ल என்பனவாம்.

விசேஷக் குறிப்பு:—ஸூக்ஷ்மமத்தியமை பரைக்கும் பச்யந்திக்கும் மத்தியஸ்தானமென்பது இந்நூலாசிரியரது மதம். இது நவநாதாத்மகம்.

நவநாதங்களாவன:—चिणि, चिणिचिणि, ताल अल्लது घण्टा, शङ्ख, तन्त्री, वेणु, भेरी, मृदङ्ग, मेघनादங்களாகும். நாதாநுஸந்தானம் அநாஹதசக்கிரத்தில் ஏற்படும். இந்த ஸூக்ஷ்ம நாதங்கள் ஸ்தூலீகரித்து, நவவர்க்க மாத்ருகைகளாகின்றன. இதுவே ஸ்தூலமத்தியமையாம். இந்த ஸ்தூலமத்தியமை பச்யந்திக்கும் வைகரிக்கும் மத்தியத்திலுள்ளது.

வரிவஸ்யாரஹஸ்யம் முதலம்சம் 22-வது ச்லோ. आधारोत्थितनादो गुण इव परिभाति वर्णमध्यगतः என்னும் ச்லோகத்தின் வியாக்கியானத்தில், அவிக்ருதம், சூன்யம், ஸ்பர்சம், நாதம், துவனி, பிந்து, சக்தி, பீஜம், அக்ஷரம் என ஸூக்ஷ்ம நாதங்கள் ஒன்பதாகக் கூறப்பட்டிருக்கின்றன.

(27)

கார்யகாரண அபேதத்தால் ஸூக்ஷ்ம ஸ்தூல மத்தியமைகளுக்கு அபேதம் கூறப்படுகின்றது.

आद्या कारणमन्या
कार्यं त्वनयोर्यतस्ततो हेतोः ।
सैवेयं न हि भेद-
स्तादात्म्यं जनकजन्ययोरिष्टम्* ॥ २८ ॥

---

* हेतुहेतुमतोरिष्टम् इति मुद्रितपुस्तकेषु पाठः ।

(ப--ரை) यतः—எந்த ஹேதுவினால், अनयोः—ஸூக்ஷ்மம் ஸ்தூலமென்னும் அவ்விரண்டுபாகுபாடுகளில், आद्या—முதலாவதாகும் நவநாதாத்மக ஸூக்ஷ்ம மத்தியமையே, कारणं—காரணமாயும், अन्या—மற்றொன்றாகும் நவவர்க்காத்மக ஸ்தூலமத்தியமையானது, कार्यं—காரியமாகவும் இருக்கின்றனவோ, ततो हेतोः—அந்த ஹேதுவினாலேயே, सैवेयं—ஸூக்ஷ்மமத்தியமையே ஸ்தூல மத்தியமையாய் விளங்குகின்றது. नहि भेदः —அவற்றுள் பேதமே கிடையாது. (ஏனென்றால்) जनकजन्ययोः — காரணகாரியங்களுக்குள்ள, तादात्म्यं — அபேதமானது, इष्टम् — அங்கீகரிக்கத் தக்கதேயாகும்.

(வி--ரை) இந்த ஸ்லோகத்தால் மத்தியமாவாக்கின் ஸ்வரூபம் கூறப்பட்டதோடு காரணகாரியங்களுக்கும் அபேதங் கூறப்பட்டது. இதனால் பரா, பஶ்யந்தீ, மத்தியமைகளுக்கும் அபேதங் கூறியதாயிற்று. (28)

இனி வைகரீவாக்கை விமர்சித்தற் பொருட்டு வஸு கோண சக்கிரோத்பத்தி கூறப்படுகின்றது.

शषसपवर्गमयं त-
द्वसुकोणं मध्यकोणविस्तारः ।
नवकोणं मध्यं चे-
त्यस्मिन्श्रिद्दीपदीपिते दशके ॥ २९ ॥

(ப--ரை) श, ष, स, प वर्गमयं—श, ष, स என்னும் மூன்றும், प வர்க்கத்தில் சேர்ந்த प फ ब भ म என்னும் ஐந்தும்,

ஆக எட்டு எழுத்துக்களின் மயமான, वसुकोणं — அஷ்ட கோண சக்கிரமானது, मध्यकोणविस्तारः—மத்தியத்திரிகோண சக்கிரத்தின் விரிவேயாகும். तत् नवकोणं—வஸுகோண மும் மத்தியத்ரிகோணமும் சேர்ந்து ஒன்பது கோணங்க ளும், मध्यं च इति—மத்தியபிந்துவும் கூடி, अस्मिन् दशके— இந்தப் பத்தும், चिद्दीपदीपिते—பரஞ்சோதியினுல் பிரகாசிப் பிக்கப்பட்ட பொழுது.

अस्मिन् दशके चिद्दीपदीपिते सति—என்பதற்கு, तच्छायाद्वितय-मिदं—என்னும் அடுத்தஸ்லோகத்தோடு அந்வயம்.

(வி-ரை) பைந்தவ சக்கிரத்தில் விளங்கும் பரசிவத் தின் மஹாப்பிரகாசத்தினுல் பிந்து, திரிகோணம், அஷ்ட கோணம் முதலிய மூன்று சக்கிரங்களும் பிரகாசிக்கின்றன. तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति என்னும் பிரமாணம் இங்கறியத்தக்கது. பிந்துவிலுள்ள மஹா தேஜஸ்ஸானது பிந்துவையும் பிரகாசிப்பிக்கச் செய்கின்ற தாதலின், பிந்துவை இதரப்பிரகாசத்தையபேக்ஷிக்கும் ஜடமென்று கொள்ள வேண்டியிருக்கின்றது. இது चिद्दीप-दीपिते दशके என்பதனுல் ஸித்திக்கின்றது. (29)

இனி அந்தர்த்தசாரம், பஹிர்த்தசாரம் என்னும் இரண்டு சக்கிரங்களின் உத்பத்தி கூறப்படுகின்றது.

तच्छायाद्वितयमिदं
दशारचक्रद्वयात्मना विततम् ।
तटचकवर्गचतुष्टय-
विलसनविस्पष्टकोणविस्तारम् ॥ ३० ॥

(ப—ரை) तच्छायाद्वितयं = முற்கூறிய பேரொளியோடு கூடிய மூன்று சக்கிரங்களின் இரண்டு தேஜஸ்ஸுகள்; दशारचक्रद्वयात्मना = தசாரத்துவயசக்கிரங்களாக, विततं = விஸ்தரித்தன. इदं = இந்த இரண்டும், त, ट, च, क वर्गचतुष्टय = த வர்க்கம், ட வர்க்கம், ச வர்க்கம், க வர்க்கம் என்னும் நான்கு வர்க்கங்களினால், विलसन = விளங்கும், विस्पष्टकोण-विस्तारं = ஸ்பஷ்டமான கோணங்களோடு கூடியனவாயிருக்கின்றன.

(வி—ரை) छायाद्वितयं = இரண்டு தேஜஸ்ஸுகள். இதன் விமர்சமாவது:—பிந்து பிரகாசாம்சம், திரிகோண-அஷ்டகோணங்கள் விமர்ஶாம்சங்கள். பிரகாச தேஜஸ் ஒன்று; விமர்ஶதேஜஸ் மற்றொன்று; ஆக இரண்டு தேஜஸ்ஸுகள். பிந்துவாகும் பிரகாச தேஜஸ்ஸினால் அந்தர்த்தசார சக்கிரமும், திரிகோணம் வஸுகோணமென்னும் விமர்ஶ தேஜஸ்ஸினால் பஹிர்த்தசாரசக்கிரமும் ஏற்பட்டன.

அந்தர்த்தசாரசக்கிர கோணங்கள் त, थ, द, ध, न, ट, ठ, ड, ढ, ण என்னும் மாத்ருகைகளினாலும்

பஹிர்த்தசாரசக்கிர கோணங்கள் च, छ, ज, झ, ञ, क, ख, ग, घ, ङ என்னும் பத்து மாத்ருகைகளினாலும் விளங்குகின்றன. (30)

இனி சதுர்த்தசார சக்கிரோத்பத்தி கூறப்படுகின்றது.

एतच्चक्रचतुष्क-
प्रभासमेतं दशारपरिणामः ।
आदिस्वरगणकचतु-
र्दशवर्णमयं चतुर्दशारमिदम् ॥ ३१ ॥

(ப-ரை) चतुर्दशारं = பதினான்கு கோணங்களையுடைய மன்வஸ்ர சக்கிரமானது, एतच्चक्रचतुष्कप्रभासमेतं = முற்கூறிய பிந்து, திரிகோணம், அஷ்டகோணம், தசாரத்வயங்கள் ஆகிய நான்கு சக்கிரங்களின் பிரகாசத்தோடு கூடியதும், दशारपरिणामः = ஆந்தரம், பாஹ்யம் என்று கூறப்படும் இரண்டு தசாரங்களின் பரிணாமமானதுமாயிருக்கின்றது.

इदं = இந்த மன்வஸ்ரமானது, आदिस्वरगणकचतुर्दशवर्ण-मयं = ஸ்வரகணங்களுக்கு ஆதியில் விளங்கும் (அநுஸ்வாரம், விஸர்க்கம் என்னும் இரண்டு நீங்கலாகப்) பதினான்கு ஸ்வரங்களோடு கூடி விளங்குகின்றதாகும்.

இங்ஙனம், பிந்து முதல் மன்வஸ்ரம் வரையிலுள்ள சக்கிரங்களை நிரூபணம் செய்ததன் மூலமாய் வைகரீ மாத்ருகையின் ஆவிர்ப்பாவமும் கூறப்பட்டதறியத்தக்கது. (31)

இனி ஸ்பஷ்டமான வைகரீஸ்வரூபம் கூறப்படுகின்றது.

परया पश्यन्त्यापि च
मध्यमया स्थूलवर्णरूपिण्या ।
एताभिरेकपञ्चा-
शदक्षरात्मा हि वैखरी जाता ॥ ३२ ॥

(ப-ரை) परया = பராவாக்கினாலும், पश्यन्त्या = பஶ்யந்தீ வாக்கினாலும், स्थूलवर्णरूपिण्या मध्यमया = ஸ்தூலவர்ண ரூபிணியான ஸ்தூல மத்தியமையினாலும், एताभिः = அஷ்டகோணம் முதல் மன்வஸ்ர மீறாகக் கூறப்பட்டவைகளோடு கூடி, एकपञ्चाशदक्षरात्मा = ஐம்பத்தோரெழுத்துக்கள் வடிவ

மான, वैखरी = வைகரீ மாத்ருகையானது, जाता = ஆவிர்ப்ப வித்தது.

(வி--ரை) வைகரீவாக்கானது ஐம்பத்தோரெழுத்துக்கள் வடிவினது. வைகரியின் ஆவிர்ப்பாவம் அஷ்டகோணத்தில் தான் ஆயிற்று. ஆகவே அஷ்டகோணத்தில் எட்டு அக்ஷரங்கள். அந்தர்த்தசாரத்தில் பத்து, பஹிர்த்த சாரத்தில் பத்து, மன்வஸ்ரத்தில் பதினன்கு, ஆக நான்கு சக்கிரங்களிலும் 42 எழுத்துக்கள் தான் ஏற்பட்டன. உயிர் எழுத்துக்களில் அநுஸ்வாரம் விஸர்க்கம் என்னும் இரண்டெழுத்துக்களும், வியஞ்ஜனங்களில் य, र, ल, व, ह, ळ, क्ष என்னும் ஏழு எழுத்துக்களும் கூறப்படவேயில்லை. ஆயினும், நூலாசிரியர் ஐம்பத்தோரக்ஷராத்மகமான வைகரீ வாக்கானது ஆவிர்ப்பவித்ததென்று முடிவு கட்டுகின்ருர். அவர் எப்படி ஐம்பத்தோரெழுத்தைக் கணக்கிடுகின்ருரெனின், परया पश्यन्त्यापि च मध्यमया स्थूलवर्णरूपिण्या एतासि: என்று பரை, பஶ்யந்தீ, ஸ்தூலமத்தியமை, அஷ்டகோணம் முதல் சதுர்த்தசாரம் வரையுள்ள எழுத்துக்கள் இவைகளைச் சேர்த்து ஐம்பத்தொன்று என்கிருர். இது தான் இங்கே ரஹஸ்யமாம்.

அநுஸ்வார பிந்துவானது பராவாக்கிலும், விஸர்க்கமானது பஶ்யந்தியிலும் (स्थूला नववर्गात्मा च भूतलिप्याख्या) என்று கூறப்பட்டுள்ளதனல், य, र, ल, व, ह என்னும் பஞ்சபூத பீஜங்கள் (பூதலிபிகள்) ஸ்தூல மத்திமையிலும் விளங்குகின்றன. ळ— ल காரத்திலும், क्ष— क, ष என்பவற்றிலும் அந்தர்ப்பூதம். இங்ஙனம் ஐம்பத்தோரக்ஷரங்களும் கூறப்பட்டதனல் வைகரீவாக்கானது ஸ்புடீகரிக்கப்பட்டதென்று கூறப்பட்டது. (32)

இனி அஷ்டதள-ஷோடசதள பத்மங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

कादिभिरष्टभिरुपचित-
मष्टदलाब्जं च वैखरीवर्गैः ।
स्वरगणसमुदितमेतद्-
द्व्यष्टदलाम्भोरुहं च संचिन्त्यम् ॥ ३३ ॥

(ப-ரை) कादिभिः—கவர்க்கம் முதலிய, अष्टभिः—எண் வகைப்பட்ட, वैखरीवर्गैः — ஸ்பஷ்டமான வைகரீ வர்க்கங் களால், उपचितं—கூடிக்கொண்டு விளங்கும், अष्टदलाब्जं च— அஷ்டதள கமலசக்கிரமும், स्वरगणसमुदितं—ஷோடசஸ்வ ரங்களால் உண்டான, एतत् द्व्यष्टदलाम्भोरुहं च—இந்த ஷோ டசதள கமலமும், संचिन्त्यं—நன்கு பாவிக்கத்தக்கவையாய் இருக்கின்றன.

(வி-ரை) காதி அஷ்டவர்க்கங்களாவன:—क, च, ट, त, प, य, श, ळ என்பன; இவற்றில் முப்பத்தைந்து மெய் யெழுத்துக்களும் அடக்கம்.

"வைகரீவர்க்கம்" என்று இங்கே கூறியது எதற் கெனின் ஸ்தூலமத்தியமையின் ஸ்வரூபமான நவவர்க்கத் தினின்றும் வேறு பிரித்தறியும் பொருட்டென அறியத் தக்கது. (33)

இனி திரிவலய-பூபுரங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

बिन्दुत्रयमयतेज-
स्त्रितयविकारस्थितानि वृत्तानि ।

भूबिम्बत्रयमेतत्

पश्यन्त्यादित्रिमातृविश्रान्तिः ॥ ३४ ॥

(ப--ரை) वृत्तानि—ஸ்ரீசக்கிரத்திலுள்ள மூன்று வ்ருத்தங்கள், बिन्दुत्रयमयतेजस्त्रितयविकारस्थितानि—ரக்தம், சுக்கிலம், மிஶ்ரமென்னும் த்ரிபிந்துக்களின் வடிவ அக்னி, ஸோம, ஸூர்யர்களின் தேஜஸ் பரிணாமமே. एतत् भूबिम्बत्रयं—இந்த மூன்று சதுரஶ்ரவடிவ பூபுரசக்கிரமானது, पश्यन्त्यादित्रिमातृविश्रान्तिः — பஶ்யந்தீ, மத்தியமை, வைகரீ யென்னும் மூன்று மாத்ருகைகளின் ஒய்வுஸ்தானமாயிருக்கின்றது.

(வி-ரை) வ்ருத்தத்திரயம்: ஷோடசதள பத்மத்திற்கு மேல், பூபுரத்திற்குக் கீழ், மூன்று வலயங்கள் இருக்க வேண்டுமென்று இங்கே கூறப்பட்டிருக்கின்றது. இதற்குப் பிரமாணமாவது:—

बिन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म-
मन्वश्रनागदलसंयुतषोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च
श्रीचक्रमेतदुदितं परदेवतायाः ॥

த்ரிபுரோபநிஷத். 4-வது ருக்—

ऊर्ध्वज्वलज्ज्वलनं ज्योतिरग्रे
तमो वै तिरश्चीनमजरं तद्रजोऽभूत् ।
आनन्दनं मोदनं ज्योतिरिन्दो-
रेता उ वै मण्डला मण्डयन्ती ॥

த்ரிவலயங்களை அக்கினி, ஸூர்ய, ஸோம மண்டலங் களாகக் கூறுவது இங்கு அறியத்தக்கது. ஆதலின் ஷோடசதளகமலத்தின் மேல், மூன்று வ்ருத்தங்களை லிகிப்பது அத்தியாவசியமேயாகும். இங்ஙனம், வ்ருத் தத்திரயங்களுக்கு ஸோம ஸூர்ய அக்கினிமண்டலத்து வங் கூறப்பட்டதனல் ஸ்ரீசக்கிரமும் மண்டலத்திரயாத்மக மாய் விளங்குவது ஸித்திக்கின்றது. **त्रिखण्डं मातृकाचक्रं सोम-सूर्यानलात्मकम्** என்பது பிரமாணம். வித்யை, தேவதை, சக்கிரம் என்னும் மூன்றும்கூட திரிகண்டாத்மகங்களே.

सोमसूर्यकृशान्वात्मतेजस्त्रितयरूपकम् ।
नेत्रत्रयं भावयामि वृत्तत्रितयमञ्जसा ॥

என்னும் பிரமாணமும் வ்ருத்தத்திரயங்ளைச் சாதிக் கின்றது.

பூபுரத்திரயம். இது, அணிமாதி, பிராஹ்மியாதி, ஸர்வஸம்க்ஷோபிண்யாதி சக்திக் கூட்டங்களின் வாஸஸ் தானமாகும். நான்கு துவாரங்களோடு கூடிய மூன்று சதுரங்கள் இந்த சக்கிரமாம். இந்த மூன்று ரேகைகளி லும் பஶ்யந்தீ, மத்தியமை, வைகரீ என்னும் மூன்று மாத் ருகைகள் விஶ்ராந்தியடைகின்றன. திரிகோணம் முதல் ஷோடசதளகமல சக்கிரம் வரை இந்த மாத்ருகைகள் விஜ்ரும்பித்து விளங்கி, இந்த சதுரஶ்ர சக்கிரத்தில் ஓய் வடைகின்றன.

இங்ஙனம் **मध्यं चक्रस्य स्यात्** என்னும் 22ம் ஶ்லோகம் முதல், **पश्यन्त्यादित्रिमातृविश्रान्तिः** என்னும் 34வது ஶ்லோகம் வரை ஸ்ரீமஹாத்திரிபுரஸுந்தரியின் சக்கிரம் நன்கு நிரூ பிக்கப்பட்டது. (34)

(அ-கை) இனி அந்த அந்த சக்கிரங்களிலுள்ள ஆவரண தேவதைகளையும், குருமண்டல தேவதைகளையும் பரதேவதையின் பாதாரவிந்த மஹாதேஜஸ்ஸின் கிரணங்களேயாமென்று விளக்குகின்றார்.

क्रमणं पदविक्षेपः
क्रमोदयस्तेन कथ्यते द्वेधा ।
आवरणं गुरुपङ्क्ति-
र्द्वयमिदमम्बापदाम्बुजप्रसरम् ॥ ३५ ॥

(ப-ரை) **क्रमणं**—பரதேவதையின் சரணயுகளங்களின் தேஜஸ்ஸிலிருந்து கிரணங்கள் தோன்றும் ஒழுங்கானது, **पदविक्षेपः**—பாதவிக்ஷேபமென்றும், **क्रमोदयः**—கிரமோதயமென்றும், **तेन**—கூறப்படுங்காரணத்தால், **द्वेधा**—இரண்டு விதமாய், **कथ्यते**—கூறப்படுகின்றது. **अम्बापदाम्बुजप्रसरं**—பரதேவதையின் பாதாரவிந்த யுகளங்களினின்றும் விஜ்ரும்பித்த, **इदं द्वयं**—இந்த இரண்டு கிரமங்களும், முறையே, **आवरणं**—பரிவாரசக்திகளின் ஸமுதாயமாகவும் **गुरुपङ्क्तिः**—ஓகத்திரயவடிவ குருமண்டலவடிவமாகவும் இருக்கின்றன.

பதவிக்ஷேபவடிவ கிரமணமாவது:—பாதாரவிந்த தேஜஸ்ஸினின்றும் கிளம்பிய அநந்தகோடிகிரணங்கள் வடிவ அநந்தகோடி சக்திகளைத் தோற்றுவிக்கும் ஸாமர்த்தியம். இது, ஒரு பெருநெருப்பிற்கு அநேககோடி நெருப்புப் பொறிகளையுண்டாக்கும் ஸாமர்த்தியம் இருப்பதுபோல்வதாகும்.

मरीचयः स्वायम्भुवा ये शरीराण्यकल्पयन् ।

என்று ஆருணோபநிஷத்தும்,

ज्योतीरूपा पराकारा तस्या देहोद्भवाश्च वै ।
किरणाश्च सहस्रं च द्विसहस्रं च लक्षकम् ॥
कोटिरर्बुदमेतेषां परा संख्या न विद्यते ।
तामेवानुप्रविश्यैव भाति सर्वं चराचरम् ॥
यस्या देव्या महेशान्या भासा सर्वं विभासते ।
तद्भासा रहितं किंचिन्न च यच्च प्रकाशते ॥
तस्याश्च शिवशक्तेश्च चिद्रूपायाश्च तं विना ।
आद्यमापद्यते नूनं जगदेतच्चराचरम् ॥
तेषामनन्तकोटीनां मयूखानां महेश्वरि ।
मध्ये षष्ट्युत्तरं देवि त्रिशतं किरणाः शिवे ।
ब्रह्माण्डं भासयन्त्येते पिण्डाण्डमपि पार्वति ॥

என்று ஆகமங்களும் கூறுவது இங்கு அறியத்தக்கது.

रश्मिचक्रं च परितो भक्तिनम्रः प्रपूजयेत् ॥

என்று, ஸ்ரீ அம்ருதாநந்தநாதர் யோகினீ ஹ்ருதய வியாக்கியானத்தில் கூறுவதை விமர்சிக்கின், பூபுரம் முதல் மத்தியத்திரிகோணம் வரையுள்ள ஆவரணதேவதைகளே ரஸ்மிசக்கிரமாமென்று புலப்படுகின்றது. ஏகமாயுள்ள ஒன்று பலவாய்த்தோன்றுவது விக்ஷேபமே யன்றோ? இங்ஙனம் தோன்றிய அநந்தகோடி சக்திகளும் ஏகமாயும், அத்விதியமாயுமுள்ள பரதேவதையின் மஹாதேஜஸ்ஸில் லயமாய் விடுந்தன்மையன. இதனால் சிருஷ்டி, ஸ்திதி, லயங்கள் கூறப்பட்டன. இந்தக் கிரமத்திற்குப் பதவிக்ஷேபக் கிரமமென்று பெயர்.

இது பரதேவதையின் விமர்ஶசரணத்தினின்றும் உண்டானது.

கிரமோதயக்கிரமணமாவது :—திவ்விய, ஸித்த, மானவமென்று கூறப்படும் மூன்றுவித குரு ஓகங்களைத் தோற்றுவிக்கும் ஸாமர்த்தியம். ஓகம்=பெருங்கூட்டம். கிரமோதயமானது பரதேவதையின் பிரகாசசரணத்தின் ஸாமர்த்தியமேயாகும்.

இவர்கள் அந்தகாரமாகும் அக்ஞானத்தை யொழித்து ஆத்மக்ஞானத்தை யுபதேசிப்பவர்கள். இவர்கள் பரசிவஸ்வரூபத்தை जन्माद्यस्य यतः—"காணப்படும் இந்த உலகத்தின் ஜன்மாதிகள் எதனின்றும் உண்டாயினவோ அது" என்று உபதேசிக்கின்றனர். இதற்குத்தான் கிரமோதய மென்று பெயர். இந்தப் பிரபஞ்சமானது எங்கிருந்து தோன்றிற்றோ அது உதயம்—அதைத் தெரிவிப்பவர் குரு.

यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व । तज्जलानिति शान्त उपासीत । सदेव सोम्येदमग्र आसीत् । देवी ह्येकाग्र आसीत् ॥

என்னும் ஶ்ருதி வாக்கியங்கள் உதயஸ்வரூபத்தைத் தெரிவிக்கின்றவையாகும். (35)

ஆவரணதேவதைகளின் ஸ்வரூபம்.

सेयं परा महेशी
चक्राकारेण परिणमेत यदा ।
तद्देहावयवानां
परिणतिरावरणदेवताः सर्वाः ॥ ३६ ॥

(ப-ரை) सेयं परा महेशी—இதுவரை விமர்சிக்கப்பட்ட மஹேஶ்வரியாகும் பராபட்டாரிகை வடிவ இந்த சித்சக்தி யானவள், यदा—எப்பொழுது, चक्राकारेण—ஸ்ரீசக்கிரவடிவமாய், परिणमेत — பரிணமித்தனளோ, तदा — அப்பொழுது, तद्देहावयवानां—அப்பரதேவதையின் தேஹ அவயவங்களின், परिणतिः—பரிணமமாக, सर्वाः आवरणदेवताः—எல்லா ஆவரண தேவதைகள் ஆனர்கள்.

ஸ்ரீ சக்கிரத்திலுள்ள எல்லா ஆவரணதேவதைகளும் திரிபுரஸுந்தரியின் சரீர அவயவ பரிணமங்களே யாவர்.

(வி-ரை) सेयं—अपरिच्छिन्नानन्ततेजोराशिमयी परा सर्वोत्कृष्टा महेशी अनन्तकोटियोगिनीवृन्दसमाराधितनित्यानिरवधिकातिशयानन्दमयात्मसाम्राज्यसंपदभिमानशालिनी ॥

பரதேவதையின் ஸ்வரூபமாவது:—காலத்தினாலும், தேசத்தினாலும், வஸ்துவினாலும் பரிச்சேதப்படாத மஹா தேஜஸ்ஸ்வரூபமாகும். परा—ஸர்வத்திற்கும் மேலானவள், महेशी அளவற்ற யோகினீ கணங்களால் நன்கு ஆராதிக்கப்படுபவளும், அழிவற்றதாயும் நிரதிசயமாயுமுள்ள ஆத்மாநந்த ஸாம்ராஜ்யமாகும் பெருஞ்செல்வத்தை யபிமானிப்பவளுமாயுமுள்ளவள். நிஸ்தரங்கசிதாநந்தக் கடலே பரதேவதையின் சரீரம், அக்கடலில் ஆகந்துகமாய் ஏற்பட்ட காற்றினால் தோன்றிய அலை, குமிழி, நுரை முதலியன போல்வன ஆவரணதேவதைகள்.

एवंरूपं परं तेजः श्रीचक्रवपुषा स्थितम् ।
तदीयशक्तिनिकरस्फुरदूर्मिसमावृतम् ॥

चक्रराजे परामृश्य योगिनीः प्रकटादिकाः ।
विमर्शाख्यचिदम्भोधिलहरीस्था अपि क्रमात् ॥
यस्या उल्लसिता एता योगिन्यश्चिद्घनत्विषः ।
चक्रेश्वरीर्भजाम्येताश्चक्रं चक्रं समाश्रिताः ॥

என்னும் பிரமாணவசனங்கள் ஈண்டு அறியத்தக்கன. (36)

ஸர்வாநந்தமயமென்னும் மஹாபிந்துவில்
மூலதேவியின் வர்ணனம்.

आसीना बिन्दुमये
चक्रे सा त्रिपुरसुन्दरी देवी ।
कामेश्वराङ्कनिलया
कलया चन्द्रस्य कल्पितोत्तंसा ॥ ३७ ॥

पाशाङ्कुशेक्षुचाप-
प्रसूनशरपञ्चकाञ्चितस्वकरा ।
बालारुणारुणाङ्गी
शशिभानुकृशानुलोचनत्रितया ॥ ३८ ॥

(ப-ரை) कामेश्वराङ्कनिलया—காமேஶ்வரரென்னும் ஸ்ரீநாதரது இடது தொடையின் மேல் அமர்ந்திருப்பவளும், चन्द्रस्य कलया — சந்திரகலையால், कल्पित—உண்டாக்கப்பட்ட, उत्तंसा—சிரோபூஷணமுடையவளும், पाशाङ्कुशेक्षुचापप्रसूनशरपञ्च-काञ्चितस्वकरा—பாசம், அங்குசம், கரும்புவில், பஞ்சபுஷ்ப பாணங்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட நான்கு கைகளை

யுடையவளும், बालारुणारुणाङ्गी — இளஞ்சூரியனைப்போன்ற சிவந்த திருமேனியையுடையவளும், शशिभानुकृशानुलोचनत्रितया—சந்திரன், ஸூர்யன், அக்கினி இவர்களை மூன்று கண்களாயுடையவளுமான, सा त्रिपुरसुन्दरी देवी—ஸகல தத்துவ ரூபிணியும், தத்துவாதீதையும், அபரிச்சின்னையும், சரீரத்திரய ஸாக்ஷியுமான அந்தபரதேவதை, विन्दुमये चक्रे—ஆத்மஸ்வரூப விஹரணமாகும் ஸர்வாநந்தமய பிந்து பீடத்தின்கண், आसीना—அமர்ந்து விளங்குகின்றனள்.

(வி-ரை) कला विद्या पराशक्तिः श्रीचक्राकाररूपिणी ।
तन्मध्ये बैन्दवं स्थानं तत्रास्ते परमेश्वरी ।
सदाशिवेन संपृक्ता सर्वतत्वातिगा सती ॥ इति ।
विश्वाकारप्रभाधारानिजरूपशिवात्मकम् ।
कामेश्वराङ्कपर्यङ्कनिविष्टमतिसुन्दरम् ॥ इति ।
आदिश्रीगुरुनाथस्य वामाङ्कोपरि संस्थिताम् ।

என்னும் பிரமாணங்கள் பரதேவதை பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ ஆதிகுருவாகிய காமேஸ்வரரது இடது மடியின் மேல் விளங்குவதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஆயுதங்கள் : — पाशः —இச்சாசக்தி, अङ्कुशः —ஞான சக்தி, इक्षुचाप-इषुपञ्चके—கிரியாசக்தி.

देव्याः संवित्स्वसत्ताया भेदोद्मनहेतुकाः ।
आयुधाख्याः पराः शक्तीर्बाणाद्याः पूजयाम्यहम् ॥

என்று, ஸுபகோதயவாஸனை கூறுவதால் ஆத்மஸத்தையைவிடப் பின்னமாகத்தோன்றும் பேதங்களை யொழிக்கும் ஸாதனங்களை பரதேவதையின் ஆயுதங்களாகும் என்பது ஏற்படுகின்றது.

बालार्कमण्डलाभासां चतुर्बाहुं त्रिलोचनाम् ।
पाशाङ्कुशधनुर्बाणान् धारयन्तीं शिवां भजे ॥

என்னும் சுலோகம் மூலதேவியின் ஸ்வரூபத்தை நன்கு விளக்குகின்றது. (37-38)

(அ-கை) பிந்து மண்டலத்தில் விளங்கும் காமேஸ்வர-காமேஸ்வரிகளென்னும் ஆதிதம்பதிகளானவர், எல்லாவகைகளிலும் தங்களுக்கு அபின்னமான, திவ்ய-ஸித்த-மானவ குருமண்டலாதிபதிகளாகிற மித்திரேஸாநந்த-காமேஸ்வரியாதி மூன்று தம்பதிகளைத் திரிகோணத்தில் தோற்றுவிக்கின்றனரென்று கூறுகின்றார்.

तन्मिथुनं गुणभेदा-
दास्ते विन्दुत्रयात्मके त्र्यश्रे ।
कामेशीमित्रेश-
प्रमुखद्वन्द्वत्रयात्मना विततम् ॥ ३९ ॥

(ப-ரை) तन्मिथुनं—பிந்துவில் விளங்கும் காமகாமேஸ்வரர்களாகிற அந்த ஆதிமிதுனமானது, गुणभेदात्—ஸத்துவ, ரஜஸ், தமோகுண பேதத்தினால், विन्दुत्रयात्मके—பிந்துத்திரய வடிவமான, त्र्यश्रे—திரிகோண சக்கிரத்தில் कामेशीमित्रेशप्रमुखद्वन्द्वत्रयात्मना — காமேசி-மித்ரேசர், வஜ்ரேசி-ஷஷ்டீசர், பகமாலினீ-உட்டீசர் என்னும் மூன்று தம்பதி, களாய், विततम्—விஸ்தரித்ததாய், आस्ते—இருக்கிறது.

(வி-ரை) तन्मिथुनं=அந்த தம்பதிகள்; அவர் உபநிஷதாதிகளில் பிரஸித்தமான தத்பத லக்ஷ்யார்த்தமாய் விளங்கும் பரசிவஸ்வரூபமும், அதன் விமர்ஸமாகும் சித்

சக்தியுமே யாவர். இவர்கள்தான் காமகாமேஶ்வரர்கள். एकमेवाद्वितीयं ब्रह्म; सत्यं ज्ञानमनन्तं ब्रह्म; आनन्दो ब्रह्म; என்னும் லக்ஷணங்களையுடைய பரமாத்மா தன்னையே புமானாகவும் ஸ்திரீயாகவும் செய்துகொண்டு பதிபத்நீபாவத்தோடு ரமிக்கின்றார். இவ்விஷயம் துரீய பாதத்தில் 2 வது ஶ்லோகத்தின் விரிவுரையில் விளக்கமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஆதிமிதுனமானது ஞானபரம்பரையின் அபிவிருத்தியைக் கருதித், தம்முள் ஒருவர் குருவாகவும், ஒருவர் சிஷ்யராகவும் இருந்துகொண்டு ஞானசாஸ்திரங்களை வெளிப்படுத்தியதோடு, ஞானபரம்பரையையும் தோற்றுவித்தனர். இந்த ஞானகுருபரம்பரை மூன்று வகைப்படும். திவ்ய ஓகம் முதலாவது; ஸித்த ஓகம் இரண்டாவது; மானவ ஓகம் மூன்றாவது. இவர்களது சரீரோபாதிபேதத்தால் இங்ஙனம் மூன்றுவகையாகக் கூறப்பட்டதேயன்றி ஞானாநுபவத்தினாலன்று. ஆதிநாதரும், உட்டீஶாதி மூவரும், முறையே, க்ருதயுகம், த்ரேதாயுகம் முதலிய சதுர்யுக குரவர்களாயிருக்கின்றனரென்பது இனி மேலே விமர்சிக்கப்படும். இந்த மத்தியத் திரிகோணத்தினுள்ள சக்திகள் ஆவரண தேவதைகளாகக் கூறப்படுவர். இவர்கள் மஹாகாமேஶ்வரி, மஹாவஜ்ரேஶ்வரி, மஹாபகமாலினி என்பவராவர். இவர்கள் அதிரஹஸ்ய யோகினிகளாவர். இவர்களின் ஸ்வரூபமாவது:—

एता अतिरहस्ययोगिन्यः अष्टभुजाश्चापबाणपानपात्रमातुलुङ्गकृपाणफलकनागपाशघण्टाधरा ललितासमानमाहात्म्यतेजसो ध्येयाः ॥

பிந்துவை யொன்பதாவது ஆவரணமாகப் பூஜாபத்ததிகள் கூறுகின்றனவாதலால், த்ரிகோணம் எட்டாவதாவ

ரணமாகும். பிந்து ஸர்வாநந்தமய சக்கிரம். திரிகோணம் ஸர்வஸித்திப்பிரதசக்கிரம். ஆகவே இந்த ஸ்லோகமும், இதற்குமுந்திய இரண்டுஸ்லோகங்களும், முறையே, எட்டாவது ஒன்பதாவது ஆவரணங்களைக் கூறியதாக அறிதல் அத்தியாவசியம். ஒவ்வொரு ஆவரணத்திலும் அத்தியாவசியமாய் அறிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களாவன :—ஆவரணத்தின் ஸங்கியை; சக்கிரத்தின் வடிவம் ; சக்கிரத்தின் பெயர் ; பிரக்ருதி ; தத்துவம் ; தேவதைகளைப் பூஜிக்கும் முறை ; தேவதைகளின் பெயர்கள் ; யோகினியின் பெயர்; சக்கிரேஸ்வரியின் பெயர்; அந்த அந்த சக்கிரத்தில் உள்ள முத்திரையின் பெயர் ; அந்த முத்திரையின் பீஜங்கள் ; ஸ்தாயீபாவம் ; அதிலுள்ள பிரதான ரஸம் முதலியனவாகும். (39)

இனி ஏழாவது ஆவரணம்-ஸர்வரோகஹர சக்கிரத்தின்
தேவதைகள் கூறப்படுகின்றனர்.

वसुकोणनिवासिन्यो
यास्ताः संध्यारुणा वशिन्याद्याः ।
पुर्यष्टकमेवेदं
चक्रतनोः संविदात्मनो देव्याः ॥ ४० ॥

(ப-ரை) वसुकोणनिवासिन्यः—அஷ்டகோணத்தில் வஸிக்கின்ற, याः वशिन्याद्याः — எந்த வசினி, காமேஸ்வரி முதலிய எட்டு வாக்தேவதைகளோ, ताः संध्यारुणाः — அவர்கள் மாலைக் காலத்திய சிவப்பு நிறத்துடன் விளங்குகின்றனர். इदं— இந்த சக்கிரமானது, चक्रतनोः —ஸ்ரீசக்கிரத்தையே சரீர

மாகவுடைய, **संविदात्मनः देव्याः**—ஞானஸ்வரூப பரதேவதை யின், **पुर्यष्टकमेव**—புர்யஷ்டகமாகவே இருக்கின்றது.

(வி-ரை) புர்யஷ்டக மென்பது ஸூக்ஷ்ம சரீரமாகும். இந்த புர்யஷ்டகம் சாஸ்திரங்களில் பலவிதமாகக் கூறப் பட்டுள்ளது. ஆயினும், சாக்ததந்த்ரங்களில் இலைமறை காய் போல் கூறப்பட்ட புர்யஷ்டகமாவது:—1. அந்தக் கரணத்தின் ஸமஷ்டி. 2. மனம். 3. புத்தி. 4. சித்தம். 5. அஹங்காரம். 6. ஸமஷ்டி ஞானேந்திரியங்கள். 7. ஸம ஷ்டி கர்மேந்திரியங்கள். 8. ஸமஷ்டி பிராணாதிகள் என் பனவாம். ஆதலின் பரதேவதையின் ஸூக்ஷ்மசரீரமே இந்த வஸுகோணமாகும். இந்த சக்கிரம் ஸர்வரோகஹர மென்னும் பெயருடையது. இதில் வஸிக்கும் ரஹஸ்ய யோகினிகளின் ஸ்வரூபமாவது:—

रक्ताशोकप्रसूनवर्णाश्चतुर्भुजाः बाणकार्मुकवीणापुस्तकधारिण्यः कवचच्छन्नसर्वाङ्ग्यो ध्येयाः ॥

வசின்யாதிகள் பூர்ணாஹந்தாஸ்வரூபத்தை யருள்பவர்கள்.

अपूर्णमन्यता व्याधिः कार्पण्यैकनिदानभूः ।

என்னும் வசனத்தின்படி அபூர்ணத்துவம், அதாவது, பரிச்சின்ன-கண்டத்வமே வியாதியெனப்படும். அபூர்ணத் துவ வடிவ வியாதியை நீக்கிப் பூர்ணத்துவ வடிவ ஆரோக் கியத்தை யருள்வதால் இவர்கள் வஸிக்கும் சக்கிரத்திற்கு ஸர்வரோகஹரசக்கிரமென்னும் பெயரேற்பட்டது.

अष्टारांशप्रवेशोऽयं चिन्निर्याणेषु सादिकम् ।
सूक्ष्मपुर्यष्टकं देव्यामविशेषमगोचरम् ॥ (इति शिवानन्दाः)

(40)

ஆருவது ஸர்வரக்ஷாகர சக்கிரமென்னும்
அந்தர்த்தசார ஆவரண தேவதைகள்.

तद्विषयवृत्तयस्ताः
सर्वज्ञादिस्वरूपमापन्नाः ।
अन्तर्दशारनिलया
लसन्ति शरदिन्दुसुन्दराकाराः ॥ ४१ ॥

(ப-ரை) **तद्विषयवृत्तयः** — வஸுகோணத்தின் ஸமீபத்தில் வஸிக்கும் விஷயஞானத்தையுண்டுபண்ணும் வ்ருத்திஸ்வரூபமுடைய, **ताः** — அந்த சக்திகள், **अन्तर्दशारनिलयाः** — அந்தர்த்தசாரசக்கிரத்தை வாஸஸ்தானமாயுடையவர்களாயும், **शरदिन्दुसुन्दराकाराः** — சரத்கால பூர்ண சந்திரனையொத்த ஸௌந்தர்யமுடையவர்களாயும், **सर्वज्ञादिस्वरूपमापन्नाः** — ஸர்வக்ஞா-ஸர்வசக்தி முதலிய பத்து சக்திகளின் ரூபத்தை யடைந்தவர்களாயும், **लसन्ति** — விளங்குகின்றனர்.

(வி-ரை) ஸர்வரக்ஷாகரசக்கிரம்—

स्वात्मैक्यरूपरक्षणकारित्वं रक्षाकरत्वम् ।

எந்த எந்த இந்திரியத்திற்கு எந்த எந்த விஷயம் யோக்கியமானதோ, அதை அதை, அந்த அந்த வ்ருத்தியாலறிந்து, ஆத்மஸ்வரூபத்தோடு ஐக்கியப்படுத்தி ரக்ஷிப்பதற்கு ரக்ஷாகரமென்று பெயர்.

சப்தவ்ருத்தி, ஸ்பர்ஸவ்ருத்தி, ரூபவ்ருத்தி, ரஸவ்ருத்தி, கந்தவ்ருத்தி, ஸங்காகாரவ்ருத்தி, மனோவ்ருத்தி, சித்தவ்ருத்தி, புத்திவ்ருத்தி, அஹங்காரவ்ருத்தியென வ்ருத்திகள் பத்துவகையினவாம். இவைகளே ஸர்வக்ஞாதி

பத்துதேவதைகளாக விளங்குகின்றனர். இவர்கள் நிகர்ப்ப யோகினிகளாவர்.

अन्तर्दशारगा देव्यो विद्युत्पुञ्जनिभाः शुभाः ।
निगर्भाख्याः पूजनीयाः सर्वरक्षाविधायिनीः ॥

என்னும் பிரமாணம் இங்கு அறியத்தக்கது.

நிகர்ப்பயோகினிகளின் ஸ்வரூபமாவது :—

मुक्ताहारसमवर्णाश्चतुर्भुजा वज्रशक्तितोमरचक्राणि दधाना ध्येयाः ॥ (41)

ஐந்தாவது ஸர்வார்த்தஸாதகமேன்னும் பஹிர்த்தசார சக்கிரத்தின் ஆவரணதேவதைகள்.

तद्बाह्यपङ्क्तिकोणे
योगिन्यः सर्वसिद्धिदापूर्वाः ।
देवीधीकर्मेन्द्रिय-
विषयमया विशदवेषभूषाढ्याः ॥ ४२ ॥

(ப-ரை) सर्वसिद्धिदापूर्वाः —ஸர்வஸித்திப்பிரதை, ஸர்வ ஸம்பத்பிரதை முதலிய, योगिन्यः —குளோத்தீர்ண யோகினிகளென்னும் பதின்மரும், देवीधीकर्मेन्द्रियविषयमयाः—பரதேவதையின் ஞானேந்திரியம், கர்மேந்திரியம், இவற்றின் விஷயங்களின் வடிவமாய் விளங்கி, विशदवेषभूषाढ्याः —நிர்மலமான வேஷபூஷணங்களை யுடையவர்களாய், तद्बाह्यपङ्क्तिकोणे— அந்தர்த்தசாரத்திற்குப்புறம்பேயுள்ள பஹிர்த்தசார சக்கிரத்தில், (भासन्ते) பிரகாசிக்கின்றனர்.

(வி—ரை) सर्वसिद्धिप्रदादिदशक्तय: = ஸர்வஸித்திப்ரதை முதலிய பத்துசக்திகள் இந்த ஆவரண தேவதைகள். இவர்களுக்கு குளோத்தீர்ணயோகினிகளென்று பெயர். இவர்களின் ஸ்வரூபமாவது :—

एताः स्फटिकसंकाशाः परशुपाशगदाघण्टामणिधरा भ्रुकुटी-कुटिलाननाः साधकेषु दयार्द्रहृदया ध्येयाः ॥

मन्त्रदेवतात्माभेदरूपाः सर्वसिद्धिदायिन्यः = மந்த்ரம், தேவதை, ஆத்மா இவைகளின் அபேதமே ஸர்வஸித்தி. இத்தகைய அபேதஞானத்தை யருளுபவர்கள் ஸர்வஸித்திப்பிரதை முதலியவர்களாவர்.

मन्त्राणां स्वप्रभारूपयोगादन्वर्थसंज्ञिकाः ।
सर्वसिद्धिप्रदाद्यास्तु चक्रे सर्वार्थसाधके ॥

என்று, யோகினீஹ்ருதயமும்,

वाह्यो दशारभागोऽयं बुद्धिकर्माक्षगोचरः ।

என்று, ஸுபகோதயவாஸனையும் கூறுவது இங்கே விமர்சித்தற்குரியது.

ஞான, கர்மேந்திரியங்களின் விஷயங்களாவன :— சப்த, ஸ்பர்ஶ, ரூப, ரஸ, கந்தங்களை, முறையே, அஸாதாரண குணங்களாயுடைய ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமியென்னும் பஞ்சபூதங்கள் ஞானேந்திரியங்களின் விஷயங்களாம்.

பேசுதல், வாங்குதல், நடத்தல், வெளிப்படுத்துதல், ஆநந்தித்தல் என்னும் वचनादानगमनविसर्गानन्दங்கள் கர்மேந்திரியங்களாகிற வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தங்களின் விஷயங்களாம். இவை பத்தும் பஹிர்த்தசாரசக்கிரத்தின் ஆவரணசக்திகளாவர். (42)

நான்காவது ஸர்வஸௌபாக்கியதாயக சதுர்த்தசார சக்கிரத்தின் ஆவரணதேவதைகள்.

भुवनारचक्रभवना
देवीमनुकरणविवरणस्फुरणाः ।
सन्ध्यासवर्णवसनाः
संचिन्त्याः संप्रदाययोगिन्यः ॥ ४३ ॥

(ப-ரை) भुवनारचक्रभवनाः — சதுர்த்தசாரசக்கிரத்தை வாஸஸ்தலமாயுடைய, संप्रदाययोगिन्यः — ஸம்பிரதாயயோகினிகளென்று கூறப்படுபவர்களாகிய ஸர்வஸம்க்ஷோபிணீ முதலிய பதினான்கு சக்திகள், सन्ध्यासवर्णवसनाः — ஸந்தியாகால அருணநிறமான வஸ்திரங்களை யுடையவராய், देवी-मनुकरणविवरणस्फुरणाः — பரதேவதையின் அந்தக்கரணசதுஷ்டயம், இந்திரியதசகம், என்னும் பதினான்கு ரூபங்களோடு விளங்குபவராய், संचिन्त्याः — நன்கு தியானித்தற்குரியவராவர்.

(வி-ரை) मनुकरण = பதினான்கு கரணங்கள்; பாஹ்ய கரணங்களாகும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் பத்து, அந்தக்கரண சதுஷ்டயம், ஆக பதினான்கு.

संप्रदाययोगिन्यः आदिशक्तिमयत्वेन सत्संप्रदायदेव्यः सर्वसंक्षोभिणीप्रभृतयः ॥

தொடர்ச்சியாயுள்ள பரம்பரைக்கு ஸம்ப்ரதாயமென்று பெயர். ஸர்வஸம்க்ஷோபிணீ முதலிய இந்த ஆவரணசக்திகள் ஆதிசக்தியிலிருந்து தொடங்கி, ஸம்பிரதாய பரம்பரையாய் வந்தவர்களாதலின், இவர்களுக்கு

ஸம்பிரதாயயோகினிகளென்னும் பெயரேற்பட்டது. இவ் விஷயம் வாமகேச்வரதந்த்ரத்திலும் கூறப்பட்டுள்ளது.

शक्तेः सारमयत्वेन प्रसृतत्वान्महेश्वरि ।
संप्रदायक्रमायाताश्चक्रे सौभाग्यदायके ॥
निरन्तरप्रथारूपसौभाग्यबलयोगतः ।
अन्वर्थसंज्ञका देवि अणिमासदृशाः शुभाः ॥
सर्वसंक्षोभिणीपूर्वा देहाक्षादिविशुद्धिदाः ।

ஸர்வஸௌபாக்கியம்:—அநாத்ம எண்ணங்களாகிற இருள் இடையே நுழையாமல் ஸதா ஆத்மப்பிரகாசத்தோடு இருக்கும் நிலை ஸர்வஸௌபாக்கியமெனப்படும். இத்தகைய நிலையில் நிற்கும் ஆற்றலைத்தருவதால் இந்த சக்கிரத்திற்கு ஸர்வஸௌபாக்கியதாயக சக்கிரமென்று பெயர். ஆதிகுருஸம்பிரதாயமே ஸௌபாக்கிய தாயகமாகும். ஸம்பிரதாய யோகினிகளின் விமர்சமாவது:—

कालानलसमानकान्तयश्चतुर्भुजा वह्निचाप-वह्निबाण-वह्नि-खड्ग-वह्निचक्रफलका दधाना दीप्तविग्रहा ध्येयाः ॥ (43)

மூன்றாவது ஸர்வஸம்க்ஷோபண அஷ்டதள சக்கிரத்தின் ஆவரண தேவதைகள்.

अव्यक्तमहदहंकृति-
तन्मात्राः स्वीकृताङ्गनाकाराः ।
द्विरदच्छदनसरोजे
जयन्ति गुप्ततरयोगिन्यः ॥ ४४ ॥

(ப-ரை) अव्यक्तमहदहंकृतितन्मात्राः—அவ்வியக்தம், மஹத்தத்துவம், அஹங்காரம், சப்தஸபர்ஸாதி தன்மாத்ரா பஞ்சகம் ஆகிய எட்டும், स्वीकृताङ्गनाकाराः—ஸ்திரீரூபத்தை ஸ்வீகரித்துக்கொண்டவைகளாய், द्विरदच्छदनसरोजे—அஷ்டதளகமலசக்கிரத்தில், (द्विरद = யானை—அஷ்டதிக்கஜங்கள்; எட்டு என்னும் எண்ணிக்கையில் வந்தது). गुप्ततरयोगिन्यः—குப்ததரயோகினிகளென்னும் பெயர்பெற்ற அநங்க குஸுமா முதலிய அஷ்டசக்திகளாய், जयन्ति—மிகச்சிறப்பாய் விளங்குகின்றன.

இவர்களின் ஸ்வரூபமாவது:—

एता जपाकुसुमनिभा इक्षुचापपुष्पशरपुष्पकन्दुकोत्पलानि चतुर्भुजैर्दधाना ध्येयाः ॥

(வி-ரை) அவ்வியக்தாதிகளின் ஸ்வரூபமான அநங்க குஸுமா முதலிய அஷ்ட சக்திகளும் மூலதேவியின் அந்தரங்கபூதைகளாயிருத்தலின் குப்ததரயோகினிகளாவர்.

वाग्भवाष्टकसंबन्धसूक्ष्मवर्गस्वरूपतः ।
लोके गुप्ततराश्चान्याः सर्वसंक्षोभणाह्वये ॥
अनङ्गकुसुमाद्यास्तु रक्तकञ्चुकशोभिताः ।
वेणीकृतलसत्केशाश्चापबाणधराः शुभाः ॥ इति ।

ஸ்தூலமத்யமையின் ஸ்வரூபம் अ, क, च, ट, त, प, य, श என்னும் அஷ்டவர்க்க ரூபமாகும். இவற்றின் ஸூக்ஷ்மரூபம் நாதவடிவமாகும். ஸ்தூலவைகரீ மாத்ருகையின் புர்யஷ்டகமாவது அக்ஷரம் என்னும் பிரஹ்மரந்த்ரத்தில் விளங்கும் நாதம் நீங்கலாக, அவிக்ருதம் முதலிய எட்டு நாதங்களாம். அதி ஸூக்ஷ்மமாய் விளங்குதலின் அநங்கத்துவம். (44)

இரண்டாவது ஸர்வாஶாபரிபூரகம் என்னும் பெயரையுடைய ஷோடசதள சக்கிரத்தின் ஆவரண தேவதைகள்.

भूतानीन्द्रियदशकं
मनश्च देव्या विकारषोडशकम् ।
कामाकर्षिण्यादि-
स्वरूपतः षोडशारमध्यास्ते ॥ ४५ ॥

(ப-ரை) देव्याः—பரதேவதையின், इन्द्रियदशकं—இந்திரியங்கள் பத்தும், मनश्च—அந்தக்கரணமும், भूतानि—பஞ்சபூதங்களும் ஆகிய, विकारषोडशकं—பதினாறு விகாரங்களும், कामाकर्षिण्यादिस्वरूपतः — காமாகர்ஷிணீ, புத்தியாகர்ஷிணீ முதலிய சக்திகளின் ஸ்வரூபத்தைப்பெற்று, षोडशारं—பதினாறிதழ்க்கமலத்தின்கண், अध्यास्ते—அதிஷ்டிதமாய் இருக்கின்றன.

(வி-ரை) காமாகர்ஷிணி முதலிய பதினாறு சக்திகளுக்குக் குப்தயோகினிகளென்று பெயர். இவர்களின் ஸ்வரூபமாவது :—

शीतांशुकलारूपा विद्रुमनिभा मन्दस्मितमुखारविन्दाश्चतुर्भुजास्त्रिणेत्राश्चन्द्रार्धमकुटोज्ज्वलाश्चापबाणखड्गचर्मधरा ध्येयाः ॥

षोडशस्वरसंदोहचमत्कृतिमयीः कलाः ।
प्राणादिषोडशानां तु तत्वानां प्राणनात्मिकाः ॥
बीजभूतस्वरात्मत्वाकलनाद्बीजरूपगाः ।
अन्तरङ्गतया गुप्तयोगिन्यः सुव्यवस्थिताः ॥

कामाकर्षणरूपाद्याः सृष्टिप्राधान्यतः प्रिये ।
सर्वाशापूरकाख्ये तु चक्रे वामेन पूजयेत् ॥

என்று சதுஃசதீ கூறுவதிங்கு அறிதற்பாலது. (45)

முதலாவது ஆவரணம் த்ரைலோக்யமோஹன
மென்னும் பூபுரசக்கிரத்தின் தேவதைகள்.

मुद्रास्त्रिखण्डया सह
संविन्मय्यः समुच्छ्रिताः सर्वाः ।
आदिमहीगृहवासा
भासा बालार्ककान्तिभिः सदृशः ॥ ४६ ॥

आधारनवकमस्या
नवचक्रत्वेन परिणतं येन ।
नवनाथशक्तयोऽपि च
मुद्राकारेण परिणतास्तेन ॥ ४७ ॥

(ப–ரை) त्रिखण्डया सह — த்ரிகண்டா முத்திரையோடு கூடி, मुद्राः सर्वाः —எல்லாமுத்திரைகளும் அதாவது பத்து முத்திரைகளும், संविन्मय्यः –ஞானஸ்வரூபமாய், समुच्छ्रिताः – உத்கர்ஷமடைந்தனவாய், भासा—காந்தியில், बालार्ककान्तिभिः सदृशः —பாலஸூர்யனது காந்திக்குச் சமமான காந்தி யுடையனவாய், आदिमहीगृहवासाः — ஸிருஷ்டிக்கிரமத்தில் முதலாவது பூபுரக்கோட்டில் இருக்கின்றன. अस्याः — பரதேவதையின், आधारनवकं— மூலாதாரம் முதலிய ஒன்பது சக்கிரங்களும், येन—எந்தக் காரணத்தால், नवचक्रत्वेन

परिणतं—ஒன்பது சக்கிரங்களாய்ப் பரிணமித்தனவோ, **तेन**—அந்தக்காரணத்தால், **नवनाथशक्तयोऽपि**—நவநாதர்களின் சக்திகளாகிற வாமாதியொன்பது சக்திகளும், **मुद्राकारेण**—ஸர்வ ஸம்க்ஷோபிணீ முதலிய முத்திரைகளின் ரூபமாய், **परि-णताः**—பரிணமித்தனர்.

(வி-ரை) தசமுத்திரைகள் சிருஷ்டிக்கிரமத்தின்படி முதலாவது பூபுரத்தில் வஸிக்கின்றனர். ஸம்ஹாரக் கிரமத்தில் பூஜாபத்ததி ஏற்பட்டுள்ளது. அதன்படி கடைசியான மூன்றுவதுரேகையாகும். இவர்கள் ஞானமே வடிவமாயிருப்பவர்; பாலசூரியனைப்போன்ற தேஹகாந்தி யையுடையவர்கள். இவர்களின் ஸ்வரூபமாவது:—

एता दाडिमीपुष्पसंकाशाश्चतुर्भुजा मुद्राविरचनहस्तद्वयाश्चर्म-कृपाणिकाधरभुजद्वया ध्येयाः ॥

இவர்களில் ஸர்வஸம்க்ஷோபிணீ முத்திரைமுதல் ஸர்வயோனிமுத்திரைவரையில் ஒன்பது முத்திரைகளும் பூபுரத்தில் இருந்தாலும், பூபுரம் முதல் ஒன்பது சக்கிரங் களிலும் ஒவ்வொன்றில் ஒவ்வொருமுத்திரையாக வியா பித்திருக்குமென்றறிதல் அவசியம். திரிகண்டை பிந்து வில் வியாபகம்.

क्रियाशक्तिस्तु विश्वस्य मुद्राख्या संविदात्मिका ।
त्रिखण्डरूपमापन्ना सदा संनिधिकारिणी ॥

सर्वस्य चक्रराजस्य व्यापिका परिकीर्तिता ।
योनिप्राचुर्यतः सैषा सर्वसंक्षोभिणी पुनः ।
वामाशक्तिप्रधानेयं द्वारचक्रस्थिताभवत् ॥ इत्यारभ्य

संपूर्णस्य प्रकाशस्य योगभूमिरियं पुनः ।
योनिमुद्रा कलारूपा सर्वानन्दमये स्थिता ॥ इत्यन्तम् ।

(யோகினீ ஹ்ருதயம்)

आधारनवकं मुद्राशक्तयः என்று பாவனோபநிஷத்து கூறுகின்றது. மூலாதாராதி ஆக்ஞைவரையில் ஆறு; மேல் கீழ் என்னும் ஸஹஸ்ராரங்கள் இரண்டு; லம்பிகாக்கிரமென்னும் உண்ணாக்குஸ்தானம் ஒன்று; ஆக ஒன்பது, இவற்றின் ஸமஷ்டியொன்று; ஆக பத்தும், பத்து முத்திரா தேவதைகளாவர். இவர்கள் நவநாதர்களின் சக்திகள். இவ்விஷயத்தைப்பற்றி விரிவாய் அறியவிரும்புபவர் ஸ்வச்சந்த ஸங்கிரஹம் என்னும் நூலைப்பார்க்கவும். (46-47).

பூபுரத்தின் இரண்டாவது அதாவது மத்திய
ரேகையின் தேவதைகள்.

अस्यास्त्वगादिसप्तक-
माकारश्चैवमष्टकं स्पष्टम् ।
ब्राह्मयादिमातृरूपं
मध्यमभूबिम्बमेतदध्यास्ते ॥ ४८ ॥

(ப-ரை) अस्याः — இந்தபரதேவதையின், त्वगादिसप्तकं— துவக்கு-அஸ்தி முதலிய ஏழு தாதுக்களும், आकारश्च— ஸமஷ்டியான ஆகாரமும், एवमष्टकं स्पष्टं— இங்ஙனம் ஸ்பஷ்டமான எட்டும், ब्राह्मयादिमातृरूपं—பிராஹ்மீ முதலிய அஷ்டமாத்ருகைகளின் வடிவத்தைப் பெற்று, एतत्—முற்கூறிய

मध्यमभूबिम्बं—பிரிதிவீ சக்கிரமான சதுரஸ்ரத்தின், நடுக் கோட்டில், अध्यास्ते—அதிஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் ஸ்வரூபமாவது:—

एता द्विभुजाः शोणविग्रहाः कपालमुत्पलं च दधाना रक्तवस्त्रा ध्येयाः ॥

(வி--ரை) பரதேவதாசரீரத்தின் ஸப்ததாதுக்களே பிராஹ்மியாதி மாத்ருகைகள் ஆவர்.

ஸப்த தாதுக்களாவன:—துவக் (சர்மம்), அஸ்ருக் (இரத்தம்), மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்கிலம் என்பனவாம். இவை ஏழும், இவற்றின் விகாரமான ஸ்தூல சரீரம் ஒன்றும், ஆக எட்டும் எட்டுமாத்ருகைகள்.

அஷ்ட மாத்ருகைகள்:— பிராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டா, மஹாலக்ஷ்மீ என்பவர்களாம். (48)

பூபுரத்தின் முதல் ரேகையிலுள்ள அணிமாதி ஸித்தி தேவதைகள்.

अणिमादिसिद्धयोऽस्याः
स्वीकृतकमनीयकामिनीरूपाः ।
विद्यान्तरफलभूता
गुणभावेनान्त्यभूनिकेतनगाः ॥ ४९ ॥

(ப-ரை) विद्यान्तरफलभूताः—ஸ்ரீவித்தையைக் காட்டிலும் வேறான வித்தைகளின் பயனான, अस्याः अणिमादिसिद्धयः—பரதேவதையின் அணிமா முதலிய ஸித்திகள், स्वीकृतकमनीयकामिनीरूपाः —மனோஹர ஸ்திரீரூபங்களைத்தரித்துக்கொண்டு,

गुणभावेन — உபஸர்ஜனபாவத்தினல், அதாவது, அப்பிர தான கௌணபாவத்தினல், अन्त्यभूनिकेतनगाः — சதுரஶ்ரத் தின் அந்தியரேகையில் (பூஜாக்கிரமப்படி முதல் ரேகை யில்) அமர்ந்திருக்கின்றனர். இவர்களின் ஸ்வரூபமாவது—

एताश्चतुर्भुजा जपाकुसुमवर्णाश्चिन्तामणिकपालत्रिशूलसिद्ध-कज्जलधरा ध्येयाः ॥

(வி--ரை) ஸ்ரீ வித்யோபாஸனையின் பயன் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைத் தவிற வேறின்மையின், அணிமாதி ஸித்திகள் இதரவித்தைகளின் பயனுகக் கூறப்பட்டன. ஸித்திகளுக்கு அத்யாத்மசாஸ்திரத்தில் பிராதான்யம் இல்லை. ஏனெனின், ஸித்திகளெல்லாம் வியாவஹாரிக மானவை. ஞானிகளுக்கு இந்த ஸித்திகள் துச்சமாய்க் காணப்படும். ஜீவன்முக்தனது சரீரம் இருக்கும் வரை இந்த ஸித்திகளெல்லாம் அவனைப் பின்பற்றிச் செல்லுகின் றனவென்பது சாஸ்திரப் பிரஸித்தமானது. அஷ்டமா ஸித்திகளென்று கூறப்படினும் ஸ்ரீசக்கிரத்தில் தசஸித்தி கள் கூறப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம், ஸ்ரீகாமகலையின் விலஸனமாகும் ஸ்ரீசக்கிர ஸ்வரூபமும், அதன் சக்திகளும் நன்கு விமர்சிக்கப்பட்டன. இனி, வித்யாபாதத்திலும் ஆநந்தபாதத்திலுங் கூறப்பட்ட மந்த்ரம், தேவதை, சக்கிரம் இவற்றின் யதார்த்த தத்து வம், அவற்ருேடு தனக்கும் (உபாஸக-ஸாதகன்) பிரபஞ் சத்திற்கும் உள்ள அபேதஸ்வரூப ஐக்கியம் முதலியவை உள்ளபடி ஸ்புரித்து அநுபவத்திற்கு வரவேண்டுமாயின், ஸ்ரீபரமேஶ்வரவடிவ ஸத்குருகடாக்ஷமும், அவரது குரு ஸம்பிரதாயக்கிரம ஞானமுமன்றி வேருென்றுமின்ருத லின், ஸம்பிரதாயக்கிரமம் கூறப்படுகின்றது. (49)

परमानन्दानुभवः
परमगुरुर्निर्विशेषचिन्द्वात्मा ।
स पुनः क्रमेण भिन्नः
कामेशत्वं ययौ विमर्शांशात् ॥ ५० ॥

(ப--ரை) परमानन्दानुभवः — பூமாஸ்வரூபபூர்ணோஹம் பாவ பரமாநந்தாநுபவமுடைய, निर्विशेषचिन्द्वात्मा—பிரகாச, விமர்ஶ, மிஶ்ரபிந்துக்களுக்கும் காரணமான சுத்தபிரஹ்ம (பிந்து) ஸ்வரூபமானது, परमगुरुः —ஆதிநாதஸ்வரூபத்தை அடைந்து பின்னர், सः —அந்த சுத்தப்பிரஹ்மமே, पुनः — மறுபடியும், क्रमेण—கிரமக்கிரமமாய், भिन्नः —வெவ்வேருக அதாவது திவ்விய, ஸித்த, மாநவமென்னும் ஓகத்திரய வடிவத்தையடைந்து, विमर्शांशात्—ஸ்வாத்மசக்திவடிவ சித் சக்தியின் விமர்சத்தினல், कामेशत्वं—காமேஸ்வரபாவத்தையும், ययौ—அடைந்தது.

(வி-ரை) விசேஷங்கள்யாவும் பிராபஞ்சிகம்; ஆதலின் நிர்விசேஷமென்பது நிஷ்பிராபஞ்சிகமாம்; அதாவது பேதகாரணங்களாகிற யாதொரு விசேஷணங்களற்றதாம். அத்தகைய சுத்தப் பிரஹ்மமே ஆதிகுருவாவர். இவருக்கு இவரைவிடப் பின்னமாக மற்ெருரு குரு இல்லை. இந்த சுத்தப்பிரஹ்மம் அம்சாம்சிபாவாதீத மாதலின் பிரகாசம், விமர்ஶமென்னும் அம்சத்துவயங்களும் அங்கே இல்லை. அதற்கு ஆதிநாதத்துவமேற்பட்டபோது பிரகாசாம்சம் ஏற்பட்டது. இதிலிருந்து காமகாமேஶ்வரீ மிதுனம் ஏற்பட்டது. இத்தம்பதிகள் இருவருக்கும் பிரகாசத்துவமும் விமர்சத்துவமும் உண்டு.

गुरुशिष्यपदे स्थित्वा स्वयमेव सदाशिवः ।
लोकसंरक्षणार्थाय तन्त्रं समवतारयत् ॥

என்னும் பிரமாணத்தின்படி, பரப்பிரஹ்மமானது தனது பிரகாசாம்சத்தினுல் குருவாகவும், விமர்சாம்சத்தினுல் சிஷ்யனுகவும் இருந்து முமுக்ஷுக்கள் உய்யும் பொருட்டு ஞானசாஸ்திரங்களை வெளிப்படுத்தினுர் என்றேற்படுகின்றது. தந்த்ரங்கள் யாவும் வினுவிடைரூபமாய் அமைந்துள்ளன. அவற்றுள் சிவன் சக்திக்குக்கூறியது சில; சக்தி சிவத்திற்குக்கூறியது சில. சக்தி, சிவன்பால் சிரவணம் செய்யும்போது சிவம் குருபாவமெய்தியும், சிவம், சக்திபால் சிரவணம் செய்யும்போது சக்தி குருபாவமெய்தியும் விளங்குகின்றன. இதற்கு ஸமப்பிரதான நியாயமென்று பெயர். பிரகாசாநந்தஸாரவடிவ மஹோட்டியாண பீடத்திலமர்ந்து, தானே ஸ்ரீசர்யாநந்தநாதரென்னும் திருநாமத்தை வஹித்துத் தன் ஸ்வரூபத்திற்கு அபின்னேயான பராபட்டாரிகையின் பொருட்டு ஸ்ரீவித்யாக்கிரமத்தை யுபதேசித்தனர். பின்னர், இவர்கள் இருவரின் மூலமாய் அதிரஹஸ்யமான சாம்பவதத்துவமானது சதுர்யுகங்களிலும் உட்டீசாநந்தராதி குருஸ்வரூபங்களுக்கு உபதேசிக்கப்பட்டது.

பிரஹ்மவித்தியா ஸம்பிரதாயக்கிரமத்தின் தத்துவம்.

ब्रह्मविद्ब्रह्मैव भवति="பிரஹ்மத்தைத் தன் ஆத்மஸ்வரூபமாய் உணர்ந்தவன் பிரஹ்மமேயாகின்றனன்" என்னும் பிரமாணப்படி, ஆத்மஞானியும் பிரஹ்மமும் ஒன்றே. இந்த மஹாஞானி நிர்விகல்பஸ்திதியாகும் ஆரூடஸ்திதியில் ஸதா இருந்துவிடின், பரமாநந்தாநுபவ நிலையைப் பற்றி, உரிய முமுக்ஷுக்களுக்கு உபதேசிக்கும் ஸத்குரு

கிடைக்காமல் போய்விடும்; போய்விடவே எந்த ஜீவனும் மோக்ஷத்தை யடையமுடியாது. ஆகவே, இதையெல்லாம் உத்தேசித்து, முதல் முதலில், சுத்தப் பிரஹ்மமே பரமானந்தாநுபவமுடைய பரமகுருவாய் விளங்கிற்று. இங்ஙனம், “ஆதிகுருவாய்ப் பவிப்பேன்” என்று எண்ணிய போது அதற்குக் காமேஶத்துவம் எய்தியது. இங்கே காமேசத்துவமெனின், ஸர்வகாமனைகளையும் அடைந்த தன்மை. அதனால் காமனைகளுக்கெல்லாம் ஈஸ்வரனென்னும் தன்மை. இந்த தன்மை பிரஹ்மாத்மைக்கிய ஜீவன் முக்தனுக்கே பொருந்தும். இந்த நிலையைப்பெற்று மந்த, மத்தியம, உத்தம அதிகாரி முமுக்ஷுக்களுக்குப் பரமாநந்தாநுபவஸ்திதியைப் போதித்துணர்த்துபவர்தாம் ஸற்குரவரெனப்படுவர். இவர்கள் காணமல் கண்ட அநுபவத்தைப் பிரத்தியபிக்ஞையால் முமுக்ஷுக்களுக்குப் போதிப்பார்கள். சிஷ்யர்களுக்கேற்படும் ஸகலஸந்தேஹங்களையும் நீக்கி யுண்மையை யுணரச்செய்யும் சக்தி இவர்களின் ஆத்ம சக்தியாகும் விமர்சாம்சமெனப்படும். இதையே ஶ்ரோத்திரியத்துவமென்று உபநிஷத்து கூறுகின்றது. **श्रोत्रियं ब्रह्मनिष्ठम्** இங்கே ஶ்ரோத்திரியத்துவம் விமர்சசக்தியும், பிரஹ்மநிஷ்டத்துவம் பரமாநந்தாநுபவத் தன்மையுமாகும். பிரஹ்மவித்யா ஸம்பிரதாயக் கிரமமென்னும் வித்தியாப் பிரபஞ்சகாரணத்துவம் இந்த காமத்துவத்திற்கேயுள்ளது. காமம் என்றால் இச்சையெனப்படும். என்ன இச்சையெனின், யாவரும் அந்த நித்தியாநந்தப் பெருவாழ்வை யடையவேண்டுமென்பதேயாகும்.

இங்ஙனம், சுத்தப்பிரஹ்மம் காமேசத்துவத்தை அடைந்தபோது (**क्रमेण भिन्नः**) கிரமத்தினால் பின்னப்பட்ட குரு மண்டலங்களின் ஸ்வரூபத்தையும் அடைந்தது.

பின்ன பின்ன குருமண்டலங்களின் விமர்ஸமாவது :—

குருமண்டலமானது நான்கு பெரிய கூட்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அவை பரௌகம், திவ்யௌகம், ஸித்தௌகம், மானவௌகம் என்பனவாம். அபின்ன அகண்ட பிரஹ்மஸ்வரூப ஆதிநாதனுக்கு இத்தகைய பேதங்கள் எங்ஙனம் ஸம்பவிக்குமெனின், முமுக்ஷுக்களாகிய சிஷ்யர்களின் அந்தக்கரண பரிபாகபேதத்தினல், உபதேசபேதமும், உபதேசிக்கப்படும் விஷயத்தின் பேதமும் ஏற்பட, உபதேஷ்டாவாகிய குருவின் பேதங் கற்பிக்கப்பட்டதென்று அறியத்தக்கது. நித்யமுக்தர்களாய்ப் பரமேஸ்வரனுக்குச்சமானராய் விளங்குபவர் பரௌகத்தில் சேர்ந்த குருஸ்வரூபராவர். இவர்களுக்கு என்றும் ஜீவபாவம் ஏற்பட்டதேயில்லை; ஆதலின் நிராவரணர்கள். ஸ்ரீசக்கிரத்தில் இவர்களின் ஸ்தானம் பிந்துவும் திரிகோணமுமாகும்.

திவ்ய, ஸித்த, மானவ ஓகங்களென்னும் மூன்று குருமண்டலங்களைச் சார்ந்த குரவர்கள், முறையே, உத்தம, மத்தியம, மந்தாதிகாரிகளுக்குக் குரவராவர்.

பிரஹ்மவித்தையென்னும் ஸ்ரீவித்தையின் உத்தமாதிகாரிகளுக்கு ஸத்குருவின் கடாக்ஷாநுக்கிரஹத்தினல் பெற்ற தீக்ஷையினலேயே, உத்தரக்ஷணத்தில், ஆத்மப்பிரஹ்மைக்கிய ஸாக்ஷாத்காரத்தின் பிரதிபந்தகங்கள் ஒழிந்து, பரமபுருஷார்த்தம் ஸித்திக்கின்றது. இத்தகைய உத்தமாதிகாரிகளின் குரவர்களுக்குத் திவ்யௌக குருமண்டல மென்றுபெயர்.

தீக்ஷையைப்பெற்றபின், பாஹ்ய பூஜையைச் செய்து கொண்டு அதன் தத்துவத்தை நன்கு விமர்சித்து, ஸதா

நிதித்தியாஸனத்தில் நிற்கும் சுத்தஸத்துவப்பிரதான அந்தக்கரணத்தையுடைய மத்தியமாதிகாரிகளின் குரவர்களுக்கு ஸித்தௌக குருமண்டல மென்றுபெயர்.

தீக்ஷையையடைந்து, மந்த்ரார்த்தவிசாரம் செய்து, மந்த்ரத்திற்கும் சக்கிரத்திற்கும் அபேதத்தை யுணர்ந்து, உபாஸ்ய-உபாஸக அபேதத்தையும், தேவதா-மந்த்ர அபேதத்தையும், சக்கிரப்-பிரபஞ்ச அபேதத்தையும் நன்குணர்ந்து அதனுல் பிரதிபந்தகங்களாயுள்ள ஸந்தேஹ விபரீதங்களை யொழித்து, ஆத்மப் பிரஹ்மைக்கிய ஸாக்ஷாத்காரத்தைப் பெறுபவர் மந்தாதிகாரிகளெனப்படுவர். இவர்களுக்குக் குரவர்களாய்ப் பவிப்பவர் மானவௌக குருமண்டலத்திற் சார்ந்தவராவர்.

குருபாம்பரையில், தனது குருவை மானவ ஓகத்திலும், தனது பரமகுருவை அதாவது குருவின் குருவை ஸித்த ஓகத்திலும், தனது பரமேஷ்டி குருவை அதாவது பரமகுருவின் குருவை திவ்ய ஓகத்திலும் சேர்ந்தவர்களாய்ப்பாவிப்பது ஸம்பிரதாயமாகும். வாஸ்தவத்தில் குருத்துவத்தில் கிஞ்சித்தும் பேதமில்லை. சிஷ்யர்களின் பரிபாக பேதத்தினுல் குருமண்டலத்தின் பேதம் சாஸ்திரங்களில் கற்பிக்கப்பட்டுள்ளதென்று அறிதல் அத்தியாவசியம்.(50)

(அ--கை) இத்தகைய குருமண்டலத்தின் பேதம் எங்ஙனம் ஏற்பட்டதென்னும் விஷயம் கூறப்படுகின்றது.

आसीनः श्रीपीठे
कृतयुगकाले गुरुः शिवो विद्याम् ।

तस्यै ददौ स्वशक्त्यै
कामेश्वर्यै विमर्शरूपिण्यै ॥ ५१ ॥

(ப-ரை) श्रीपीठे — ஸ்ரீசக்கிரத்தில் மத்தியத்திரிகோணத்தின் மத்தியிலுள்ள பிந்துமயமான மஹோட்டியாண பீடத்தில், आसीनः —நித்திய ஸந்நிஹிதராய் அதிஷ்டித்து விளங்கும், गुरुः शिवः —ஞானோபதேஷ்டாவாகும் பரப்பிரஹ்மஸ்வரூப ஆதிநாதர், विमर्शरूपिण्यै— அபேதஞான விமர்ஶரூபிணியும், कामेश्वर्यै— அநந்தகோடி ஜீவர்களுக்குப் பரதத்துவத்தைப் போதித்து வித்யாஸந்ததியைப் பெருக்க வேண்டுமென்னும் தனது இச்சாஸ்வரூபிணியான காமேஶ்வரியும், स्वशक्त्यै— ஆத்மசக்தியுமாகிற; तस्यै— நித்தியாநந்தஸ்வரூபிணியும், உபநிஷத் பிரதிபாத்யையுமாகிற பராபட்டாரிகையின் பொருட்டு, कृतयुगकाले— சிருஷ்டியின் உத்தரக்ஷணமாகும் க்ருதயுகத்தில், विद्यां— பிரஹ்மவித்தையை, ददौ— உபதேசித்தருளினார்.

(வி-ரை) सत्यं ज्ञानमनन्तं ब्रह्म; आनन्दो ब्रह्म; चिन्मात्रं सर्वद्रष्टारं सर्वसाक्षिणं सर्वग्राहकं सर्वप्रेमास्पदं सच्चिदानन्दमेकरसमेवायमात्मा ; सन्मात्रो नित्यः शुद्धो बुद्धः सत्यो मुक्तो निरञ्जनो विभुरद्वय आनन्दः पर इत्याद्युपनिषदुक्तरीत्या चिदानन्दघनपरमार्थप्रकाशविमर्शात्मा परमेश्वर एव परमकारुणिकः स्वयमेव स्वात्मानं कामकलाबिन्दुरूपकामकामेश्वरीरूपदिव्यमिथुनप्रमुखदिव्यसिद्धमानवौघादिक्रमावतीर्णो गुरुमण्डलात्मा सन् कतिचन भक्तिभाजः संरक्षति ॥

என்னும் பிரமாணத்தின்படி சுத்தப்பிரஹ்மமே காமகாமேஶ்வரீரூப திவ்யதம்பதிகளாயும், சர்யாநந்தநாத

பராபட்டாரிகாரூப ஆதிநாதர்களாயும் விளங்கி, குருமண்டலங்களைத் தோற்றுவித்தது என்றேற்படுகின்றது. முதல் முதலில், சர்யாநந்தநாதர் ஸ்வசக்தியாகும் பராபட்டாரிகைக்கு உபதேசித்தனர். (51)

———

(அ–கை) பின்னர் ஆதிநாதரின் விமர்சசக்தியாகும் பராபட்டாரிகை திரேதாயுகாதி குருமண்டலங்களாகிய ஊர்த்துவாநந்தநாதராதி காரணகுரு ஸ்வரூபர்களுக்கு உபதேசித்தனள் என்னும் விஷயம் இந்த இரண்டு ஸ்லோகங்களாலும் கூறப்படுகின்றது.

सेयाय मित्रसंज्ञां
स्थानेशान् ज्येष्ठमध्यबालाख्यान् ।
चित्प्राणविषयभूतान्
त्रेतायुगादिकारणत्रिगुरून् ॥ ५२ ॥

बीजत्रितयाधिपतीन्
परीक्ष्य विद्यां प्रकाशयामास ।
एतैरोघत्रितयं
समनुगृहीतं गुरुक्रमो विदितः ॥ ५३ ॥


(ப--ரை) सा = ஸ்ரீசர்யாநந்தநாதரின் விமர்சசக்தியாகும் பராபட்டாரிகையானவள், मित्रसंज्ञां = மித்ரேஶாநந்தநாதரென்னும் (கலியுககாரண குருவின்) பெயரை, इयाय = அடைந்தனள். இங்ஙனம் கூறப்பட்டதனால், திரேதாயுக, துவாபரயுகங்களின் காரண குரவர்களின் ஸம்ஞைகளை (பெயர்களை)யும் அடைந்தனளென்று கொள்ளுதல் அவசி

யம். **स्थानेशान्**=மத்தியத்ரிகோணத்தின் உத்தர, தக்ஷிண, பஶ்சிமகோணங்களின் ஈஶர்களாயும், **ज्येष्ठमध्यबालाख्यान्**= வ்ருத்த, யௌவன, பாலர்களாயும், **चित्प्राणविषयभूतान्** = சித்து, பிராணன், விஷயம் என்னும் ஸத்துவ, ரஜஸ், தமோபாதிகளோடு கூடியவர்களாயும், **बीजत्रितयाधिपतीन्**= சக்தி, காமராஜ, வாக்பவபீஜங்களின் அதிபதிகளாயும், **त्रेतायुगादिकारणत्रिगुरून्** = திரேதா, துவாபர, கலியென்னும் மூன்றுயுகங்களின் காரணகுரவர்களாயுமுள்ள உட்டீச, ஷஷ்டீச, மித்ரேசர்களை, **परीक्ष्य**=நன்கு பரிசோதித்து, **विद्यां प्रकाशयामास**=ஸ்ரீபிரஹ்மவித்தையைப் பிரகாசப்படுத்தினாள். **एतैः** = இந்தக் காரணகுரவர்களால், **ओघत्रितयं**= திவ்விய, ஸித்த, மானவமென்னும் ஓகத்திரய குருமண்டலங்கள், **समनुगृहीतं**=நன்கு அநுக்கிரஹிக்கப்பட்டன. இங்ஙனம், **गुरुक्रमो विदितः** = குரு ஸம்பிரதாயமானது அறியப்பட்டது.

(வி--ரை) மஹோட்டியாண துரீயபீடத்தில் விளங்கும் பராபட்டாரிகையே பரௌகமென்று கூறப்படும் காரணகுரு ஸ்வரூபர்களின் ஸம்ஞைகளையடைந்து, அவர்களைப் பரீக்ஷித்துப் பின்னர், பிரஹ்மவித்தையை உபதேசித்தனள். ஆதலின் காரணகுரவர்களுக்கும் ஸர்வகாரண ஆதிகுருவுக்கும் பேதமின்றென நன்கு விளங்குகின்றது.

சங்கை:—பேதம் இன்றெனின், ஸ்தானேசர்களாயும், ஜ்யேஷ்ட, மத்திய, பாலர்களாயும், சித்பிராணவிஷயபூதர்களாயும், பீஜத்ரயாதிபதிகளாயும் விளங்கும் உட்டீச, ஷஷ்டீச, மித்ரேசர்களைப் பரீக்ஷித்து வித்தையை யுபதேசித்ததாகக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? பரீக்ஷிக்கும் குருவும், பரீக்ஷிக்கப்படும் சிஷ்யனும் ஒன்றாயிருத்தல் அஸம்பவமன்றோ?

ஸமாதானம்:—பிந்துஸ்வரூப மஹோட்டியாண பீடத்தில் அதிஷ்டிதராயுள்ள ஸ்ரீசர்யாநந்தநாதர் எங்ஙனம், தன்னைவிட எவ்வகையிலும் பின்னமல்லாத தனது ஆத்ம (விமர்ஶ) சக்திக்கு உபதேசித்ததாக முன் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதோ, அங்ஙனமே, பராபட்டாரிகையும், தனது பிரகாசாம்சத்தினால் ஸ்ரீ உட்டீசாதி மூவரையும், திரேதாதி மூன்றுயுகங்களில் வியக்தப்படுத்தித் தனது விமர்சாம்சத்தினால் வித்தையைப் பிரகாசப்படுத்தினாள். பிரகாசசரணத்தின் மயூக (கிரண) மே குருமண்டலமாமென்று முன் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.



1. உத்தரகோணம்; ஊர்த்வாநந்தநாதர், பகமாலினி, ஜ்யேஷ்டர், சித்து(அந்தக் காணம்) சக்திபீஜாதிபதி, திரேதாயுகத்தின் காரணகுரு, திவ்யௌகத்திற்கு அநுக்கிரஹித்தவர்.

2. தக்ஷிணகோணம்; ஷஷ்டீசாநந்தநாதர், வஜ்ரேஶ்வரி, மத்தியர் (யௌவன பருவமுடையவர்), பிராணரூபர், காமராஜ பீஜாதிபதி; துவாபரயுகத்தின் காரணகுரு, ஸித்தௌகத்திற்கு அநுக்கிரஹித்தவர்.

3. ஸ்வாக்கிரகோணம்; மித்திரேசாநந்தநாதர், காமேஶ்வரி, பாலர், விஷயவடிவினர், வாக்பவ பீஜாதிபதி, கலியுகத்தின் காரணகுரு. மானவௌகத்திற்கு அநுக்கிரஹித்தவர்.

இங்ஙனம் ஸ்ரீபிரஹ்ம வித்யா ஸம்பிரதாயக் கிரமமானது தொடர்பு கெடாமல் பரமசிவஸ்வரூப ஸ்ரீசர்யாநந்தநாதரென்னும் ஸ்ரீவித்யாநந்தநாதர் முதல் உபாஸகனது ஸ்வகுரு வரையில் விளங்குவது அவசியம் அறியத்தக்கது.

தொடர்புகெடாத குருபரம்பராக்கிரமம்

(மஹாகாமேஸ்வரர்)
சர்யாநந்த நாதர்
|
ஸ்ரீபராபட்டாரிகை.
|

உட்டீசா நந்த நாதர் மஹாபகமாலினி (திரேதாயுகம்)	ஷஷ்டீசாநந்த நாதர் மஹாவஜ்ரேஸ்வரி (துவாபரயுகம்)	மித்ரேசா நந்தநாதர் மஹா காமேஸ்வரி (கலியுகம்)
|	|	|
திவ்யௌக குருமண்டலம். பரமேஷ்டி குரு.	ஸித்தௌக குருமண்டலம் பரமகுரு.	மானவௌக குருமண்டலம். ஸ்வகுரு.

வித்யாஸந்ததியின் ஞானத்தோடு கூடிய முமுக்ஷு யாதொரு ஸந்தேஹமுமின்றி மோக்ஷத்தையடைகின்றான். ஸம்பிரதாயக்கிரமமாய் அடையப்படாத வித்தை அவித்தையே தவிர வித்தையாகாது. எங்ஙனம், கோத்திர பரிக்ஞானம் விவாஹத்திற்கு இன்றியமையாததோ, அங்ஙனமே, குருபரம்பராக்ஞானம் ஞானத்திற்கு உபயோகமானது. இதைப்பற்றி அதிகம் அறிய விரும்புவோர் எனது முன் பிரசுரமான ஸ்ரீகுருதத்துவ விமர்சத்தில் கண்டு தெளிக.

चित्प्राणविषयभूता: । சித்து, பிராணன், விஷயம் என்னும் இவற்றின் வடிவமாய் விளங்குபவர். காரண குரவர்

களாகிய காமேசீ ஸஹித மித்ரேசராதியரின் ஸ்வரூபமாய்க் காமகாமேஶ்வரீவடிவ ஆதி மிதுனமானது குணபேதத்தினல் விளங்குகின்றதென்று 39-வது ஶ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதலின் ஆதிநாத தம்பதிகளின் ஸத்துவாம்சம் ஊர்த்துவா (உட்டீசா) நந்தநாதராகவும், ரஜோம்சம் ஷஷ்டீசாநந்தநாதராகவும் தமோம்சம், மித்ரேசாநந்தநாதராகவும் விளங்குகின்றன.

சித்து: ஸத்துவப்பிரதான அந்தக்கரணம்; பிராணன்— ரஜோகுணப் பிரதான பிராணுதிகள். விஷயம்—தமோ குணப் பிரதான பிரபஞ்சம்.

இங்ஙனம் **परमानन्दानुभवः** என்பது முதல் **गुरुक्रमो विदितः** என்பது வரையில் (50--53) ஸ்ரீகுருபரம்பரை விமர்சிக்கப்பட்டது. ஆகவே, இந்த ஆநந்தபாதத்தில் பரா பஶ்யந்தீ முதலிய நான்கு வாக்குக்களின் ஸ்வரூப விமர்சனமும், ஸ்ரீசக்கிரத்தின் சிருஷ்டிக்கிரமமும், பராதேவதையின் சரணாரவிந்தயுகளப் பிரஸரமான பதவிக்ஷேபவடிவ ஆவரண தேவதைகளின் ஸ்வரூபமும், கிரமோதயவடிவ குரு பரம்பராஸ்வரூபமும் நன்கு விமர்சிக்கப்பட்டன. (52-53)

கிரந்தத்தின் உபஸம்ஹாரம்.

उदितः पुण्यानन्दा-
दिति कामकलाङ्गनाविलासोऽयम् ।
पराशिवभुजङ्गभावा-
कर्षणहर्षाय कल्पतां नित्यम् ॥ ५४ ॥

(ப—ரை) इति—இங்ஙனம், पुण्यानन्दात्—ஸ்ரீமத் புண்ணியாநந்தநாதரது திருவாக்கினின்றும், उदित:—தோன்றிய, अयं कामकलाङ्गनाविलास:—இந்த காமகலேயென்னும் ஒரு சிறந்த யுவதியின் விலாஸமானது, परशिवभुजङ्ग—பரப்பிரஹ்மமென்னும் விடபுருஷனது, भाव आकर्षणहर्षाय—ஹ்ருதயத்தை ஆகர்ஷிக்கும் சிருங்காரரஸ ஜனகமாகும் உத்ஸாஹத்தின் பொருட்டு, नित्यं कल्पतां—எப்பொழுதும் ஸமர்த்தமுடையதாக ஆகட்டும்.

(வி—ரை) இந்தக் கிரந்தத்தை, ஆசிரியர், ஸர்வலக்ஷணங்களும், கட்டழகும் பொருந்திய ஒரு யுவதிக்கு ஒப்பிடுகின்றார். யுவதியே காமகலே. அவளது சிருங்காரரஸ ஜனகமான நோக்கமே விலாஸமாகும். "விலாஸமாகும் யுவதியின் வீக்ஷணத்திற்கு அபரமன்மதனே யெரித்த பரமேஸ்வரனது ஹ்ருதயத்தை யாகர்ஷித்துப் பிரஹ்மாநந்த சிருங்காரரஸாம்புதியில் தோயும் உத்ஸாஹத்தை யுண்டு பண்ணும் அழிவில்லாத சிறந்த ஆற்றல் உண்டாகட்டும்" என்பது ஆசிரியரின் வாழ்த்து.

காமகலே = சுத்தப்பிரஹ்மத்தின் அவிநாபூத விமர்ஶ சக்தியாகும் அங்கனே. "முக்தி காந்தை" என்று சாஸ்திரங்கள் கூறுவது அறியத்தக்கது. பரப்பிரஹ்மம் தனது ரமணத்தின் பொருட்டுத் தனது அர்த்த (பாதி) அம்சமாகும் வாமபாகத்திலிருந்து காமகலே யென்னும் ஒரு போக சக்தியைக் கற்பித்து அதைப் பரமபிரீதியோடு பார்த்தது. அப்பொழுது ஸ்வஸ்வரூப ஆநந்தம் வெளிப்பட்டது. காதல் தன்மையோடு பார்த்தகாரணத்தால் பரசிவத்துக்கு விடபுருஷனென்னும் பெயரேற்பட்டது. விடபுருஷனது சிருங்காரரஸமயமான மனப்பான்மைக்கு भाव மென்று

பெயர். இதன் உத்கர்ஷமே ஹர்ஷமாகும். இதுவே ஆநந்தோல்லாஸமாம். பரசிவத்தின் ஆநந்தோல்லாஸத்தின் பொருட்டு காமகலையென்னும் முக்திகாந்தையின் விலாஸங்கள் பேராற்றலுடையனவாய் விளங்கட்டும் என்பது திரண்டபொருளாம். பூர்வஜன்மங்களில் செய்த பெரும் புண்ணியத்தின் பயனாலேதான் காமகலாங்கனையின் விலாஸம் தோன்றும் என்னும் அர்த்தமும் தொனிப்பது அறியத்தக்கது.

இந்தக் கிரந்தத்தை ஸத்குருபால் சிரவணம் செய்து, இதன் தத்துவத்தை ஸந்தேஹ விபரீதங்களற நன்குணர்வதால், நித்தியாநந்தப் பெருவாழ்வாகும் மோக்ஷமுண்டாதல் நிச்சயம். இவ்விஷயம், முன், துரீயபாதத்தில் 8வது ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. (54)

கிரந்தாந்த மங்களாசரணம்.

चिन्तातरङ्गतरल-
स्तृष्णासलिलः प्रपञ्चवाराशिः ।
यदनुग्रहेण तीर्ण-
स्तस्मै श्रीनाथनाविकाय नमः ॥ ५५ ॥

(ப-ரை) **चिन्तातरङ्गतरलः** —சஞ்சலஸ்வபாவமுள்ள ஸங்கல்பங்களாகும் அலைகளோடுகூடியதும், **तृष्णासलिलः** —பேராசையென்னும் ஜலம் நிறைந்ததுமான, **प्रपञ्चवाराशिः** —பிரபஞ்சமென்னும் பெருங்கடலானது, **यदनुग्रहेण तीर्णः** — எந்தவொரு மஹாநுபாவரது கடைக்கண் பார்வையால் கடக்கப்பட்டதாயிற்றோ, **तस्मै श्रीनाथनाविकाय** — அந்த ஸத்குரு ஸ்வரூப படகோட்டியின் பொருட்டு, **नमः** —நமஸ்காரம்.

(வி--ரை) பிரபஞ்சமென்னும் பெருங்கடலே ஜனன மரணவடிவ ஸம்ஸாரபந்தமாகும். போக்தா, போக்கியம், போகமென்னும் திரிபுடித்தோற்றத்தால் பேததிருஷ்டியும், அதனல் விருப்பு வெறுப்புக்களும், அவற்ருல் பிரவ்ருத்தி நிவ்ருத்திகளும், ஸுகதுக்கங்களும் ஏற்படுகின்றன; ஆகலின் பிரபஞ்சமே அபார ஸம்ஸாரமாம். ஆசையென்னும் காமமே ஜலமாகும். அதிசஞ்சலமான மனேவ்ருத்திகளே ஸம்ஸாரஸாகரத்தின் அலைகள்.

இத்தகைய ஸம்ஸாரப் பெருங்கடலில் மூழ்கித் தவிக்கும் ஜீவர்களைத் தனது அநுக்கிரஹமாகும் படகில் ஏற்றிக் கரைசேர்ப்பிக்கும் படகோட்டியே ஸத்குருவாவர். இவரது அருளில்லாமல் ஜனன மரணரூப ஸம்ஸாரபந்தம் நீங்காது. ஆதலின் ஸத்குரு பாதுகைகளுக்குப் பலகோடி நமஸ்காரம். (55)

உரையாசிரியரது மங்களம்.

साधकजनसंतुष्ट्यै श्रीकामकलाङ्गनाविलासस्य ।
व्याख्याऽनन्दोल्लासो रचितो गुहनाथपादुकाकृपया ॥

ஸ்ரீ காம கலா விலாஸம்
ஆநந்தோல்லாஸம்
ஆநந்தபாதத்தோடு
நூல் முற்றிற்று.

விசேஷக் குறிப்பு.

பக்கம் 133ல் ஒவ்வொரு ஆவரணத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைப்பற்றி, என்னால் இயற்றப்பட்ட ஸ்ரீவித்தியா ஸபர்யாபத்ததி, ஸபர்யாபத்ததி வாஸனாவிமர்சம் என்னும் நூல்களைப் பார்க்கவும். அவற்றுள் கூறப்படாத தத்துவம், ஸ்தாயீபாவம், பிரதான ரஸம் முதலியவை இங்கே கூறப்படுகின்றது.

ஆவரணம்.	தத்துவம்.	ஸ்தாயீ பாவம்.	பிரதான ரஸம்.
1	பிரிதிவி	ரதி	சிருங்காரம்
2	சந்திரன்	உத்ஸாஹம்	வீரம்
3	அஷ்டமூர்த்தி	சோகம்	கருணம்
4	மஹாமாயை	பயம்	பயானகம்
5	தசாவதாரம்	ஜுகுப்ஸை	பீபத்ஸம்
6	வைஶ்வாநரன்	குரோதம்	ரௌத்திரம்
7	ப்ரக்ருதி	ஹாஸம்	ஹாஸ்யம்
8	குணத்திரயம்	விஸ்மயம்	அத்புதம்
9	பிரஹ்மம்	சமம்	சாந்தி

श्लोकसूची ।

॥ श्रीः ॥

॥ मन्त्रमातृकापुष्पमाला ॥

कल्लोलोल्लसितामृताब्धिलहरीमध्ये विराजन्मणि-
द्वीपे कल्पकवाटिकापरिवृते कादम्बवाट्युज्ज्वले ।
रत्नस्तम्भसहस्रनिर्मितसभामध्ये विमानोत्तमे
चिन्तारत्नविनिर्मितं जननि ते सिंहासनं भावये ॥ १ ॥

एणाङ्कानलभानुमण्डललसच्छ्रीचक्रमध्ये स्थितां
बालार्कद्युतिभासुरां करतलैः पाशाङ्कुशौ बिभ्रतीम् ।
चापं बाणमपि प्रसन्नवदनां कौसुम्भवस्त्रान्वितां
तां त्वां चन्द्रकलावतंसमकुटां चारुस्मितां भावये ॥ २ ॥

ईशानादिपदं शिवैकफलकं रत्नासनं ते शुभं
पाद्यं कुङ्कुमचन्दनादिभरितैरर्घ्यं सरत्नाक्षतैः ।
शुद्धैराचमनीयकं तव जलैर्भक्त्या मया कल्पितं
कारुण्यामृतवारिधे तदखिलं संतुष्टये कल्पताम् ॥ ३ ॥

लक्ष्ये योगिजनस्य रक्षितजगज्जाले विशालेक्षणे
प्रालेयाम्बुपटीरकुङ्कुमलसत्कर्पूरमिश्रोदकैः ।
गोक्षीरैरपि नारिकेळसलिलैः शुद्धोदकैर्मन्त्रितैः
स्नानं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ४ ॥

ह्रींकाराङ्कितमन्त्रलक्षिततनो हेमाचलात्संचितै
रत्नैरुज्ज्वलमुत्तरीयसहितं कौसुम्भवर्णांशुकम् ।
मुक्तासंततियज्ञसूत्रममलं सौवर्णतन्तूद्भवं
दत्तं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ५ ॥

हंसैरप्यतिलोभनीयगमने हारावलीमुज्ज्वलां
हिन्दोळद्युतिहीरपूरिततरे हेमाङ्गदे कङ्कणे ।
मञ्जीरौ मणिकुण्डले मकुटमप्यर्धेन्दुचूडामणिं
नासामौक्तिकमङ्गुलीयकटकौ काञ्चीमपि स्वीकुरु ॥ ६ ॥

सर्वाङ्गे घनसारकुङ्कुमघनश्रीगन्धपङ्काङ्कितं
कस्तूरीतिलकं च फालफलके गोरोचनापत्रकम् ।
गण्डादर्शनमण्डले नयनयोर्दिव्याञ्जनं तेऽञ्चितं
कण्ठाब्जे मृगनाभिपङ्कममलं त्वत्प्रीतये कल्पताम् ॥ ७ ॥

कल्हारोत्पलमल्लिकामरुवकैः सौवर्णपङ्केरुहै-
र्जातीचम्पकमालतीवकुळकैर्मन्दारकुन्दादिभिः ।
केतक्या करवीरकैर्बहुविधैः क्लृप्ताः स्रजो मालिकाः
संकल्पेन समर्पयामि वरदे संतुष्टये गृह्यताम् ॥ ८ ॥

हन्तारं मदनस्य नन्दयसि यैरङ्गैरनङ्गोज्ज्वलै-
र्यैर्भृङ्गावलिनीलकुन्तलभरैर्बध्नासि तस्याशयम् ।
तानीमानि तवाम्ब कोमलतराण्यामोदलीलागृहा-
ण्यामोदाय दशाङ्गगुग्गुलुघृतैर्धूपैरहं धूपये ॥ ९ ॥

लक्ष्मीमुज्ज्वलयामि रत्ननिवहोद्भास्वत्तरे मन्दिरे
मालारूपविलम्बितैर्मणिमयस्तम्भेषु संभावितैः ।
चित्रैर्हाटकपुत्रिकाकरधृतैर्गव्यैर्घृतैर्वर्धितै-
र्दिव्यैर्दीपगणैर्धिया गिरिसुते संतुष्टये कल्पताम् ॥ १० ॥

ह्रींकारेश्वरि तप्तहाटककृतैः स्थालीसहस्रैर्भृतं
दिव्यान्नं घृतसूपशाकभरितं चित्रान्नभेदं तथा ।
दुग्धान्नं मधुशर्करादधियुतं माणिक्यपात्रे स्थितं
माषापूपसहस्रमम्ब सफलं नैवेद्यमावेदये ॥ ११ ॥

सच्छायैर्वरकेतकीदलरुचा ताम्बूलवल्लीदळैः
पूगैर्भूरिगुणैः सुगन्धिमधुरैः कर्पूरखण्डोज्ज्वलैः ।
मुक्ताचूर्णविराजितैर्बहुविधैर्वक्त्राम्बुजामोदनैः
पूर्णा रत्नकळाचिका तव मुदे न्यस्ता पुरस्तादुमे ॥ १२ ॥

कन्याभिः कमनीयकान्तिभिरलंकारामलारार्तिका
पात्रे मौक्तिकचित्रपङ्क्तिविलसत्कर्पूरदीपाळिभिः ।
तत्तत्ताळमृदङ्गगीतसहितं नृत्यत्पदाम्भोरुहं
मन्त्राराधनपूर्वकं सुविहितं नीराजनं गृह्यताम् ॥ १३ ॥

लक्ष्मीर्मौक्तिकलक्षकल्पितसितच्छत्रं तु धत्ते रसा-
दिन्द्राणी च रतिश्च चामरवरे धत्ते स्वयं भारती ।
वीणामेणविलोचनाः सुमनसां नृत्यन्ति तद्रागव-
द्भावैराङ्गिकसात्त्विकैः स्फुटरसं मातस्तदालोक्यताम् ॥ १४ ॥

ह्रींकारत्रयसंपुटेन मनुनोपास्ये त्रयीमौलिभि-
वाक्यैर्लक्ष्यतनोस्तव स्तुतिविधौ को वा क्षमेताम्बिके ।
संलापाः स्तुतयः प्रदक्षिणशतं संचार एवास्तु ते
संवेशो नमसः सहस्रमखिलं त्वत्प्रीतये कल्पताम् ॥ १५ ॥

श्रीमन्त्राक्षरमालया गिरिसुतां यः पूजयेच्चेतसा
सन्ध्यासु प्रतिवासरं सुनियतस्तस्यामलं स्यान्मनः ।
चित्ताम्भोरुहमण्टपे गिरिसुता नृत्तं विधत्ते रसा-
द्वाणी वक्त्रसरोरुहे जलधिजा गेहे जगन्मङ्गला ॥ १६ ॥

इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनीयं निबद्धा
मदयतु कविभृङ्गान्मातृकापुष्पमाला ॥ १७ ॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य-
श्रीशंकरभगवत्पादाचार्यप्रणीता
श्रीमन्त्रमातृकापुष्पमालाख्या
नित्यमानसपूजास्तुतिः
संपूर्णा ॥

BOOKS BY THE SAME AUTHOR

TAMIL

1. Srividya Saparya Vasana	...	3	0
2. Subrahmanya Tatvam	...	1	8
3. Kamakala Vilasa	...	1	8
4. Varivasya Rahasyam	...	1	0
5. Lalita Trisati Bhashyam	...	1	0
6. Srinagara Vimarsam	...	0	12
7. Maneesha Panchakam	...	0	10
8. Gnanaprakasam—A Philosophic Drama	...	0	10
9. Gurutatva Vimarsam	...	0	5
10. Lalitopakhyana Vimarsam	...	0	4

NAGARI

11. Srividya Saparya Paddhati			
Single-page Edition, Calico-bound	...	3	8
Double-page ,, Stiff-board bound	...	2	0
12. Srividya Nityahnika (Calico-bound)	...	3	0

ENGLISH

13. Srividya Saparya Vasana	...	3	0

Copies can be had of:—

1. Sri Guhananda Mandaly,
   178, Lloyds Road, Royapettah, Madras.
2. Sri Balamanorama Press, Mylapore, Madras.
3. Sri Janardhana Printing Works Ltd., Kumbakonam.